ஏப்ரல் 09 - 15, 2006 October 09 -15, 2006 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



## முழு வீச்சுடன் முஸ்லிம் பட்டாலியன்

## பாக். விஜயம் பயன் தருமா?

## கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு பெருவெற்றி

# ஜெனிவாப் பேச்சு இறுதிப் பேச்சா?

# முழுவீச்சுடன் 'முஸ்லிம் பட்டாலியன்'

ஜிஹாத் என்னும் பெயர் கொண்ட முஸ்லிம் தீவிரவாத அமைப்பொன்று இயங்கிவருகிறது என்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் குற்றச்சாட்டின் மீதான வாதப்பிரதிவாதங்கள்ஓய்வதற்கு முன் 'முஸ்லிம் பட்டாலியன்' என்ற புயல் அம்பாறையில் மையம் கொண்டு வீச ஆரம்பித்துள்ளது. அது வேகம் கொண்டு முழுவீச்சுடன் வீசத்தொடங்கியதும் இலங்கையின் இனப்பிரச்சினையில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது.

**முஸ்லிம் பட்டாலியன்**

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சகோதரரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோதாபய ராஜபக்ஷவுடன் மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தானுக்குச் சென்றிருக்கிறார். அங்கு அவர் இங்குள்ள பாதுகாப்புப் படைகளை பலப்படுத்துவதற்கான பாதுகாப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட உள்ளார் என்று தெரியவருகின்றது.

இந்தப் பின்புலத்தில் தான் இலங்கை இராணுவத்தில் தனியான 'முஸ்லிம் பட்டாலியன்' ஒன்று தமிழர் தாயகமான கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தை மையமாகவைத்து இலங்கை படைத்தரப்பால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருபது வருடங்களுக்கு முன்னர் அந்நாள் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியால் இந்த யோசனை முதலில் முன்வைக்கப்பட்டது. அவர் அப்போது கிழக்கில் அமைந்திருந்த இராணுவத் தலைமைப் பீடத்திடம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்புடன் இது குறித்து பேச்சு வார்த்தை நடத்தமாறு கோரியிருந்தார். அத்துடன் தனது யோசனைக்கு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆசீர்வாதத்தையும் அங்கீகாரத்தையும் பெறும் பொருட்டு அவரை அணுகிய போது அவர் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்.

இப்பொழுது இந்த யோசனை புத்துயிர் பெற்று எழுந்துள்ளது. குறிப்பிட்ட முஸ்லிம் பட்டாலியனுக்கு ஆள் திரட்டும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டதென்றும் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை இது தொடருமென்றும் இராணுவப்பேச்சாளரான பிரிகேடியர் பிரசாத் அமரசிங்க தெரிவித்திருக்கிறார்.

**ஏன் இந்த பட்டாலியன்?**

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமங்கள் அடிக்கடி தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்குள்ளாவதாக தெரிவித்திருக்கும் பிரிகேடியர் அமரசிங்க அம்மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் கிராமங்களை பாதுகாப்பதற்கு இந்த பட்டாலியன் பயன்படுத்தப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

இந்த பட்டாலியனுக்கு ஆட்களைத் திரட்டுவதற்காக நடமாடும் பிரிவுகள் அம்பாறையிலுள்ள முஸ்லிம் கிராமங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அதில் இணைந்து கொள்வதற்கு ஆர்வமுடையோர் அம்பாறை கொண்டுவட்டுவானிலுள்ள இராணுவ பயிற்சி கல்லூரிக்கு சென்று தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஒருபட்டாலியனில் 500 முதல் 800 முஸ்லிம் சிப்பாய்கள் இருப்பரென்றும் இது முற்றுமுழுதாக முஸ்லிம்களையே கொண்டிருக்குமென்றும் தெரியவருகின்றது.

**அக்பர் படை**

இந்த பட்டாலியனுக்கு 'அக்பர் படை',என்று பெயர் சூட்டப்படலாம் என்ற ஆலோசனையும் முன் வைக்கப்பட்டுள்ளதாம். ஆனால் அக்பர் சக்கரவர்த்தி பிறப்பால் முஸ்லிமாக இருந்த போதும் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இராச்சியத்துக்கே அவர் சக்கரவர்த்தியாக இருந்ததால் இந்துக்களுக்கு சார்பாகவே நடந்து கொண்டாராம். இதனால் முஸ்லிம்களின் எதிர்ப்பை சம்பாதித்து கொண்டார் அவர்.

ஆகையால் அவரது பெயரை இந்த பட்டாலியனுக்கு சூட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து புதிய பெயரொன்றை வைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

**இரண்டாகும் இன ஒற்றுமை**

முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு, 500 முஸ்லிம் இளைஞர்களை பொலிஸ்படையில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்துக்கு முஸ்லிம் தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டு வந்துள்ளது. அதைத் தொடர்ந்து ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் இதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டது. ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் இத்திட்டத்திற்கான பலத்த எதிர்ப்பைத் தொடர்ந்து அது கை விடப்பட்டது.

இப்போது மீண்டும் உத்வேகம் பெற்றுள்ள இத்திட்டம் குறிப்பாக கிழக்கில் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல ஒன்றாக வாழ்ந்து வரும் தமிழ் முஸ்லிம் மக்களிடையில் நிலவும் நெருக்கமான உறவை சீர்குலைக்கும் என அஞ்சப்படுகிறது. அது மட்டுமின்றி சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் தம் மீதான பேரினவாத அடக்குமுறைக்கு எதிராக ஒன்று பட்டு கிளர்ந்தெழுந்து விடலாம் என்ற சிங்களத்தின் அச்சமே இந்தப் பிரித்தாளும் திட்டத்துக்கான ஆணிவேராகும் எனவும் கூறப்படுகிறது.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே மோதலை உருவாக்குவதன் மூலம் ஸ்ரீலங்காவை முற்று முழுதாக சிங்கள மயப்படுத்தும் தனது நீண்ட நாள் திட்டத்தை லாவகமாக அரங்கேற்றி விடலாம் என பேரினவாதம் கனவுகாண்கிறது.

**ஜாதிக ஹெல உறுமயவும் எதிர்க்கின்றது**

பேரினவாதத்தின் இந்தத் திட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து மட்டுமல்ல சிங்களத்தின் பாதுகாவலன் என தன்னை பறைசாற்றிக் கொள்ளும் ஜாதிக ஹெல உறுமயவின் பலத்த எதிர்ப்பையும் சம்பாதித்து கொண்டுள்ளது.

முற்று முழுதாக இன அடிப்படையில் நாட்டை மேலும் துண்டாடுவதற்கான ஒரு முயற்சியே இராணுவத்தில் தனியான முஸ்லிம் படைப்பிரிவை அமைக்கும் முயற்சியென ஜாதிக ஹெல உறுமய குரல் கொடுத்துள்ளது.

இன அடிப்படையில் தனியான முஸ்லிம் பிரிவொன்றை இராணுவத்தில் அமைப்பதற்கான தேவை எதுவும் எழவில்லை எனக் கூறியுள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரான எல்லாவல மேத்தானந்ததேரர் இராணுவத்தில் பல முஸ்லிம் அதிகாரிகளும் சிப்பாய்களும் இருந்துள்ளதுடன் பாதுகாப்புத்துறையில் கணிசமான பங்களிப்பையும் அவர்கள் செய்துள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

இராணுவத்தில் உள்ள அதிகாரிகளும், சிப்பாய்களும் இலங்கையர்களென்றே அடையாளப் படுத்தப்படவேண்டும் இன அடிப்படையில் அல்ல என்றும் கூறி அரசின் இந்த நடவடிக்கையை அவர் பலமாகக் கண்டித்துள்ளார்.

**தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை**

இனப் பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் தாம் தனித்தரப்பாக கலந்து கொள்ள வசதி செய்து தரவேண்டும் என்ற கோரிக்கையே முஸ்லிம் தலைவர்களால் இதுவரை வற்புறுத்தப்பட்டு வந்தது.

அவர்களின் கோரிக்கையை பரிசீலிக்க தயக்கம் காட்டிய அரசு இன்று இன்னும் ஒருபடி மேலே போய் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பளிக்கவெனக் கூறி முஸ்லிம் பட்டாலியன் ஒன்றையே நிறுவ முன்வந்துள்ளமை முஸ்லிம்களுக்கான பாதுகாப்பை சிதைக்குமேயன்றி அதிகரிக்கப் போவதில்லை.

அம்பாறையில் மட்டுமன்றி முஸ்லிம்களின் பாதுகாப்பு எங்கெல்லாம் அச்சுறுத்தலுக்குள்ளாகின்றதோ

**நேதாஜி**

அங்கெல்லாம் இந்த பட்டாலியன் பாதுகாப்பு நடவடிக்கையைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் பாதுகாப்பு ரீதியிலான அச்சுறுத்தலை இந்நாட்டில் முஸ்லிம் மக்கள் மட்டும் எதிர்நோக்கவில்லை. தமிழ் மக்களும் நீண்டகாலமாக பலமுனைகளிலும் இப் பிரச்சினைகளை எதிர்நோக்கியதன் விளைவாகத்தான் சிங்கள அரசாங்கங்களுக்கு எதிரான வன்முறை தமிழர் தரப்பில் இருந்து வெடித்தது.

அண்மைக் காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் இளைஞர் யுவதிகள் வெள்ளை வான்களில் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்படுவது அதிகரித்திருக்கிறது. அதனால் பெற்றோர் மத்தியில் அச்சநிலை அதிகரித்துள்ளது. இனந்தெரியாத கும்பல்களின் இவ்வாறான ஈவிரக்கமற்ற செயலைக் கண்டித்து கடந்த 21 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ் பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வாழைச்சேனையில் கடந்த 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர். பொதுமக்களை அச்சுறுத்தும் வகையிலேயே அத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இத்தகைய பிரச்சினைகளை தட்டிக்கழிக்கும் அரசாங்கம் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புப் பற்றி திடீரென நீலிக்கண்ணீர் வடிக்க ஆரம்பித்திருப்பது பசுத்தோல் போர்த்த புலியின் கபடத்தனத்தையே காட்டி நிற்கின்றது.

**எரிக் சொல்ஹெய்ம்**

இந்தப் பின்புலத்தில் நோர்வேயின் வெளியுறவு அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ் மக்களை துன்புறுத்தி வருவதாகவும் இதனால் அவர்கள் இந்தியாவை நோக்கி புலம் பெயர்வது வழமையாகி விட்டது எனவும் கூறி உண்மை நிலையைப் புட்டுக் காட்டியுள்ளார்.

'டெஹெல்கா' என்ற இந்திய சஞ்சிகைக்கு அளித்த செவ்வியொன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள சொல்ஹெய்ம் இலங்கை, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் தான் கூறுவதை உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

''ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கவோ, அல்லது தமிழ் மக்களுக்கு ஏதாவதொரு வழியில் தம்மையே தாம் ஆளக் கூடிய தன்னாட்சி உரிமையை வழங்கவோ சர்வதேச சமூகத்திடம் பரவலாக இணக்கம் காணப்படுகிறது.

அதேசமயம் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சியின் கீழ்தான் தீர்வு காணப்பட வேண்டும் என, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தோழமைக்கட்சிகளான ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் அவருக்கு கடுமையான அழுத்தம் கொடுத்து வருகின்றன''

இப்படி அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**பேரினவாதத்தின் திடசங்கற்பம்**

இவ்வாறு சர்வதேச சமூகம் சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறை பற்றியும், தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் பற்றியும் தெளிவாக தெரிந்து வைத்திருக்கும் களநிலையில்தான் முஸ்லிம்களுக்கான தனி ஆயுதப்படைப் பிரிவொன்றை உருவாக்குவதற்கான திட்டம் செயல்வடிவம் பெற்றுள்ளது.


மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் இலங்கையின் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி இனமுறுகலையும் தமிழர்-முஸ்லிம்கள் மத்தியில் பகை உணர்வையும் வளர்த்து பிரச்சினையை பூதாகாரமாக்கவே 'முஸ்லிம் பட்டாலியன்' புயல் வீச ஆரம்பித்துள்ளது போல் தெரிகிறது.

ஆயுத மோதலுக்குள் முஸ்லிம்களை இழுத்து இன நல்லுறவை தவிடுபொடியாக்கும் அரசாங்கத்தின் சதித்திட்டத்திற்கு முஸ்லிம் சமூகம் இரையாகுமேயானால் எதிர்காலம் நிச்சயம் அவர்களுக்கு ஏமாற்றமாகவே அமையும்.

எனவே முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்கான தனியான பட்டாலியன் பற்றி அடக்கி வாசிப்பதை நிறுத்தி மொழியாலும்நிலப்பரப்பாலும் ஒன்றுபட்ட தமிழ் இனத்துடன் சேர்ந்து போராடி தமது உரிமைகளை வென்றெடுப்பதே புத்திசாலித்தனமாகும். *



லலித் அத்துலத் முதலி



ஜே.ஆர்.ஜெயவர்த்தன



மஹிந்த ராஜபக்ஷ

> பேரினவாதத்தின் இந்த முஸ்லிம் பட்டாலியன் திட்டம் தமிழீழ விடுதலைப்புலிகளிடமிருந்து மட்டுமல்ல சிங்களத்தின் பாதுகாவலன் எனத் தன்னை பறைசாற்றிக் கொள்ளும் ஜாதிக ஹெல உறுமயவின் பலத்த எதிர்ப்பையும் சம்பாதித்து கொண்டுள்ளது.
>
> முற்று முழுதாக இன அடிப்படையில் நாட்டை மேலும் துண்டாடுவதற்கான ஒரு முயற்சியே இராணுவத்தில் தனியான முஸ்லிம் படைப்பிரிவை அமைக்கும் முயற்சியென சிஹல உறுமய குரல் கொடுத்துள்ளது.

# ஜெனிவாப் பேச்சு இறுதிப் பேச்சா?

இப்படிப் பல கேள்விகளின் மத்தியில் ஜெனிவாவில் ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே





எதிர்வரும் 19ஆம் திகதி பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இப்பேச்சு இறுதிப் பேச்சாக அமைந்து விடும் அறிகுறிகளே விரவிக் கிடக்கின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் 22ஆம் 23ஆம் திகதிகளில் சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனிவா நகரில் விடுதலைப் புலிகளும் அரசுத் தரப்பினரும் சந்தித்துப் பேசினர். அதன் முடிவில் அடுத்த கட்டப் பேச்சுக்கான திகதி ஏப்ரல் 19 முதல் 21 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், அத் தினங்களில் நடக்கப் போகும் இரண்டாம் கட்டப் பேச்சின் போது அடுத்த 3ஆம் கட்டப் - பேச்சுக்கான திகதிகள் நிர்ணயிக்கப்படும் சாத்தியம் இல்லையென்றே கருதப்படுகின்றது.

முதற்கட்டப் பேச்சின் போது இணக்கப்பாடு எட்டப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு அரசுத் தரப்பில் ஆர்வம் காட்டப்படாததால், தொடர்ந்து பேச்சுகளில் பங்குபற்றுவதில் அர்த்தம் இல்லை என்ற முடிவுக்கு விடுதலைப் புலிகள் வந்துள்ளனர். அத்துடன், அரசினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளால் அரசுமீது அவநம்பிக்கையும் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவது -

வடக்கு - கிழக்கில் இருந்து ஒட்டுக்குழுக்களை ஆயுதங்களைக் களைந்து அகற்றுவது -

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் போராளிகள் அரசியல் பணிகளை மேற்கொள்வது -

போன்ற விடயங்கள் குறித்து இரு தரப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று எட்டப்பட்டிருந்தது.

பேச்சுகள் முடிவடைந்து அடுத்த கட்டப் பேச்சுக்கு ஒருவாரமே இருக்கின்ற நிலையில் கூட - இணக்கம் காணப்பட்ட எந்த விடயமும் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

ஒட்டுக்குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன. படையினரும் ஒட்டுக் குழுக்களும் இணைந்து கொலைகள், ஆள்கடத்தல், புலிகளின் நிலைகள் மீது தாக்குதல் எனத் தமது செயற்பாடுகளைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. விடுதலைப் புலி உறுப்பினர்கள், அவர்களது ஆதரவாளர்கள் என 20 பேருக்கும் மேல் கொல்லப்பட்டுள்ளனர். பலர் கடத்தப்பட்டுள்ளனர்.

ஜெனிவாவில் காணப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த அரசு முன்வராத காரணத்தால் இந்த நிலை தோன்றியுள்ளது. இனியும் அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்காது விட்டால் நிலைமை மோசமாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் போராளிகள் அரசியல் பணிகளை மேற்கொள்ளக் காணப்பட்ட இணக்கப்பாடும் படையினரின் நிபந்தனைகளால் செயலிழந்து போயுள்ளது. படைத்தரப்பினர் 28 நிபந்தனைகளை விதித்து, அந்த நிபந்தனைப்படி பணியாற்ற விடுதலைப் புலிகள் விரும்பினால் அரசியல் பணியை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்து விட்டனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் தகவலை விடுதலைப் புலிகள் விடுத்த கையோடு, அவர்கள் முன்னர் அலுவலகம் நடத்திய இடங்களைச் சுற்றிவளைத்து தேடுதல்களை கூடப் படையினர் நடத்தியுள்ளனர்.

ஜெனிவாவில் அரசும் - விடுதலைப் புலிகளும் பேச்சில் ஈடுபட்டுள்ள அதேநேரம், களத்தில் மக்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் படையினர், புலிகளைத் தேடும் வேட்டை ஒன்றை ஆரம்பித்துள்ளனரா என்ற சந்தேகம் எழுகின்றது.

மாவீரர் தினம், அன்னை பூபதி நினைவுதினம், திலீபன் நினைவுதினம் போன்றவற்றில் முன்னின்று செயற்பட்டவர்களைத் தேடிக் கைதுசெய்யும் நடவடிக்கை தீவிரமாகியுள்ளது. இந்தச் செயற்பாட்டின் மூலம் மக்களுக்கும் - படையினருக்கும் இடையில் பெரிய விரிசல் ஏற்பட்டு வருகின்றது. படையினரின் செயற்பாடுகள் சமாதான சூழலில் இருந்து மக்களை அந்நியப்படுத்தும் வகையில் அமைகின்றன.

இத்தகைய சூழலில் ஜெனிவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்கும் பேச்சாகவே இரண்டாம் கட்டப் பேச்சு அமையப்போகின்றது.

தெற்கில் பேரினவாதிகளின் கூச்சல்களுக்கு அடிபணிந்து ஜெனிவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்பாமல் இருக்கலாம். அந்த இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தா விட்டால் ஏற்படப்போகும் விளைவுகளை ஒருகணம் ஜனாதிபதியும் அவரது சகபாடிகளும் சிந்திப்பது அவசியமாகும்.

ஜெனிவா பேச்சு முடிவடைந்து கொழும்பு திரும்பியவுடன் ஜெனிவாவில் பேசி ஏதோ பெரிய சாதனை செய்துவிட்டோம் என்று அரசுப் பேச்சுக்குழுவினர் தெரிவித்துவந்தனர்.

யுத்த நிறுத்த உடன்பாட்டில் திருத்தம் ஏற்படுத்திவிட்டோம் என்று கூக்குரல் இட்ட அரச தரப்பினர், பேச்சு நடந்து ஒருமாதம் முடிவடைந்தும் கூட, ஜெனிவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை ஏன் நடைமுறைப் படுத்தவில்லை?





அங்கு காணப்பட்ட இணக்கப்பாட்டை ஒருதரப்பான விடுதலைப் புலிகள் பற்றுறுதியுடன் கடைப்பிடித்துவரும் நிலையில், அரசுத் தரப்பு மட்டும் எதையும் நடைமுறைப்படுத்தாது வாளாவிருப்பது ஏன் என்று மக்கள் கேட்கிறார்கள்.

ஜெனிவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்த பேரினவாத சக்திகள் தடையாக இருந்தன எனக் கூறினாலும், இப்போது உருவாகியுள்ள புதிய சூழலில் அரசு விரைந்து செயற்பட வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலில் கிட்டிய வெற்றியைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ஜெனிவாவில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தலாம் என காலத்தை இழுத்தடிக்க அரசுத் தலைமை முடிவு செய்யுமானால், நாட்டில் குழப்பமான சூழல் உருவாகும்; பேச்சுகளும் தடைப்படும்.

ஜெனிவா இணக்கப்பாட்டை அரசு நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்காதுவிட்டால், அடுத்த கட்டப் பேச்சு ஒரு தரப்பின் பேச்சு மேசையாகத்தான் இருக்கப் போகின்றது.

அரசின் போக்கில் அவநம்பிக்கையுடன் இருக்கும் விடுதலைப் புலிகள், தமது தரப்பின் நியாயப்பாட்டை நோக்கி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஜெனிவா பேச்சுவார்த்தை மேடையைப் பயன்படுத்தக் கூடும்.

பேச்சுகளில் இருந்து வெளிநடப்புச் செய்து, அரசின் அசமந்தப் போக்கை அம்பலப்படுத்தலாம்.

அரசின் செயற்பாட்டால் சீற்றமடைந்துள்ள விடுதலைப் புலிகள், இணக்கப்பாட்டை அரசுத்தரப்பு நடைமுறைப்படுத்த முடியாத காரணங்களைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் எனக் கோரலாம்.

பேச்சுகள் மூலம் தீர்வு காண தாங்கள் தயாராக இருக்கும்போது, அரசுத்தரப்பு விரும்பத்தகாத வகையில் செயற்படுவதால், பேச்சுகளில் இருந்து விலகிக் கொள்கிறோம் என விடுதலைப் புலிகள் கூறலாம்.

மொத்தத்தில், ஜெனிவா இணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தாத அரசின் போக்கைச் சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்தும் மேடையாக இரண்டாம் கட்டப் பேச்சைப் புலிகள் பயன்படுத்தப்போகின்றார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு கால அவகாசம் கோரும் போக்கு அரசுத் தரப்பில் காணப்பட்டால் புலிகள் பேச்சுகளை இடைநிறுத்த முடிவு செய்யலாம். அவ்வாறு பேச்சுகள் இடைநிறுத்தப்படும் பட்சத்தில் மீளவும் பேச்சுகள் உடனடியாக ஆரம்பிக்கும் வாய்ப்புகள் குறையலாம்.

அவ்வாறு பேச்சுகள் இடைநிறுத்தப் படுமானால், களத்தில் நிலைமை மோசமடையும். அதன் மூலம் யுத்தநிறுத்த சூழலைத் தக்க வைக்க முடியாது போகலாம்.

பாகிஸ்தானில் இருந்து திரும்பிய கையோடு ஜனாதிபதி அதிரடி நடவடிக்கையாக களத்தில் மாற்றங்கள் ஏற்படக் கூடிய வகையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். ஜெனிவா இணக்கப்பாட்டில் காணப்பட்ட விடயங்களில் ஒருசிலவற்றையாவது நடைமுறைப்படுத்தி நல்லெண்ணசமிக்ஞையை வெளிப்படுத்த வேண்டும்.

இல்லையேல் 2ஆம் கட்டப் பேச்சு இறுதிப் பேச்சாகவே அமையப் போகின்றது. பச்சைக் கொடி காட்டி புறப்பட்ட சமாதான ரயிலை சிவப்புக் கொடி காட்டி நிறுத்த முனைவதால் பயன் கிட்டமாட்டாது. இதுதான் இன்றைய யதார்த்த நிலையாகும்.

எதிரும் புதிருமான பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சென்றுள்ள பிரதான கட்சிகளின் தலைவர்கள் நாடு திரும்பிய கையோடு, இணைந்து உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதில்தான் நாட்டின் தலைவிதி தங்கியுள்ளது. இருவரும் இணைந்து நடவடிக்கைகளை எடுப்பார்களா? அல்லது சமாதானத்துக்கு விடை கொடுத்து யுத்தத்துக்கான வாசலைத் திறக்கப் போகின்றார்களா?

இவைதான் இன்று எழுப்பப்படும் கேள்விகளாகும். இதற்கான பதில் அடுத்து வரும் வாரங்களில் கிட்டும்.


**சுடர்ஒளி தினசரி / வாரமலர் விளம்பர கட்டணங்கள்**

| பத்திரிகை | முழுப்பக்கம் | | அரைப்பக்கம் | | கால்பக்கம் | | Col Cm | | Special Rate | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கலர் | கறுப்பு/ வெள்ளை | கலர் | கறுப்பு/ வெள்ளை | கலர் | கறுப்பு/ வெள்ளை | கலர் | கறுப்பு/ வெள்ளை | கலர் | கறுப்பு/ வெள்ளை |
| சுடர்ஒளி தினசரி | ரூ. 47,000/- | ரூ. 2[illegible],000/- | ரூ. 27,000/- | ரூ. 16,200/- | ரூ. 13,500/- | ரூ. 8,100/- | ரூ. 100/- | ரூ. 60/- | ரூ. 85/- | ரூ. 45/- |
| சுடர்ஒளி வாரமலர் | ரூ. 45,000/- | ரூ. 30,[illegible]0/- | ரூ. 23,250/- | ரூ. 15,680/- | ரூ. 11,760/- | ரூ. 7,840/- | ரூ. 147/- | ரூ. 98/- | ரூ. 122/- | ரூ. 75/- |

★ தொடர்ச்சியான 2500 Col Cm (Contract) ஒப்பந்த விளம்பரங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

★ முன்பக்க விளம்பரங்களுக்கு 50%மும், மற்றைய குறிப்பிட்ட பக்கங்களுக்கு 25%மும் மேலதிகமாக அறவிடப்படும்.

# அரசின் முத்திரையை கிழிக்க போதும் அடுத்த கட்டப் பேச்சு!

அடுத்த வாரம் இரண்டாம் கட்ட பேச்சுகள் அரசு மற்றும் புலிகள் தரப்பினரிடையே தொடங்கவிருக்கிறது. இதுதான் மஹிந்த அரசுடனான கடைசிச் சந்திப்பாக இருக்கும் என சில அரசியல் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். எனினும் அது எப்படி அமையப் போகிறது என்பதை சமகாலச் சம்பவங்களுடன் நோக்கும் போது ஓரளவு புரிந்துகொள்ளக் கூடியதாகத்தான் இருக்கிறது.

கடந்த பேச்சுகளுக்கு முன்னதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழர் தரப்பு தனக்கு ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் தன்னை நம்புமாறும் 'சுடர் ஒளி'க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். கடந்த மாவீரர் தின உரையின் போது தலைவர் பிரபாகரன் அவர்கள், புதிய சிங்களத் தலைவருக்கு வாய்ப்பு ஒன்றை வழங்கத் தயார் என்றும் அதற்கு சிங்களத் தலைமை தவறினால் அடுத்த ஆண்டில் விடுதலைப்போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்திருந்தார். அந்த வகையில் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கும், கிளிநொச்சிக்கும் மேற்கொண்ட விஜயத்தின் பயனாக ஜெனிவா பேச்சுகளுக்கு புலிகள் இணங்கியிருந்தனர்.

இதன்படி தொடர்ச்சியாக இடம் பெற்று வந்த கிளைமோர் குண்டுவெடிப்புகள்நின்றுபோயின. படையினரின் பதிலடிகளும் வன்முறைகளும் குறைந்தன. ஜெனிவாவில் பேச்சுகள் கடந்த பெப்ரவரி 22ஆம் திகதி தொடங்கியது. அந்தப்பேச்சுகளின் முடிவில் இராணுவ ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து இராணுவத்தினர் தவிர எனைய குழுக்களின் நடவடிக்கைகளை நிறுத்துவதென அரசு இணக்கம் கண்டது. அதே போல் புலிகள் தரப்பும் அரச படைகள் மீது தாக்குதல் நடத்துவதில்லை என இணங்கியிருந்தது. இவ்வாறு இணக்கம் கண்டவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என நோர்வேத் தரப்பு இரு தரப்பையும் கேட்டிருந்தது.

இந்த நிலையில் ஜெனிவா பேச்சுகளின் பின்னர் இணக்கம் கண்டவற்றை இரு தரப்பும் எவ்வளவு தூரம் நடைமுறைப்படுத்தின என்பதே இங்கு கேள்விக் குறியாகியுள்ளது.

இங்குதான் விவகாரமே தொடங்குகிறது. புலிகளைப்பொறுத்த வரை அவர்கள் படைத்தரப்பினர் மீது எந்தவிதமான தாக்குதலை மேற்கொண்டதாகவும் ஆதாரபூர்வமாக எங்கும் கூறப்படவில்லை. எனினும் கற்பிட்டி கடற்பரப்பில் படைத்தரப்பினரின் டோறா படகு தாக்கியழிக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். ஆனால் படைத் தரப்பினரைப்பொறுத்த வரை முதலாவது முக்கிய பிரச்சினையான ஒட்டுப்படைகளின் ஆயுதங்களைக் களைவது என்ற பேச்

**ஷோபா**

சுக்கே இடமின்றி நடந்து வருவதுடன் புலிகள் மீதான தாக்குதல்களை ஒட்டுக்குழுக்கள் மூலம் மேற்கொள்ளவும் தவறவில்லை. கிழக்கில் தொடர்ச்சியாக புலிகள் நிலைகள் மீது பல தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில் புலிகளின் தரப்பு உறுப்பினர்கள் ஒரிருவர் உயிரிழந்ததுடன் பல உறுப்பினர்கள் காயமடைந்துமுள்ளனர். அதேவேளை வடக்கு வவுனியா பகுதியில் பல வர்த்தகர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவை கூட ஒட்டுக்குழுக்களின் வேலை என்பதில் சந்தேகம் இல்லை. படைத்தரப்பு ஒட்டுக்குழுக்களை கிழக்கில் மட்டுமன்றி வடக்குக்கும் நகர்த்தி வருகின்றமை தெளிவாகின்றது. புலிகள் தரப்பின் இதயப்பகுதியான வன்னி நோக்கி படைத்தரப்பு ஒட்டுக் குழுக்களை நகர்த்தியுள்ளமை அரசு பேச்சுகளில் நம்பிக்கையின்றி உள்ளது என்பதையே காட்டுகிறது.

அது மட்டுமன்றி இராணுவ உயர்வட்டாரங்கள் தரும் தகவலின்படி யுத்தத்துக்குத் தயார் என்றும் புலிகளுடன் பேசுவதில் அர்த்தமில்லை என்றும் கருத்து வெளியிட்டுள்ளன. இதே கருத்தையே மஹிந்த அரசும் கொண்டுள்ளது போல் தெரிகிறது. இதனால் அடுத்த சுற்றுப்பேச்சுடன் அனைத்தும் முடிவுக்கு வரக் கூடும்.

அதற்கு முன்னர் புலிகள் செய்யும் நடவடிக்கை என்னவாக இருக்கும்? அதுதான் தற்போதுள்ள கேள்வி. அதற்கு முன்னர் ஓய்வுபெற்றுச் செல்லும் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹெக்ருப் ஹெக்லன்ட் வெளியிட்ட கருத்துக்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. ஹெக்லன்ட் 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட பின்னர் கண்காணிப்புக் குழு செயற்படத் தொடங்கியது முதல் இங்கு பணியாற்றியிருக்கிறார். கள நிலைமைகளை இந்தக்கால கட்டத்தில் அவர் புரிந்திருக்கிறார் போலும்.

அவர்குறிப்பிட்ட அம்சங்களில் முதலாவது, கிழக்கிலும் வவுனியாவிலும் ஒட்டுக்குழுக்களை களின் செயற்பாடுகள் உள்ளன என உறுதிப்படுத்தியிருந்தார்.

அடுத்த அம்சம், விடுதலைப் புலிகள் அமைப்பு அல் குவைதா அமைப்பு போன்ற ஒரு பயங்கரவாத அமைப்பல்ல. அது சுதந்திரத்துக்காகப்போராடும் விடுதலை அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிரான போரில் இலங்கை இராணுவம் வெல்ல முடியாது. என்றும் அவர் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்துகள் புலிகளுக்குச் சாதகமான ஓர் அம்சமாகும்.


தமிழர் தரப்பின் பிரதான குற்றச்சாட்டான ஒட்டுக்குழுக்கள் பற்றிய குற்றச்சாட்டுக்கு வலுச் சேர்ப்பதாக கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவரின் கருத்து வந்துள்ளது. இதனால் இலங்கை அரசு சர்வதேச மட்டத்தில் கூறிவரும் சாக்குப்போக்குகள் இனி செல்லுபடியாகப் போவதில்லை. இதனால் அரசின் கருத்துகள் வலுவிழந்து போயுள்ளன.

அடுத்தது புலிகள் அமைப்பை அவர் விடுதலை அமைப்பு அதனை இலங்கை இராணுவத்தால் வெல்ல முடியாது எனக்கூறியுள்ளார். இந்தக்கருத்தை தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதி மஹிந்தவின் சகோதரருமான கோட்டபாய ராஜபக்ஷவிடம் தெரிவித்தாராம். இதற்கு கோட்டபாய ராஜபக்ஷ சீறிவிழுந்தாராம்.

மொத்தத்தில் ஹெக்லன்ட் கூறியிருப்பது இதுதான் யுத்த முனைப்பை விடுத்து நீதியான நியாயமான தீர்வு ஒன்றை தமிழர் தரப்பிற்கு வழங்குங்கள் என்பது தான் அது. இதனை சிங்களத் தலைமைகள் புரிந்துகொள்ளுமா என்பது கேள்விக்குறிதான்.

தற்போதைய சூழ்நிலைதான் புலிகளுக்கு மிகவும் வாய்ப்பானதும் அவர்கள் எதிர்பார்ப்பது மாகும். ஜெனிவாப்பேச்சுக்குச் சென்று அரசின் கையாலாகாத் தனத்தை சர்வதேசத்துக்கு அம்பலப்படுத்திய பின்னர் பேச்சை பின்தள்ளி விடுதலைப்போராட்டத்தைத் தொடருவது புலிகளின் நீண்ட நாளைய அவாதான்.

அடுத்து என்ன நடக்கும் என்பதை அடுத்த சுற்றுப்பேச்சு நிச்சயம் வெளிப்படுத்தும் என்பது உறுதி.




## அமெரிக்காவுக்கு ஆபத்தாம்



உலக அரங்கிலிருந்து அமெரிக்கா வெளியேறும் ஆபத்து இருப்பதால் அமெரிக்க எதிர்ப்பைக் கைவிடுங்கள் என்று ஐரோப்பிய நாடுகளை பிரிட்டிஷ் பிரதமர் ரேனி பிளேயர் கேட்டுள்ளார்.

"ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவை எதிர்த்து வருகின்றன. இது பைத்தியக்காரத்தனமாகும். இந்தப்போக்கு காரணமாக உலக அரங்கிலிருந்து அமெரிக்கா விலகிவிடும் ஆபத்துள்ளது.

அமெரிக்காவுடன் எல்லா நேரத்திலும் கைகோத்துவிட முடியாது. சில நேரங்களில் அவர்கள் கடினமான நண்பர்களாக இருப்பார்கள். நாம் நல்லதென நினைக்கும் நீண்டகால நலன் ஆபத்துக்குள்ளாகி இருக்கும் நிலையில் ஐரோப்பாவின் சில பகுதிகளிலும், உலகின் சில பகுதிகளிலும், அமெரிக்க எதிர்ப்பு உணர்வு எழுந்திருப்பது ஆபத்தானது. அமெரிக்கா உலக அரங்கிலிருந்து வெளியேறிவிடும் ஆபத்தும் ஏற்படக்கூடும். இப்போதுள்ள பிரச்சினைகளுக்கு அமெரிக்கா இல்லாமலும் தீர்வு காணமுடியாது"- என்று கூறினார் ரேனி பிளேயர்.

## கன்னிப் பெண்கள் கர்ப்பமாவது மெரிக்காவில் அதிகரிப்பு



அமெரிக்காவில் திருமணமாகாமலேயே இளம் வயதில் கர்ப்பமாகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அங்குள்ள வடகரோலினா மாநிலத்தில் கடந்த ஆண்டு 15 வயதுக்கு உட்பட்ட இளம் பெண்களில் 100க்கு 9 பேர் திருமணமாகாமலே கர்ப்பம் தரித்துள்ளனர்.

பள்ளி மாணவர்களுக்கு பாடசாலைகளில் கற்பிக்கும் செக்ஸ் கல்வி, மற்றும் டெலிவிஷன், இன்டர்நெட் போன்றவற்றில் அவர்கள் பார்க்கும் ஆபாசக் காட்சிகள் தொடர்பாக அமெரிக்கப் பெற்றோர் கவலையடைந்துள்ளனர்.

இதனால் மாணவிகளிடம் அவர்களது பெற்றோர்களே செக்ஸ் பற்றி மனம் விட்டுப்பேசி சந்தேகங்களைப் போக்க வேண்டும் என்ற பிரசாரம் டி.வியிலும் வானொலியிலும் அண்மையில் நடத்தப்பட்டது.

## மதம் மாறியவருக்கு மரண தண்டனை இல்லை

ஆப்கானிஸ்தானை சேர்ந்த அப்துல் ரஹ்மான் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா சென்ற போது கிறிஸ்தவராக மதம் மாறியதால் ஆப்கானிஸ்தான் திரும்பியதும் கைது செய்யப்பட்டார்.

அந்த நாட்டுச் சட்டப்படி முஸ்லிம் மதத்தை சேர்ந்தவர் வேறு மதத்துக்கு மாறுவது குற்றமாகும். இதையொட்டி மதம் மாறிய ஒருவர் மீது வழக்கு பதிவு செய்து குற்றம் நிருபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

மதம் மாறிய அப்துல் ரஹ்மானுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் உட்பட பல்வேறு தலைவர்கள் ஆப்கான் அரசைக் கேட்டுக் கொண்டனர். ஐ.நா. சபையும் அவரை விடுதலை செய்யும்படி வற்புறுத்தி வந்தது.

இந்நிலையில் ரஹ்மான் மதம் மாறியதற்கான போதிய ஆதாரங்களை அரசு தாக்கல் செய்யவில்லை என்று கூறி வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இப்போது இவரது தலை தப்பிவிட்டதெனக் கூறப்படுகிறது.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும் ஆப்கானிஸ்தானிலுள்ள பழைமைவாதிகளால் தனது உயிருக்கு ஆபத்து உள்ளது என ரஹ்மான் அஞ்சுகிறார்.

## நடிகை மனிஷா மீது கொலைக் குற்றம்



தனது உதவியாளரைக் கொலை செய்யுமாறு நடிகை மனிஷா கொய்ராலாவே தனக்குப் பணம் கொடுத்ததாக இந்தக் கொலை வழக்கின் குற்றவாளியான மும்பை பாதாள உலகத்தை சேர்ந்த அபுசலீம் அளித்துள்ள வாக்கு மூலத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அபுசலீம் போலிக் கடவுச்சீட்டு மூலம் தனது காதலி மோனிகா பேடியுடன் போர்த்துக்கல் நாட்டில் இருந்த போது அந்நாட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

இவர்கள் இருவரையும் இந்தியா கொண்டு சென்று இந்திய சி.பி.ஐ பொலிசார் பல்வேறு விதமாக விசாரணை மேற்கொண்டனர்.

இந்த விசாரணைகளில் பல திடுக்கிடும் தகவல்களை அபுசலீம் வெளியிட்டார்.

போர்த்துக்கல் நாட்டில் இருந்த போது இந்திய கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் அசாருதீன் தனக்குப் பண உதவி செய்தது, நடிகர் சஞ்சய்தத்துக்கு ஆயுதம் வழங்கியது என்பன குறித்து விசாரணையில் தெரிவித்து இருந்தார் அபுசலீம். இந்நிலையிலேயே நடிகை மனிஷா கொய்ராலாவின் உதவியாளரை கொலை செய்வதற்கு மனிஷாவே பணம் கொடுத்ததாக அபுசலீம் தற்போது பரபரப்பான கொலைப் புகாரை சுமத்தியுள்ளார்.

## ஈரானுக்கு எச்சரிக்கை



ஈரான் தனது அணுத்திட்டங்களை கட்டுப்படுத்த வேண்டும் அல்லது சர்வதேச சமுகத்திலிருந்து தனிமைப்படுத்தப் படுவதை எதிர்கொள்ளவேண்டும் என உலக வல்லரசுகள் எச்சரித்துள்ள அதேவேளை ஈரான் அதனை நிராகரித்துள்ளது.

ஈரான் தனது யுரேனியத்தை செறிவுபடுத்தும் நடவடிக்கையை இடைநிறுத்தாவிட்டால் ஐக்கிய நாடுகளின் தடைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம் என பிரிட்டன் எச்சரித்துள்ளது.

எனினும் ஈரான் யுரேனியத்தை பதப்படுத்தும் தனது முடிவை மாற்ற முடியாது எனவும் மேற்குலகம் பாதுகாப்பு சபையை தனக்குச் சார்பாக பயன்படுத்த முனைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

# உலகின் பார்வையில் உள்ளூராட்சித் தேர்தல்

ஒரு தேசத்தின் அடிக்கட்டுமானங்களில் முக்கியமானவை கிராமங்கள் மற்றும் ஊர்கள் சார்ந்த நிர்வாகக் கட்டமைப்புகள். அவை இலங்கையில் கிராம சபைகளாகவும். பிரதேச சபைகளாகவும், பட்டினம் மற்றும் நகர சபைகளாகவும் வகுக்கப்படுகின்றன.

ஒரு தேசத்தின் இருதயம் அதன் கிராமங்களில் இருக்கிறது என்பார்கள். கிராமங்களில் உள்ள நிர்வாகக் கட்டமைப்புகளில் செல்வாக்குச் செலுத்தாத எந்த சக்திகளும் தேசிய அரசியலில் பலம் பொருந்தியவையாக இருக்கமுடியாது. அந்த வகையில் இலங்கையின் உள்ளூராட்சிச் சபைகள் இன்று ஆளும் கட்சியின் செல்வாக்கினுள் வந்திருப்பது அந்தக் கட்சியின் ஒரு தேசிய பலமாக நோக்கப்படுகிறது.

தமிழர் தாயகப் பிரதேசமான வடக்கு-கிழக்கிலும் ஏராளமான உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. போர்க்காலத்தில் இந்த மன்றங்கள் செயலிழந்து நீண்டகாலமாக மக்கள் பிரதிநிதிகள் இன்றி வெறும் அரச அலுவலகங்கள் போன்று செயற்பட்டு வந்தன; வருகின்றன. எனினும் அந்த அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றிய திட்டங்கள், எண்ணக்கருக்கள் இந்த மன்றங்கள் ஊடாக நிறைவேற்றப் படுகின்றன.

ஜனநாயக வழிமுறையின் ஊடான மக்கள் பங்களிப்புடன் கூடிய இந்த மன்றங்களின் செயற்பாடுகள் முடங்கிப்போயிருந்தாலும் இப்போது இவற்றின் தேவைகள் உணரப்படுகின்றன.

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டத்தின் இரண்டு முக்கிய முன்னெடுப்புகளில் ஒன்றாக அரசியல் மற்றும் ராஜதந்திர வழிமுறைகளில் அங்கீகாரம் பெற்றுக்கொள்வது என்ற இலக்கில் இன்று விடுதைப் புலிகள் அமைப்பு ஒரு பெரிய வேலைத்திட்டத்தில் இறங்கியிருக்கின்றது.

இந்த வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்தப் போர் ஓய்வும், தேச நிர்மாணத்துக்கான அடிக்கட்டமைப்புகளின் உருவாக்கமும் வெளிநாடுகள், அமைப்புகள் உடனான தொடர்புகளும் ஒரு சீரான - தெளிவான கொள்கையின் படி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகள் தாங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிலப்பிரதேசத்தில் ஒரு நடைமுறை அரசை நிறுவி இருக்கின்றார்கள். அந்த நடைமுறை அரசின் நிர்வாகக் கட்டமைப்புகளை உலகம் வியந்து பார்க்கிறது. அந்த நிர்வாகக் கட்டமைப்புகள் அவர்களது கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களின் - மக்களின் - நிர்வாகமுறைமைகள் மீதும் செல்வாக்கையும் கட்டுப்பாட்டையும் கொண்டுள்ளன. தமிழீழக் காவல்துறைக் கட்டமைப்பு மீது யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். புலிகளின் நிர்வாகப் பகுதியான பளையில் இயங்கும் யாழ்ப்பாண மக்களுக்கான காவல் நிலையத்தில் தினமும் குவிகின்ற மக்கள் கூட்டம் இதற்கு நல்லசான்று ஆகும். இதுபோலத்தான் ஏனைய நிர்வாகக் கட்டமைப்புகளும் தமிழ்மக்கள் அனைவர் மீதும் செல்வாக்கைக் கொண்டிருக்கின்றன.

இறைமை உள்ள ஒரு நிலப்பரப்பு, முப்படைகள், அடிப்படைக் கட்டுமானங்கள் என்று அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு நடைமுறை அரசு தமிழர்களுக்கு உண்டு என்பதை இன்று துணிந்து உலகத்துக்குக் கூறமுடிகிறது. இந்த நடைமுறை அரசுக்கான அங்கீகாரம் என்பதுவே இன்னும் வேண்டிக்கிடக்கிறது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட போதிலும் மேற்குலகம் தனக்கே உரியதான சில வழிமுறைகள் ஊடாக-அதாவது ஜனநாயக வழிமுறைகள் ஊடாக - இந்த நிர்வாகக் கட்டமைப்புகளை அங்கீகாரம் பெறுவதற்கு அவற்றின் மீதான மக்களின் செல்வாக்கை ஒரு மதிப்பீடாகக் காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது.

இலங்கையின் தேர்தல் வழிமுறைகள் ஊடாக இந்த நடைமுறை அரசுக்கான தகுதியை நிலைநிறுத்திக் காட்டுவதே உலகம் எதிர்பார்க்கின்ற ஜனநாயக வழியாக உள்ளது.

இலங்கையின் தேர்தல்களை நீண்ட காலமாக அடியோடு நிராகரித்து வந்த விடுதலைப் புலிகள் இப்போது போராட்டத்தின் அரசியல்-ராஜதந்திர -முன்னணி அமைப்புகள் என்ற தளத்தில் நின்று கொண்டு தேர்தல்களை தமிழ்த் தேசியத்துக்கு ஏற்றவாறு அணுகும் நிலைப்பாட்டை எடுக்கத் தொடங்கி இருக்கிறார்கள்.

அந்த வகையில் 2004 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலும், இப்போது நடைபெறுவதாக இருந்து ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் திட்டத்துக்கும் இந்த தேர்தல் முடிவு ஓர் அடியாக விழ்ந்திருக்கிறது.

தமிழர் தாயகத்தில் இந்தத் தேர்தல் பூரணமாக எல்லா மன்றங்களுக்கும் நடத்தப்படவில்லை. இன்னும் ஆறுமாத காலத்துக்குப் பின் தேர்தல்களை நடத்தவேண்டும். அல்லது மீண்டும் ஒத்திவைக்க வேண்டும். திருமலை, அம்பாறை தமிழ்ப் பிரதேசங்களின் மக்கள் அளித்த தீர்ப்பு வடக்கு-கிழக்கின் எல்லாப் பிரதேசங்களிலும் உள்ள தமிழ்மக்களின் விருப்பாக கருதமுடியும். எனினும் தமிழர் நடைமுறை அரசின் மீதான செல்வாக்கை உலகம் உணர்ந்து கொள்வதற்கு தேர்தலின் முழுமையான வெற்றி நிலை நாட்டப்பட வேண்டிய தேவை உள்ளது.

பலஸ்தீனத்தில் முதலில் உள்ளூராட்சி மன்றங்களில் ஹமாஸ் அமைப்பு பெரும் செல்வாக்குடன் வெற்றியீட்டிய போது உலகின் கண்கள் அகலத் திறந்தன. பயங்கரவாத அமைப்பு என்று கூறப்பட்டு வந்த ஹமாஸ் இயக்கம்

## தக்கபடி பயன்படுத்தினால் தமிழ்த் தேசியத்துக்கு வலு!

தேர்தல்களும் முக்கியமானவை என பார்க்கப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கிலும் தெற்கிலும் மக்கள் வழங்கிய தீர்ப்பு தமிழ்மக்களின் கோரிக்கைகளுக்குப் பலம் சேர்த்திருப்பதுடன் இலங்கையின் இனமுரண்பாட்டின் யதார்த்த நிலையையும் உலகம் உணர்வதற்கு வாய்ப்பளித்திருக்கிறது.

தெற்கில் சமாதானத்துக்கும் தமிழ்த் தேசியத்திற்கும் எதிராக இனவாதக் கூச்சல் போட்ட ஜே.வி.பி. மற்றும் பௌத்த தேரர்களின் செல்வாக்கு நிறைந்த ஹெல உறுமய என்பன இந்தத் தேர்தல் மூலம் அடித்து ஓரங்கட்டப்பட்டிருக்கின்றன. அதேசமயம் ஒட்டுப்படைகள் மற்றும் தமிழ்த் தேசியத்துக்கு முரணாக நிற்கும் சக்திகளைப் புறந்தள்ளி ஒதுக்கிவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்ததன் மூலம் கிழக்கு தமிழ் மக்கள் அங்குள்ள கொந்தளிப்பான சூழ்நிலைக்கு மத்தியிலும் தமிழர் தலைமைத்துவம் மீதும், தமிழ்த் தேசியத்தின் மீதும் தங்களின் அசைக்க முடியாத பற்றுறுதியை வெளிக்காட்டி இருக்கின்றார்கள்.

இராணுவ மற்றும் அந்நிய சக்திகளின் தலையீட்டுடன் கிழக்கைத் தனிமைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுவரும் சூழ்சித் கிராமங்களில் மக்கள் மீது செலுத்தும் செல்வாக்கினை அந்தத் தேர்த்தல் உலகத்துக்கு அங்கீகரித்தது.

இதுபோன்ற ஒரு ஜனநாயக வழிமுறையிலான அங்கீகாரம் தமிழரின்

**வலிகாமத்தான்**

நடைமுறை அரசுக்குத் தேவையாக உள்ளது. அந்த நோக்குடன் தேர்தல்களை எதிர்கொள்வது பற்றிய உத்திகளில் தமிழ் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்.

உலகம் எதையெல்லாம் கேட்கிறதோ அதையெல்லாம் செய்துகாட்டுவோம். எதுவெல்லாம் எங்களுக்குச் சரிப்பட்டு வராத வழி என்று உலகம் எண்ணுகின்றதோ அந்த வழியிலும் சென்று காட்டுவோம் என்ற சாரப்பட அண்மையில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் வே.பாலகுமாரன் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு கூறிய ஆலோசனைகள் இதையே வலியுறுத்துகின்றன.

'ஊரகங்கள்' என்று கூறப்படும் கிராம மன்றங்களை - உள்ளூராட்சி மன்றங்களை- எமது பூரண கட்டுப்பாட்டினுள் வைத்திருப்பதன் மூலம் எங்கள் தேச நிர்வாகக் கட்டமைப்புகளுக்கு மேலும் பலம் சேர்க்கலாம்.


வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வாழும் மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை கற்பிப்பதையும், அவர்களுக்கு உயர் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதையும்,அவர்களை சர்வதேச சந்தையின் போட்டிக்கு தயார்ப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு கிளிநொச்சியில் இயங்கிவரும்



வன்னி ரெக் வழங்கும்

(வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம்)

கணினி அறிவூட்டல் சம்பந்தமான ஆக்கங்கள்

*பெரும்பாலும் 9ஆம், 10ஆம் ஆண்டு மாணவர்களின் தகவல் தொழில்நுட்ப பாடவிதானத்தின் அடிப்படையில் வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகத்தின் மூன்றாம் தொகுதி மாணவர்களினால் தயாரிக்கப்பட்டது.

*மாணவர்கள் தங்களின் வீடுகளில் இருந்தவாறு இலத்திரனியல், வலையமைப்பு, மென்பொருள் துறைகளில் தொழில்நுட்ப அறிவியலை விருத்தி செய்ய அரியசந்தர்ப்பம்.

விரைவில் எதிர்பாருங்கள்

Vanni Tech
Vanni Institute of Technology

சுடர் ஒளி வார இதழில் வாரா வாரம் வெளிவரும்

சுடர் ஒளி

மார்ச் 09 - 15, 2006

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

# பாக். விஜயம் பயன் தருமா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பாகிஸ்தானுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாடு திரும்பிஉள்ளார்.

பாதுகாப்பு, நிதி, வர்த்தக அமைச்சுப் பிரதிநிதிகள் என்று ஒரு பெரிய பட்டாளமே ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் சென்று திரும்பி இருக்கிறது.

ஜனாதிபதி தலைமையிலான இக் குழுவினருக்கு பகிஸ்தானில் பெரும் வரவேற்புக் கிடைத்தது. இந்திய விஜயத்தின் போது கிடைத்த வரவேற்பை விட இது பிரமாதமாக இருந்தது.

ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயமும் அவருக்கு அங்கு கிடைத்த பெரும் வரவேற்பும் இந்தியாவுக்கு நிச்சயம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி இருக்காது.

சுதந்திரத்துக்குப் பின்னர் இந்தியாவும் பாகிஸ்தானும் மூன்று தடவைகள் யுத்தம் செய்து விட்டன. இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைக்கு காரணமான காஷ்மீர் பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. இந்தியா தெற்காசியாவில் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்கும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்றது. இலங்கை பிரச்சினையில் அது மூக்கை நுழைப்பதற்கும் இது தான் காரணம். இந்தியாவின் ஆதிக்கத்தை மழுங்கடிப்பது பாகிஸ்தானின் முக்கிய நோக்கமாகும்.

ஆகவே ஜனாதிபதி ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயத்தை இந்தியா சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் என்பது நிச்சயம்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீண்டும் யுத்தம் மூளும் பட்சத்தில் இலங்கை அரசுக்கு இந்தியா உதவாவிட்டால் பாகிஸ்தான் மற்றும் சீனாவின் உதவியை இலங்கை நாடும் என்பதற்கு ஒரு சமிக்ஞை தான் ராஜபக்ஷவின் பாகிஸ்தான் விஜயம்.

இந்தியாவின் மற்றொரு பகை நாடு சீனா. நேரு பிரதமராக இருந்த காலத்தில் இந்தியாவும் சீனாவும் எல்லைப் பிரச்சினை ஒன்றில் மோதின. இரு நாடுகளுக்கும் இடையில் இன்னும் அந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை.

ராஜபக்ஷ அரசாங்கம் பாகிஸ்தானுடன் மட்டும் அல்ல சீனாவுடனும் நெருங்கிய உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறது. ஜனாதிபதியின் பாதுகாப்புச் செயலர் தலைமையிலான ஒரு குழு சீனா சென்றது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் தமிழகக் கட்சிகளின் ஆதரவுடன் மன்மோகன்சிங் அரசு பதவியில் இருப்பதும் அடுத்த மாதம் நடைபெற உள்ள மாநில சட்ட சபைத் தேர்தல்களில் போட்டியிட தமிழகத்தில் உருவாகி இருக்கும் அ.தி.மு.க. தலைமையிலான புதிய கூட்டணியும் ராஜபக்ஷ அரசுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கலாம்.

ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் செய்து கொள்ளபட இருந்த பாதுகாப்பு ஒப்பந்தம் காலவரையறை இன்றி கிடப்பில் போடப்பட்டுள்ளது. பலாலி விமான நிலைத்தை புனரமைத்து நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளில் இந்தியா அதிக சிரத்தை காட்டாமல் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. அதே சமயம் சமஷ்டி ஆட்சி முறை மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் இந்தியாவின் காங்கிரஸ் அரசு நம்புகிறது. சமஷ்டி என்ற சொல்பிரயோகம் தென் இலங்கைக் கட்சிகளுக்கு 'அலர்ஜி'.

அண்டையில் உள்ள பெரிய நாடான இந்தியாவை பகைக்கும் துணிச்சல் இலங்கைக்கு கிடையாது. ஆகவே இந்தியாவை ஒருவாறு சமாளித்துக் கொண்டு பாகிஸ்தானிடம் அதிகளவு இராணுவ உதவிகளைப் பெறுவதே இலங்கையின் திட்டம். ஆனால் இந்த திட்டம் வெற்றி பெறுமா என்பது கேள்விக் குறியே.

அமெரிக்கா இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வைத்துக் கொண்டுள்ள தற்போதைய நிலையில் பாகிஸ்தானை அணைக்கும் இலங்கையின் ராஜதந்திர நகர்வுகள் பயன் அளிக்கப் போவதில்லை.

# கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு பெருவெற்றி

நாட்டின் எதிர்கால அரசியல் எவ்வாறுஅமையப்போகிறது என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதற்கான கருவியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இலங்கையில் அமைந்து விடுகின்றன. பதவியிலுள்ள அரசாங்கத்தின் நிர்வாகத்திறன், கொள்கை அமுலாக்கம் போன்றவற்றை மட்டுமன்றி

> இன விரோதிகளையும் அரசாங்கத்துக்கு வால் பிடிப்போரையும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் முற்றாக நிராகரித்துள்ள தமிழ் மக்கள் மண்மீட்புப் போராட்டத்தில் தாம் வடக்கு-கிழக்கு என்ற பேதமின்றி ஒரு தலைவனின் பின்னால் அணி திரண்டு நிற்கும் தேசிய இனம் என்பதை ஐயந்திரிபுற அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளையும் மதிப்பிட்டு தமது விருப்புவெறுப்புகளை மக்கள் தம்மிடமுள்ள வாக்குப்பலத்தால் வெளிப்படுத்துவதற்கான களமாகவும் இத்தேர்தல்கள் உள்ளன.

**தேர்தல் பெறுபேறுகள்**

நடந்து முடிந்துள்ள குட்டிப் பொதுத் தேர்தலில், மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு பெருவெற்றியீட்டி உள்ளது. தேர்தல்கள் நடத்தப்பட்ட 266 உள்ளூராட்சி சபைகளில் 222 சபைகளின் நிர்வாகத்தை அது தன்வசமாக்கி உள்ளது.

ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகளுடன் கூட்டுச் சேராது தனியாகப் போட்டியிட்டே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பால் இந்த சாதனையை ஈட்ட முடிந்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி இத்தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. 2002 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உள்ளூராட்சி தேர்தல்களில் தான் கைப்பற்றிய 200 க்கு மேற்பட்ட சபைகளின் நிர்வாகத்தைக் கோட்டை விட்டுள்ள இக்கட்சி 32 சபைகளில் மட்டும் தனது பிடியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக கட்சிக்குள் தோன்றிய எதிர்ப்புகள் கட்சிக்கு பாரிய பலவீனத்தை ஏற்படுத்தி உள்ளது. அதன் தாக்கம் இத்தேர்தல்களில் தெளிவாகப் பிரதிபலித்துள்ளதைக் காண முடிகிறது.

இங்கு புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை குழிதோண்டிப் புதைக்க முயற்சித்த பேரினவாதச் சக்திகளான ஜே.வி.பியையும் ஜாதிக ஹெல உறுமயவையும் தென்னிலங்கை மக்கள் பலத்த அடிகொடுத்து வீழ்த்தி உள்ளனர். முன்னர் தான் வைத்திருந்த உள்ளூராட்சி சபைகளில் ஒன்றின் அதிகாரத்தை மட்டும் மீண்டும் கைப்பற்றி உள்ளது ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமய சார்பாக இம்முறை மொத்தம் 10 பேர் வெற்றி பெற்றுள்ளனர். அதுவும் 10 உள்ளூராட்சி சபைகளுக்கு மட்டுமே ஒவ்வொருவர் தெரிவாகி உள்ளனர்.

ஜே.வி.பியின் தலைவர்கள் தம்பட்டம் அடித்ததைப்போல எதிர்கால அரசை அமைக்கப்போகும் புதிய சக்தியாக அவர்களின் கட்சியால் தலையெடுக்க முடியவில்லை. இக்கட்சிக்கு இப்போது கிடைத்துள்ள நம்பமுடியாத தோல்வி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ எவ்வித அழுத்தங்களும் இன்றி சுதந்திரமாக செயல்பட உதவும் என்று நம்பப்படுகிறது.

தமிழர் தாயகத்தில் ஆறு மாவட்டங்களில் இத்தேர்தல் நடைபெறவில்லையாயினும் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்ற தேர்தல்களில் மக்கள் ஐக்கியமாக வாக்களித்து 'நாம் தமிழர்' என்பதை நிருபித்துள்ளனர். இன விரோதிகளையும் அரசாங்கத்துக்கு வால் பிடிப்போரையும் இந்த மாவட்டங்களில் முற்றாக நிராகரித்துள்ள தமிழ் மக்கள் மண்மீட்புப் போராட்டத்தில் தாம் வடக்கு-கிழக்கு என்ற பேதமின்றி ஒரு தலைவனின் பின்னால் அணி திரண்டு நிற்கும் தேசிய இனம் என்பதை ஐயந்திரிபுற அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.



இரா சம்பந்தன்

திருகோணமலை நகரசபைக்கான தேர்தலில் 16 ஆயிரத்து 368 வாக்குகளுடன் பத்து உறுப்பினர்களைப் பெற்று தமிழரசுக்கட்சி வெற்றிவாகை சூடியுள்ள அதேசமயம் ஈ.பி.டி.பி. 256 வாக்குகளை மட்டுமே அங்கு பெற்று ஒரேயடியாக மண் கௌவியுள்ளது.

திருகோணமலை பட்டினமும் சுற்றாடலும் பிரதேச சபைக்கு நடந்த தேர்தலிலும் தமிழரசுக்கட்சி 10 ஆயிரத்து 575 வாக்குகளுடன் ஆறு உறுப்பினர்களைப் பெற்று நிர்வாகத்தைக் கைப்பற்றி உள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், ஆலையடிவேம்பு பிரதேச சபைகளை தமிழரசுக்கட்சி முற்றாகக் கைப்பற்றியிருக்க ஈ.பி.டி.பிக்கு இந்த இரு இடங்களிலும் முறையே 129, 159 வாக்குகளே கிடைத்தன.

திருக்கோவில் பிரதேச சபைக்கான தேர்தலில் 8 ஆயிரத்து 318 வாக்குகளுடன் ஒன்பது உறுப்பினர்களையும் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான தேர்தலில் 7 ஆயிரத்து 81 வாக்குகளுடன் ஒன்பது உறுப்பினர்களையும் காரைதீவு பிரதேச சபைக்கான தேர்தலில் 6 ஆயிரத்து 59 வாக்குகளுடன் 4 உறுப்பினர்களையும் தமிழரசுக்கட்சி பெற்று வெற்றியீட்டியுள்ளது.

இத்தேர்தலில் மலையகத்தின் இரு முக்கிய கட்சிகளான இ.தொ.காவும் மலையக மக்கள் முன்னணியும் படுதோல்வியைச் சந்தித்துள்ளன. இவ்விரு கட்சிகளும் தமது தனித்துவத்தைக் காட்டுவதற்காக போட்டியிட்ட இடங்களில் முகம் குப்புற வீழ்ந்துள்ளன.

பதுளை மாநகர சபைக்கு மலையக மக்கள் முன்னணியுடன் இணைந்து மண்வெட்டிச் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு 244 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

நுவரெலியாவில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்ட இ.தொ.கா. நுவரெலிய மாநகர சபையில் தன்வசமிருந்த பிரதி முதல்வர் பதவியையும் பறிகொடுத்துள்ளது.

இம்முறை கொத்மலைப் பிரதேச சபைக்கு இரண்டு உறுப்பினர்களையும் தலவாக்கலை லிந்துல நகரசபைக்கு ஒரு உறுப்பினரையும் பெற்று மேலக மக்கள் முன்னணி மலையகத்தில் களமிறங்கி உள்ளது.

லிந்துல நகர சபையின் அதிகாரத்தை ஐக்கிய இலங்கை ஜனநாயக முன்னணி கைப்பற்றி உள்ளது.

நாடு சுதந்திரமடைந்த பின்னர் தமிழ் கட்சியொன்று இந்த நகரசபையின் அதிகாரத்தைப் பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

மலையகத்தின் இரு பிரதான கட்சிகளுக்கும் கிடைத்துள்ள ஏமாற்றம் மலையக மக்கள் தனிப்பட்ட செல்வாக்குகளைவிட தனித்துவமான கொள்கைகளை ஆதரிக்க முன்வந்துள்ளதையே எடுத்துக் காட்டுகிறது. மலையக வாக்களிப்பில் இது எதிர்பாராத ஒரு திருப்பமே. மலையக மக்கள் சிந்தித்துச் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள் என்பதையே மலையக தேர்தல் முடிவுகள் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டுகின்றன. மலையகத் தலைவர்கள் இதைப் புரிந்து கொண்டு செயல்படத் தவறுவார்களேயானால், எதிர்காலத்தில் படுமோசமான தோல்விகளை அவர்கள் நிச்சயம் சந்திக்க நேரும்.

மலையகம் வடக்கு-கிழக்கு என்ற பேதத்தை மறந்து நாம் தமிழர் என்ற சிந்தனையை மலையகத் தலைவர்கள் திடசங்கற்பத்துடன் முன்னெடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதை அவர்கள் உணர்ந்து செயல்பட முன்வருவார்களானால், எதிர்காலம் மலையகத்துக்கு மட்டுமல்ல, இந்நாட்டிலுள்ள தமிழ் இனத்துக்கே பிரகாசமாக இருக்கும்.

**முஸ்லிம் காங்கிரஸ்**

சம்மாந்துறை பிரதேச சபை, கிண்ணியா பிரதேச சபை ஆகியவற்றில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸ், அச்சபைகளின் நிர்வாகத்தை பொறுப்பேற்றிருப்பதுடன் மூதூர் பிரதேச சபையையும் தனதாக்கிக் கொண்டுள்ளது.

**கலாநிதி ஜயதேவ உயன்கொடவின் கருத்து**

தேர்தல் முடிவுகளை நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து, கடும் போக்காளர்களைத் தாம் ஆதரிக்கவில்லை என்பதையே வாக்காளர்கள் வெளிப்படுத்தியிருப்பதாக கொழும்பு பல்கலைக்கழக அரசியல் கற்கைகளுக்கான பீடத்தலைவர் கலாநிதி ஜயதேவ உயன்கொட கூறியிருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் மஹிந்தவின் அரசாங்கம் விட்டுக் கொடுப்புகளைச் செய்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடும் என்றும் அவர் ஹேஷியம் கூறியிருக்கிறார்.

**பொதுத்தேர்தல்**

தவிர, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு இத்தேர்தலில் ஈட்டியுள்ள பெருவெற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்குத் தூண்டக்கூடும் என அரசியல் நோக்கர்கள் கூறியிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு உள்ளூராட்சித் தேர்தல்களில் பெருவெற்றி பெறுமானால் இந்த ஆண்டின் மத்திய பகுதியில் தாம் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு உத்தேசித்துள்ளதாக கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானுக்கு புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியிருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன.


இல்லாவிடின் சமாதான முன்னெடுப்புகளுக்கு ஜே.வி.பி போட்டிருக்கும்

— சுபாஷ்

(7ஆம் பக்கம் பார்க்க ....)

# பாண்டிச்சேரியைப் பங்கிடுவதில் தி.மு.க. கூட்டணியில் சிக்கல்!


கருணாநிதி


ஸ்டாலின்

**எஸ்.சுரேந்திரஜித்**

**த**மிழகத் தேர்தலுக்கான இரு அணிகளதும் தொகுதிப் பங்கீடு முடிந்து விட்டது.

பெருமளவு இடங்களை தோழமைக் கட்சிகளுக்கு ஒதுக்கி 'தியாகம்' செய்திருப்பதாக மார்தட்டிக் கொள்கிறது தி.மு.க. அது போட்டியிடும் தொகுதிகள் மிகக் குறைவு என்றாலும் வெல்லக் கூடிய தொகுதிகளையே அது தேர்ந்தெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் முரசொலி மாறனின் மகனும், மத்திய அமைச்சருமான தயாநிதி மாறன், தி.மு.க. தலைமையை கைப்பற்ற திரைமறைவில் முயற்சி மேற்கொண்டுள்ளார் என செய்திகள் வெளிவந்திருப்பது தி.மு.க.வுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. எனினும் தேர்தல் நேரத்தில் குட்டையைக் குழப்பாமல் ஆட்சிக்கு வந்த பின் நிலைமையை கையாள கலைஞர் தீர்மானித்துள்ளார் என்று கூறப்படுகிறது. மாறனுக்கு இவ்வாறான எண்ணம் இருக்குமானால் அது வெற்றி தரக்கூடிய முயற்சியாகவே இருக்கக் கூடும். ஏனெனில் கருணாநிதிக்கு வயது, மரணத்தை எட்டும் நிலையில் உள்ளது. ஸ்டாலின் முதல்வராவதை சிரமமில்லாமல் செய்து முடிக்க தி.மு.க.வுக்கு சொற்ப அவகாசமே உள்ளது. முதலாவதாக தேர்தலை வெல்ல வேண்டும். அதுவும் தி.மு.க. தனித்து ஆளும் வகையில் வெல்ல வேண்டிய அவசியம் தி.மு.கவுக்கு உண்டு பிறகு முதல்வராக, கலைஞராக ஸ்டாலினா என்ற சிக்கல் இருக்கும் போது எம்.ஜி.ஆர். போல் முதல்வராகவே இருக்க கருணாநிதி விரும்பக்கூடும். அதே நேரம் அவர் ஸ்டாலினை கதிரையில் இருத்திவிட்டு இறந்தால் நிம்மதியாக இருக்கலாம். அவர் இறந்தவுடன் எம்.ஜி.ஆர். மரணத்தின் பின் ஜ-ஜெ என அ.தி.மு.க. உடைந்தது போல் தி.மு.க. உடையவும் கூடும். இதைத்தான் சூசகமாக ஜெயலலிதா அண்மையில் "எமது பரமவைரி தி.மு.கவுடன் மோதும் கடைசி சந்தர்ப்பம்" என்று கூறினாரோ தெரியாது. கலைஞர் முதல்வராக வருவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இது என்பதையும் அவருக்கு வயதாகிவிட்டது மரணம் சமீபித்து விட்டது என்பதையும் மறைமுகமாக ஜெயலலிதா கூறினார். அதாவது தனது தொகுதியைத் தோற்கடிக்க எதிரியின் மரணத்தைத் தான் ஜெயலலிதா நம்பியிருக்கிறார். அதை வெளிப்படையாக மேடையில் பேசவும் செய்கிறார். அரசியல் அநாகரிகத்தின் உச்சம்தான் இது. எப்படியோ கருணாநிதி சஞ்சலம் நிறைந்த ஒரு மனிதராகவே இப்போதைக்கு உள்ளார். அவரது அக்கா மகனான முரசொலிமாறன் உயிருடன் இருந்த போது ஒரு நாளும் மாமன் கருணாநிதியை எதிர்த்ததில்லை. இப்போது முரசொலியின் மகன் தயாநிதி மாறன் தி.மு.க. தலைமையை பிடிக்க முயல்வது அவருக்கு அதிர்ச்சியே.பால் தக்கரேயின் சிவசேனவின் மகனும் மருமகனும் சண்டையிட்டு மருமகன் புதிய கட்சி தொடங்கியிருப்பது போல்தான் கருணாநிதியின் நிலையும் ஆகியிருக்கிறது. மாறன் குடும்பத்தை ஜெயலலிதாவே தூண்டியிருக்கக் கூடும்.

இது இவ்வாறிருக்க சிறிய யூனியன் பிரதேசமான பாண்டிச் சேரியில் தி.மு.க அணியின் தொகுதிப் பங்கு குழப்பத்திலேயே நிற்கிறது. காரணம் பாண்டிச் சேரியில் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸும் இதற்குமுன் ஆளுங்கட்சியாக இருந்த தி.மு.கவும் இனிமேல் ஆளுங்கட்சியாக வர நப்பாசை கொண்டுள்ள பா.ம.காவும் தத்தமது நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்காதது தான்.

தமிழகத்தில் தி.மு.க. பெரிய கட்சி என்பது போல் பாண்டிச் சேரியில் காங்கிரஸ் பெரிய கட்சி. எனவே தனக்கே அதிக இடம் தரவேண்டும் என்கிறது காங்கிரஸ்.

30 இடங்களில் 17ஐ காங்கிரஸ் கோருகிறது. மீதி 13இல் தி.மு.க. 12ஐ கோரினால் பா.மா.கா, கம்யூனிஸக் கட்சிக்கு எத்தனை என்கின்ற சிக்கல் எழுகிறது.

2004 லோக்சபா தேர்தலிலும் இவ்வாறே பாண்டிச்சேரி மக்களிடையே தொகுதிக்கு சண்டை நடந்தது. இறுதியில் காங்கிரஸ் தொகுதியை பா.மா.காவுக்கு விட்டுத் தந்தது. இதனால் இந்த முறை பா.ம.காவுக்கு விட்டுத்தர முடியாது என்கிறது காங்கிரஸ். ஓரளவு வன்னியர் சனத்தொகை கொண்ட பாண்டிச் சேரியில் பா.ம.கா. காலூன்ற வெகுவாக முயற்சிக்கிறது. இதனை உணர்ந்து காங்கிரஸ்-வன்னியரான ராவகசாமியை தனது கட்சி மூலம் முதல்வராக்கியுள்ளது.

தி.மு.கவும் காங்கிரஸும் தான் பாண்டிச்சேரியில் மாறி மாறி ஆட்சி செய்தன. வெகுகாலமாக அ.தி.மு.க. காங்கிரஸ் கூட்டணியே இருந்து வந்ததால் அ.தி.மு.க. பாண்டிச்சேரியை காங்கிரஸுக்கு விட்டுக்கொடுத்து வந்தது. இப்போது இரண்டு ஆண்டுகளால் தி.மு.க. , காங்கிரஸ் கூட்டணி வந்ததால்தான் நிலைமை சிக்கலடைந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக காங்கிரஸ் ஆட்சியே பாண்டிச் சேரியில் இருந்து வந்ததால் இம்முறை தி.மு.க. தனித்துப் போட்டியிட்டாலே வெற்றிபெறவும் வாய்ப்புண்டு. கடைசியில் கூட்டணி உடைந்து தமிழகத்தில் மட்டுமே கூட்டணி, பாண்டிச்சேரியில் அவரவர் தனித்தே போட்டி என்ற நிலை வரலாம். கடந்த 2001இல் சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க., காங்கிரஸ் பா.மா.க. கூட்டணியில் பா.மா.கவும்காங்கிரஸும் பாண்டிச் சேரிக்காக சண்டையிடவே வேறு வழியின்றி தனித்துப் போட்டியிடவுள்ளது. அதில் காங்கிரஸ் வெற்றி வாகை சூடியது.

# கிழக்கில் தமிழரசு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடைகளைத் தகர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி தாம் ஆலோசித்து வருவதாக அவர்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி எதிர் பார்த்ததைப் போல் இல்லாமல் அவருக்கு திருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் அநேக மாவட்டங்களில் ஜே.வி.பி. மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

**ரணில் புதுடில்லிக்கு**

இந்தப் பின்னணியில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சின் அழைப்பை ஏற்று புதுடில்லி சென்றுள்ளார். இந்த விஜயத்தின் போது அவர் இந்தியப் பிரத மர் மன்மோஹன்சிங், முன்நாள் பிரதமர் வாஜ்பாய், காங்கிரஸ் தலைவி சோனி யாகாந்தி ஆகியோரை சந்திப்பதுடன் இந் தியமாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத்தை யும் சந்திக்க இருக்கிறார்.

ஐ.தே.கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசாங்கம் அமைக்க இருப்பதாக செய்திகள் வெளி வந்துள்ள நிலையில் ரணிலின் புதுடில்லி விஜயம் பலத்த எதிர்பார்ப்புகளை தூண்டிவிட்டுள்ளது.

இலங்கையின் இன நெருக்கடி சம்பந்தமாக நேரடியாகத் தலையிட இந்தியா விரும்பாத போதும் சமாதானத்தை முன்னெடுப்பதற்கு தென்னிலங்கையிலுள்ள பிரதான கட்சி கள் மத்தியில் கருத்தொருமைப்பாடு இருக்கவேண்டியதன் அவசியத்தை இந்தியா உணர்ந்துள்ளது.

ஐ.தே.கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளில் ஜே.வி.பியும் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஒத்து ழைப்பு வழங்க வேண்டும் என்பதே இந்தியாவின் விருப்பமாகும்.

தென்னிலங்கையின் முக்கிய கட்சிகளுக்கிடையில் கருத்தொருமைப் பாடு என்ற நிலைப்பாட்டை ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி விஜயத் தின்போது வெளிப்படுத்துவதற்கு இந்தியா தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

இவ்வாறு இந்தியா மட்டுமன்றி, சர்வதேச நாடுகளும் பேச்சுவார்த்தை மூலமான இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை காட்டிவரும் இவ் வேளையில் ஜனாதிபதி ராஜபக்ஷ உள்ளூராட்சித் தேர்தல்களில் பெற்றுள்ள வெற்றி, இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதற்கான அழுத்தத்தை அவருக்குக் கொடுத்திருக்கின்றது.

இந்த அழுத்தத்தை அல்லது மக்களின் விருப்பத்தை நாட்டிற்கு அனு கூலமான முறையில் ஜனாதிபதி எவ்வாறு பயன்படுத்தப்போகிறார் என் பதை தமிழ் மக்கள் மட்டுமன்றி முழு உலகுமே கூர்மையாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.


**பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம்.ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். வாழ்வு வீணாகிவிட்டதே என்று பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**
2006 ஏப்ரல் 21 - 26 வரை
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 2368427
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**
2006 ஏப்ரல் 02 - 03
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**
2006 ஏப்ரல் 4 - 10
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road
Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# பாதுகாப்பை உறுதி செய்யுமா? உறவுக்கு வேட்டு வைக்குமா?

**கி**ழக்கிலே முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பாதுகாப்பு அச்சுறுத்தலைகளையப் போவதாகக் கூறிக்கொண்டு அரசு கிழக்கில் தனியான முஸ்லிம் இராணுவப் படைப்பிரிவு ஒன்றை உருவாக்கும் முயற்சியில் குதித்துள்ளது.

இதுதொடர்பாகப் பல பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இது முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிசெய்யுமா அல்லது கிழக்கில் உள்ள தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவுக்கு வேட்டு வைக்குமா? என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

யாரும் எதிர்பாத்திராத நேரத்தில் - யாரும் அறியாத இடத்தில் - முஸ்லிம் தலைவர்களுக்கும் தெரியாமல் திடீரென இந்தப் படைப்பிரிவு உருவாக்கும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

முஸ்லிம் தலைவர்களுடன் கலந்தாலோசிக்காது இந்தப் பாரிய விடயத்தை அரசு ஏன் திடீரென அறிவித்தது என்று அனைவரும் வினா எழுப்புகின்றனர்.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு முதல் முதலாக உருவாக்கப்பட இருக்கும் தனி முஸ்லிம் படைப்பிரிவு கிழக்கு முஸ்லிம் மக்களுக்கு ஒரு வகையில் நன்மையாகும் என்றாலும் அதிகம் தீமை தருவதாகவே உள்ளது.

உண்மையில் சொல்லப்போனால் முஸ்லிம் படைப்பிரிவு உருவாக்கப்பட வேண்டிய அவசியம் 1990களின் பின்பு பல தடவைகள் ஏற்பட்டன.

அக்காலப் பகுதிகளில் முஸ்லிம்கள் பல இன்னல்களையும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் எதிர்நோக்கி இருந்தனர். உயிரிழப்புகள் உட்பட பல இழப்புகளை எதிர்கொண்டனர். 1990இல் கிழக்கில் காத்தான்குடி மற்றும் ஏறாவூர் உட்பட பல இடங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம்களைப் பாதுகாக்க முஸ்லிம் படைப்பிரிவு ஒன்று அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்பட்டது.

அப்போது சாதரண ஆயுதப் பயிற்சியுடன் முஸ்லிம் ஊர்காவற்படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. அதனுடன் ஐந்து நாள் ஆயுதப் பயிற்சியுடன் படைப்பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இந்தப் படைப்பிரிவுகள் சிங்கள இராணுவத்துடன் இணைந்து அந்தந்த ஊர்களின் எல்லைப் புறங்களில் பாதுகாப்பில் ஈடுபட்டு வந்தன.

காலம் உருண்டோடியது; மெல்ல மெல்ல வழமை நிலைக்கு திரும்பத் தொடங்கியது. முஸ்லிம்கள் நூற்றுக் கணக்கில் இரவோடு இரவாக படுகொலை செய்யப்பட்ட சமயம் முஸ்லிம் ஊர்களுக்கு அருகில் இருந்த தமிழ் மக்கள் அப்போதே இடம்பெயர்ந்திருந்தனர்.

ஓரிரு வருடங்களின் பின்பு மீண்டும் தமது பழைய இடங்களுக்கு மெல்ல மெல்ல குடியேறத் தொடங்கினர். பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள், தமிழ் மக்கள்மீது கொண்டிருந்த கசப்புணர்வும் மெல்ல மெல்ல நீங்கத் தொடங்கியது. நடந்த சம்பவங்களை ஒரு கெட்டகனவாக நினைத்து, அனைத்தையும் மறந்து 90இற்கு முதல் வாழ்ந்த அந்தப் பழைய வாழ்க்கையை வாழ - பழைய உறவை புதுப்பிக்க - தமிழ், முஸ்லிம் மக்கள் தீர்மானித்தனர்.

தமிழ் ஊர்களுக்குள் முஸ்லிம்களும் முஸ்லிம் ஊர்களுக்குள் தமிழர்களும் பழையபடி சென்று வர ஆரம்பித்தனர். ஓர் இனத்தில் ஓரினம் தங்கிநின்ற அந்த வர்த்தகத்தையும் தொடங்கினர்.

அன்று முதல் ஒவ்வோர் இனங்களுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு காணப்பட்டது. இந்தப் புரிந்துணர்வைப் பாதுகாத்து சமாதானமாக வாழ, ஒரு சூழலை கட்டியெழுப்ப இரு சமூகமும் உறுதி பூண்டன. இந்த நிலைமை காரணமாக ஒரு சுமுகநிலைமை காணப்படத் தொடங்கியதும் முஸ்லிம் ஊர்களின் எல்லைப்புறங்களில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அரண்கள் படிப்படியாக நீக்கப்பட்டன.

ஊர்காவற் படையினர்களாகவும் இராணுவப் படையினர்களாகவும் சேர்த்துக் கொள்ளப்பட்ட முஸ்லிம் படைவீரர்கள் மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

ஊர்காவற் படையினரில் அதிகமானோர் இராணுவத்திற்கு மாறி அவர்களும் வேறு இடங்களில் கடமை புரிந்தனர். அதிகமானவர்கள் தாம் படையில் சேர்ந்த நோக்கம் முடிந்துவிட்டது என நினைத்து படையை விட்டு விலகிவிட்டனர்.

அதன் பிறகும் தொடர்ந்து படையில் இருந்தவர்கள் தொழில் ரீதியாகவே தமது பணியைக் கொண்டுசென்றனர். தமது இனத்தைப் பாதுகாக்க வேண்டும்; சம்பளம் ஏதும் தேவையில்லை என்று கூறி அப்போது படையில் இணைந்த முஸ்லிம் இளைஞர்கள் முஸ்லிம் - தமிழ் உறவு வலுப்பெறத் தொடங்கியதும் அந்த நோக்கத்தைக் கொண்டு செல்ல வேண்டிய அவசியம் அங்கு இருக்கவில்லை.

அதனாலேயே அதிகமானோர் படையை விட்டுவிலக, சொற்பமானோர் மாத்திரம் தொழில் ரீதியாக தொடர்ந்தும் படையில் இருந்தனர். ஆண்கள் எவரும் சொந்த ஊர்களில் இருக்கவில்லை. வேறு ஊர்களுக்கு மாற்றப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ் - முஸ்லிம் உறவு படிப்படியாக வளரத் தொடங்கியது. இடையிடையே சில அசம்பாவிதங்கள் நடைபெற்றாலும் - 90களில் பாதிக்கப்பட்டோர்கள் கசப்புணர்வுடன் செயற்பாட்டாலும் - இன உறவைக் குலைக்கும் வகையில் ஆங்காங்கே சில சக்திகள் செயற்பட்டாலும் அவை எதுவும் பாரியளவில் தாக்கம் புரியவில்லை.

இரண்டு இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டியதன் அவசியத்தை இரண்டு இனங்களுமே விளங்கிக்கொண்டிருந்ததால் இன உறவைக் குலைக்கும் சதித் திட்டங்களுக்கு தமிழ்-முஸ்லிம் மக்கள் அடிபணியவில்லை.

ஆனால், கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து கிழக்கில் முஸ்லிம்கள் மீது இடம்பெற்ற தொடர் தாக்குதல்கள் படுகொலைச் சம்பவங்கள் போன்றவை முஸ்லிம்களை அச்சத்திற்குள்ளாக்கின.

தேர்தல் தினத்தன்றே கல்முனையில் முஸ்லிம் மாணவி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது. அக்கரைப்பற்று பள்ளிவாசல் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஐந்து முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் ஏ.எல்.ஓ.எம்.பழீல் சுட்டுக்கொல்லப்பட்டார். ஏறாவூரில் இரண்டு முஸ்லிம்கள் கடத்திச் செல்லப்பட்டு வாழைச்சேனையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மூதூர், தோப்பூர் போன்ற பகுதிகளிலும் தமிழ் - முஸ்லிம்களுக்கிடையே கலவரங்கள் ஏற்பட்டன. அங்கு இரு தரப்பிலும் உயிரிழப்புகள் ஏற்பட்டன.

இவ்வாறு சமகாலத்தில் கிழக்கில் பல இடங்களில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டன. இதனால் முஸ்லிம்களின் பாதுகாப்புக் கேள்விக் குறியாகிவிட்டது. பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு முஸ்லிம் தலைவர்கள் அரசிற்கு வேண்டுகோள் விடுத்தபோதிலும் அவை சரியான முறையில் வெற்றியளிக்கவில்லை.

திட்டமிட்டு தாக்குதல் நடத்தியவர்கள், அத்தாக்குதல்களை நிறுத்தியதும் தான் தாக்குதல் சம்பவங்கள் குறைந்ததோடு முஸ்லிம்கள் மத்தியில் நிலவிய அச்சமும் குறையத் தொடங்கியது.

இருப்பினும் இத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்ற சமயம் மீண்டும் ஒரு 90ஆம் ஆண்டு யுகம் ஏற்பட்டுவிடுமோ என முஸ்லிம்கள் அஞ்சினர்.

90களில் முஸ்லிம்கள் ஒரேசமயத்தில் அதிகளவில் கொல்லப்படுவதற்கு முன் ஆட்கடத்தல் போன்ற சிறுசிறு சம்பவங்களே இடம்பெற்றன. அச்சம்பவங்களை ஒத்த சம்பவங்களாகவே இச்சம்பவங்கள் அமைந்திருந்தன. இதனாலேயே மீண்டும் ஒரு 90ஆம் ஆண்டு யுகம் ஏற்பட்டு விடுமோ என கிழக்கு முஸ்லிம்கள் அஞ்சினர்.

உடனடியாகப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும்- இல்லையேல் முஸ்லிம்கள் தானாக ஆயுதம் ஏந்தவேண்டி வரும் என்றும்- முஸ்லிம்களுக்கு இராணுவத்தின் தனியான படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுவந்தன.

இந்தக் கருத்துக்களில் தனியான முஸ்லிம் படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட கருத்து சரியானதா அல்லது பிழையானதா என கலந்தாலோசிக்கப்படுவதற்கு முன்பு இதை உருவாக்க அரசு திடீர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இது முஸ்லிம்களின் வரவேற்பையும் பெற்றுள்ளது; எதிர்ப்பையும் பெற்றுள்ளது. திடீரென இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு துடிப்பதன் காரணம் சமாதானப் பேச்சில் முஸ்லிம் தனித்தரப்பை வழங்கியிருப்பதற்கே என கூறப்படுகிறது.

சமாதானப் பேச்சில் முஸ்லிம் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என முஸ்லிம்கள் கேட்டதன் காரணம், முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அதற்கான தீர்வைப் பெறுவதற்கே அன்றி வேறெதற்குமில்லை.

முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முன்னிலை வகிப்பது பாதுகாப்புப் பிரச்சினைதான். இந்தப் பாதுகாப்புப் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொடுத்துவிட்டால் பிரச்சினை அடங்கிவிடும். உதிரிப் பிரச்சினைகளை முஸ்லிம் தலைவர்களினூடாக பேசி மொத்தப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடலாம் என்பது அரசின் நோக்கம்.

கிழக்கில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினையைத் தீர்க்க சிங்கள இராணுவத்தினரை நியமிப்பதை விட முஸ்லிம் இராணுவத்தினரை நியமித்தால் அவர்கள் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவே செயற்படுவர் இதனால் பாதுகாப்புப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொடுத்துவிடலாம் என்பதே அரசின் திட்டம்.

இந்தத் திட்டத்தின் மூலம் முஸ்லிம்களுக்கு ஓரளவு நன்மை இருக்கின்ற போதிலும் தமிழ் - முஸ்லிம் உறவுகளுக்கு இது ஆபத்தாக அமையும் என்பதை அரசு நன்கு அறியும். இருந்தாலும் அரசிற்குத் தேவை அதுதான்.

இம்மாதம் ஜெனிவாவில் இடம் பெறவிருக்கும் இரண்டாம் கட்டப் பேச்சில் முஸ்லிம்களுக்குத் தனித்தரப்பு வழங்கப்பட வேண்டும் என தொடர்ந்தும் முஸ்லிம்கள் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கின்றனர். தனித்தரப்பு வழங்கப்பட முடியாது என்ற அரசின் நிலைப்பாட்டில் இதுவரை எந்த மாற்றமும் இல்லை.

தனித்தரப்புக் கேட்டுக் குரல் எழுப்பும் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை மாற்றுவதற்காகவே அரசு இந்த தனி முஸ்லிம் படைப் பிரிவையே உருவாக்குகின்றது எனச் சொல்லப்படுகின்றது. என்றாலும் தனித்தரப்புக் கோரிக்கையை இனிமேல்தான் வலுப்படுத்த வேண்டிய அவசிய நிலையில் முஸ்லிம் தலைவர்கள் உள்ளனர்.

தனி முஸ்லிம் படைப்பிரிவு விவகாரத்தைக் கருத்திற் கொண்டு தனித்தரப்பைப் பெறுவதற்கான முயற்சிகள் முஸ்லிம் தலைவர்கள் எந்தளவு ஆதரிக்கப் போகிறார்கள் என்பதை முஸ்லிம்கள் கூர்மையாக அவதானிக்கத் தொடங்கிவிட்டனர்.

**எம்.ஐ. முபாறக்**

---

# வைரம்

**ந**வரத்தினங்களில் விலை உயர்ந்தது மாணிக்கம். என்றாலும் வைரம்தான் பெரும்பாலானோரின் விருப்பமாக இருந்து வருகிறது. வைரங்களைப் பற்றி பல ஆச்சரியமான விஷயங்களும், கதைகளும் இன்னும் மக்களிடையே பிரபலம். லேசான எடை கொண்டதுதான் என்றாலும், இதர ரத்தினங்களை விட மதிப்பு வாய்ந்தது வைரம். கண்ணைப் பறிக்கும் ஜொலிஜொலிப்புதான் வைரத்துக்கு உலகப்புகழைப் பெற்றுத் தந்துள்ளது. நிறங்களை, அனைத்துத் திசைகளிலும் சிதறடிக்கும் அபூர்வகுணம் இதற்குண்டு. ஒரு சிறிய அளவு வைரம் கூட இருட்டில் மினுமினுத்துக்கொண்டிருக்கும். விலைமதிப்பற்ற பிரகாசத்தைக் கொண்டிருப்பதாலேயே இவை ஒரு காலத்தில் மன்னர்களின் மணி மகுடங்களை அலங்கரித்தன. பொதுவாக, எந்தவொரு வீரியமிக்க அமிலமும் வைரத்தை ஒன்றும் செய்யமுடியாது. மேலும், சாதரண வெப்பநிலையில் உள்ள இரசாயனங்கள் எதுவும் வைரத்தை பாதிக்காது இந்தக் கடினத்தன்மை காரணமாகவே 'மிகச் சிறந்த ரத்தினம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறது. வைரம் உலகத்தில் உள்ள பெரும்பாலான பொருட்களில் கீறலை ஏற்படுத்திவிடலாம். ஆனால் வைரத்தில் கீறலை ஏற்படுத்த முடியாது. வைரத்தை பட்டை தீட்டுவது, பொலிஸ் போடுவது, அறுப்பது போன்றவற்றுக்கு வைரத்தின் துகழ்களே பயன்படுத்தப் படுகின்றன. எந்த அளவுக்கு வைரம் பிரகாசிக்க வேண்டுமோ அந்த அளவுக்கு வைரத்தாள் நுண்ணியதாக இருக்கும். பண்டைக்காலம் முதலே ஐரோப்பிய நாடுகளில் இளைஞர்கள் தங்கள் வருங்கால மனைவிக்கு, வைர மோதிரம் அணிவிக்கும் பழக்கம் இருந்து வந்துள்ளது. இன்னமும் திருமண நிச்சயத்தின்போது வைர மோதிரம் அணிவிக்கும் சடங்கு நடைமுறையில் உள்ளது. ஆனால், மேல் வர்க்கத்தினர் மட்டுமே இதை கடைப்பிடிக்கின்றனர். வைரமானது வெவ்வேறு கோணங்களில் அறுத்து பொலிஸ் செய்யப்படுவதால், அதனுள் புகும் ஒளி பன்மடங்காக வெளிப்பட்டு நம் கண்களை அடைக்கிறது. வைரம் பட்டை தீட்டுவதில் இன்று உலகம் முழுவதும் பிரபலமாக உள்ள ரெக்னிக், 'பிரிலியன் கட்' இந்த முறையில் பட்டை தீட்டப்பட்ட வைரத்தில் மொத்தம் 58 மேல்மடிப்புகள் இருக்கும். பல நாடுகளில் வைரம் கிடைத்தாலும் இதற்கென பிரத்தியேகமான சர்வதேச சந்தை ஒன்று உள்ளது. உலகிலேயே அதிகளவிலான வைரங்கள், ஆபிரிக்க நாடான காங்கோ, கேப்டவுன், அங்கோலா, மற்று ஔரேஞ்ச் நதிப் பிரதேசம் ஆகிய இடங்களில் கிடைக்கின்றன. இந்தியாவில் கோல்கொண்டா மற்றும் பன்னாவில் வைரச்சுரங்கங்கள் உள்ளன.

சுரங்கங்களில் இருந்து வெட்டி எடுக்கப்படும் வைரம் முதல் ரகம், இரண்டாம் ரகம் என பிரிக்கப்படுகிறது குறையில்லாத வைரம், ஆபரணங்கள் செய்யப் பயன்படுத்தப் படுகிறது. ஒளி ஊடுருவும் தன்மை குறைந்த வைரம், 'கறுப்பு வைரம்' என்று அழைக்கப் படுகிறது. இரண்டாம் ரகத்தைச் சேர்ந்த இந்த வைரம், தொழிற்சாலைகளில் பயன்படுத்தப் படுகிறது. தற்போது, நிறமற்ற வைரங்களுக்கு நிறமூட்டுவது நல்ல வருமானத்தைத் தரும் தொழிலாக உருவெடுத்துள்ளது.

கறுப்பு மற்றும் அதிக கடினத்தன்மையுள்ள வைரங்கள் பேஷன் உலகில் இடம்பிடித்துள்ள போதிலும், இன்னும் அவை வெளிப்படையான பயன்பாட்டிற்கு வரவில்லை ஒரேஞ்ச் மற்றும் சிவப்பு நிற வைரங்கள் மிகவும் அரிதாகவே கிடைக்கும் அவற்றின் அளவும் சிறியதாகவே இருக்கும். ஷேம்பெயின், சின்னமோன் என்ற பெயரில் அழைக்கப்படும் வைரங்கள் மிகுதியாக கிடைக்கின்றன. இவை பழுப்பு நிறம் உடையவை. பச்சை நிறமுள்ள வைரங்கள் ஒலின் அல்லது பிரோன்ஸ் என்று அழைக்கப் படுகின்றன.

இவற்றுக்குக் கணிசமான தேவை இருந்து வருகிறது.

வைரங்களை நன்கு ஆய்வுசெய்த பிறகே வாங்கவேண்டும். உண்மையான வைரங்களில் எக்ஸ்ரே கதிர்கள் ஊடுருவும். ஆனால் போலி வைரங்களில் அப்படி இல்லை மேலும் உண்மையான வைரம் மீது ஒரு துளி தண்ணீர் விட்டால் அது கோள வடிவத்திலேயே அதிக நேரம் இருக்கும் போலி வைரமாக இருந்தால் தண்ணீர் உடனே சிதறிவிடும்.

# புலிகளை வெல்ல முடியாது

கண்காணிப்புக் குழுவின் முன்நாள் தலைவரான ஹப்ருப் ஹோக்லெண்ட், தான் பதவி விலகுவதற்குச் சிறிது நாட்களுக்கு முன்னர் கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைவரான ஊல்ப் ஹென்றிக்சனுடன் சென்று பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷவைச் சந்தித்தாராம்.

அப்போது அவர் ''புலி கெரில்லா (Tiger guerrillas)க்களை சிறிலங்கா இராணுவம் யுத்தத்தில் வெற்றி கொள்ள முடியாது. அல்குவைதாவைப் போல் தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் சுதந்திரத்துக்காகப் போராடுபவர்கள்'' என்று சொன்னாராம்.

இதைக் கேட்டு கடும் சினம் அடைந்த பாதுகாப்புச் செயலாளர் ''நீங்கள் குறிப்பிட்ட வேலை ஒன்றைச் செய்வதற்காக வந்திருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் பணியை திறம்படச் செய்யவேண்டுமானால் பக்கச் சார்பாகச் செயற்பட வேண்டாம்'' - என்று சத்தமிட்டாராம்.

அதைத் தொடர்ந்து ஆலோசனை கூறும் வகையில் அவர்களுடன் உரையாடிய பாதுகாப்புச் செயலாளர்,

''நீங்கள் முதலில் இந் நாட்டின் சரித்திரத்தையும் கலாசாரத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். தமிழரும் சிங்களவரும் பலநூற்றாண்டுகளாக இங்கு ஒற்றுமையாக வாழ்ந்திருக்கின்றனர். இப்போது இங்கே வந்திருந்து அவ்வாறு இருக்க முடியாது என்று சொல்கிறீர்கள்'' என்று சொன்னாராம். ஹோக்லண்ட் விடுதலைப் புலிகளை விடுதலை வீரர்கள் என்று வர்ணித்த விடயம் ஜனாதிபதியின் காதிலும் போடப்பட்டுள்ளதாம்.

# நாடாளுமன்றத்துக்கு பசில் ராஜபக்ஷ

உள்ளூராட்சி தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்தர கூட்டமைப்பு பெற்ற வெற்றி எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்தவுக்கு கிடைத்துள்ள 'போனஸ்' என்று கூறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் சந்தோஷத்தில் மிதக்கிறார்களாம்.

கட்சியின் வருடாந்த மாநாடு முடிவடைந்ததும் மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட உள்ளார் என கட்சியின் உள்வீட்டுப் பிள்ளைகள் கிசுகிசுக்கிறார்களாம்.

கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் அவர் பொதுத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது பற்றித் தீர்மானிப்பாராம். பொதுத் தேர்தல் நடத்துவதாக அவர் தீர்மானித்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இ.தொ.க.வுடன் தேர்தலை ஒப்பந்தங்கள் செய்யப்படுமாம். ஜே.வி.பி. தொடர்பாக ராஜபக்ஷ பொறுத்திருந்து பார்ப்பதற்கு முடிவு செய்துள்ளாராம்.

மஹிந்த பொதுத் தேர்தல் நடத்துவது பற்றி இன்னும் தீர்க்கமாக முடிவு செய்யவில்லையாயினும் அவரது நம்பிக்கைக்குரியவர்கள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என விரும்புகின்றார்களாம். அவர்களில் ஒருவர் ஜனாதிபதியின் சகோதரான பசில் ராஜபக்ஷவாம்.

தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தெற்கில் உள்ள தொகுதி ஒன்றில் போட்டியிட பசில் தீர்மானித்துள்ளாராம். நாடாளுமன்றத்தில் மஹிந்தவின் வெற்றிடத்தை நிரப்ப இவர் உத்தேசித்துள்ளாராம்.

# ஜாதிக ஹெல உறுமயவுக்கு 135 வாக்குகள் மட்டும்

நடைபெற்று முடிந்த மினி தேர்தல்களில் செம அடி வாங்கியது ஜே.வி.பியே. 266 உள்ளூராட்சி சபைகளில் ஒன்றை மட்டுமே கைப்பற்றியுள்ள இந்தக் கட்சி கிழக்கு மாகாணத்தில் படுதோல்வி அடைந்துள்ளது.

இந்த மாகாணத்திலுள்ள பெரும்பான்மை சிங்கள வாக்குகள் தமக்கே என்று தம் பட்டம் அடித்த இவர்களால் அம்பாறை நகரசபைக்கான தேர்தலில் 1200 வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. திருகோணமலை மற்றும் சேருவில நகரசபைகளுக்கான தேர்தல்களில் 1000 வாக்குகளை மட்டுமே ஜே.வி.பியால் பெற முடிந்துள்ளது.

ஆச்சரியமான மற்றொரு விடயம் என்னவென்றால் பௌத்தர்களின் புனித தலமான அனுராதபுரத்தில் ஜாதிக ஹெல உறுமயவுக்கு கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கை 135 மட்டுமே.

# மீசையில் மண் படவில்லை

மினி தேர்தலில் படுதோல்வியடைந்த ஜே.வி.பியினர் மீசையில் மண்படவில்லை என்று கூறி மீசையை முறுக்குகிறார்களாம்.

தமக்கு வாக்களித்தோரின் தொகை அதிகரித்துள்ளதாகக் கூறும் இவர்கள் முன்பு இருந்ததை விட இப்போது தம்மிடம் 100 உள்ளூராட்சி சபை அங்கத்தவர்கள் அதிகமாக உள்ளனர் என்றும் கூறுகிறார்களாம்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் மணிச்சின்னத்துக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களைக் கேட்டுவிட்டு இப்போது வெற்றிலைக்கு வாக்களிக்கும்படி கேட்டதால் தமது ஆதரவாளர்கள் மத்தியில் அது குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது என்றும் அவர்கள் சொல்கிறார்களாம்.

# வெளியுறவுச் செயலாளர் புதுடில்லி பயணம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் பாகிஸ்தான் சென்று திரும்பிய பாதுகாப்புச் செயலாளர் கோதபய ராஜபக்ஷவும் வெளியுறவுச் செயலாளர் பணிகளுக்காகவும் விரையில் புதுடில்லிக்கு பறந்து செல்ல இருக்கிறார்களாம். இந்திய அதிகாரிகளுக்கு தமது பாகிஸ்தான் விஜயம் பற்றி விளக்கம் அளிப்பதற்காகவே இவர்களின் இந்த விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாம்.

# அமைச்சர் போகொல்லாகம

அமைச்சர் போகொல்லாகம வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் அரச பணத்தை தண்ணீர் போல் வாரி இறைத்து செலவிடுவது பற்றி கண்டனக் கணைகள் தொடக்கப்பட்டுவருவது அனைவரும் அறிந்த விடயமே.

பத்திரிகைகளில் இவரது கண்மூடித் தனமாக செலவு பற்றி செய்திகள் வெளியாகி பரபரப்பு ஏற்படுத்தியதை அடுத்து இவர் தனது மனைவி சகிதம் அலரி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்தாராம்.

இவர் மீது ஏதாவது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற விடயம் மர்மமாகவே உள்ளதாம்.

## சிரிக்க சிந்திக்க சிப்ஸ்


உலகில் அழிந்துவரும் விலங்குகளில் ஒன்றான பண்டா என்ற பனிக் கரடிக்கு ராஜமரியாதை.



'பாசி' என்ற இந்த பண்டா கரடி சீனாவிலுள்ள மிருகக் காட்சிச் சாலையில் ராஜாவாக வலம் வருகிறது. இதைப் பார்க்க மக்கள் கூட்டம் அலை மோதுவதுடன் மற்ற நாடுகளில் உள்ள மிருகக் காட்சிச் சாலைகளுக்கும் பண்டாக்களை அனுப்பி சீனா வருமானமும் ஈட்டி வருகிறது. இந்தப் பண்டா கரடியின் பிறந்த நாள் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி மிருகக்காட்சிச் சாலை ஊழியர் அதற்கு கேக் ஊட்டிய காட்சி.

* * *

மாதவன் நடித்து வெற்றிகரமாக ஓடிய 'ஜே ஜே' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் அமோகா. படம் நன்றாக ஓடியும் அவருக்கு தமிழில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அந்தப் படத்தில் முழுவதும் சேலையில் வந்து அமைதியாகத் தோற்றம் அளித்த அவர், சரியான வாய்ப்புகள் கிடைக்காததால் கவர்ச்சிக் கன்னியாக மாற விரும்பினார்.



ஆந்திர டைரக்டர் ராமல் கோபால் வர்மாவின் 'ஜேம்ஸ்' என்ற படத்தில் கவர்ச்சியாகத் தோன்றினார். இப்போது முழுநேர கவர்ச்சி நடிகை போல் மாறிவிட்டார். 'தரனா சரேரி ஹை' என்ற இந்தி வீடியோ ஆல்பத்தில் படுகவர்ச்சியாக உடை அணிந்து ஆட்டம் போட்டிருக்கிறார். அவர் அணிந்திருக்கும் உடையை 'பிகினி' உடை என்கிறார்கள். தங்க நிறத்தில் உடை அணிந்து ஏராளமான தங்க நகைகளை கழுத்தில் போட்டுக்கொண்டு ஆடியும் அமோகாவால் ரசிகர்களைக் கவர முடியவில்லை.

இந்தியில் அவரது பெயர் நிஷா கோத்தாரி. அவரது கவர்ச்சி ஆட்டத்தைப் பார்த்தாவது தமிழில் மீண்டும் வாய்ப்பு வருமா? என்பது தெரியவில்லை. ஆனால் அவரை கவர்ச்சிக் கன்னியாக மாற்றிய ராம்கோபால் வர்மா தனது அடுத்த படத்தில் பத்திரிகை நிருபராகக் கௌரவமான வேடம் கொடுத்திருக்கிறாராம்.

* * *

படத்தில் இருப்பவர் அமெரிக்காவின் ஹவாய் தீவைச் சேர்ந்த காலின் போர்ட்டர். அவர் தனது இடது கையில் வைத்திருப்பது சாதாரண மாங்காய் அல்ல. 2.50 கிலோ எடையுடன் அவரது தோட்டத்தில் விளைந்து, 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள மாங்காய். அவர் வலது கையில் வைத்து இருக்கும் மாங்காயும் அவரது தோட்டத்தில் விளைந்ததுதான். அதன் எடை 1 கிலோ!



* * *

மும்பையில் பிரபல ஆடை வடிவமைப்பாளராகத் திகழ்பவர் ரீது. நவீன நாகரிகத்திற்கு ஏற்ப ஆடைகளை வடிவமைப்பதில் கில்லாடி. பிரான்சில் 'பாஷன்' கலை கற்றவர்.

இவர், தனது அனுபவங்களைப் பற்றி ஒரு புத்தகம் எழுதினார். இந்தப் புத்தக வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. நடிகர் அக்சய் குமாரை வைத்து இப் புத்தகம் வெளியிடப்பட்டது.

இதன் விலை என்ன தெரியுமா? ரூ.1லட்சம்தான். மொத்தம் 100 புத்தகங்களே அச்சிடப்பட்டுள்ளன. இந்த 100 புத்தகங்களும் விற்கப்பட்டாலே ரீதுவுக்கு ரூ.1 கோடி கிடைத்து விடும்.

இது பற்றி ரீது கூறுகையில், ''இது எனது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் அல்ல. முழுக்க முழுக்க ஃபாஷன் உலகில் எனது அனுபவம் பற்றியது'', என்று தெரிவித்தார்.

* * *

பழங்களை தோல் உரித்து வெட்டிச் சாப்பிடுவதற்குக் கூட அமெரிக்காவில் கருவிகள் கண்டு பிடித்துள்ளனர். உங்களுக்குத் தேவையான பழங்களையோ - காய் கறிகளையோ -படத்திலுள்ள இந்தக் கருவியில் வைத்துவிட்டு அழுத்தினால்-உடனடியாக அவைகள்-துண்டாகி விடும். சிறியது-பெரியது-என-நமது விருப்பத்திற்கேற்ப-அளவை இதில் அமைத்துக் கொள்ளலாம். இப்படியே-போனால் வாழைப்பழத்தோலை உரிப்பதற்குக் கூட கருவி வந்துவிடும் போலிருக்கிறது!



### தூரம் அதிகமல்ல

அன்பே!
பிரிவென்ற பிடிக்குள்
நாம்
சிக்கிக்கொண்ட போதும்,
நினைக்க நினைக்க
இனிக்கும்
உன் நினைவுகளில்நான்
இன்னமும்
உயிர் வாழ்கிறேன்!
கடல் கடந்து
மலை தாண்டி
வானம் தொட்டு
பாலைவனத்துக்கு
நான்
பறந்து வந்தபோதும்...
நமக்கிடையே
உள்ளதென்னவோ
மூச்சுக்காற்று
முட்டுகிற தூரம்தான்!

* * *

சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படும் திருமணம் நரகம் ஆவது ஏன்?

ரொக்கத்தில் நிச்சயிக்கப்படுவதால்!

* * *



''உங்க பிள்ளை உலக உருண்டையைப் பார்த்து என்னவென்று கேட்கிறானே!''

''அவனை உலகம் தெரியாப் பெண்ணாக வளர்த்துட்டேன் அதுதான்.''

# எனது அன்புக்குரிய சகோதரிகளே!



எல்லா உறவுகளையும் தனக்குள் அடக்கிய ஒரே உறவு வாழ்க்கைத் துணையே.

இவ்வாறான மகத்தான உறவு மன அமைதியைக் கெடுக்கும் வகையில் முறிந்து போனால்....? கணவன் மனைவிக்கிடையே கருத்து மோதல் ஏற்பட்டால்....? அதுவே காலப்போக்கில் இருவருக்குமிடையில் நிரந்தர இடைவெளியை உண்டாக்கிவிடும் என்பதில் நீங்கள் தெளிவாக இருங்கள்.

கணவன் மனைவி சண்டை என்பதே ஈகோவின் அதாவது ஆணவத்தின் வெளிப்பாடுதானே! இதுவே அவர்களின் மிகப் பெரிய பலவீனம் கூட. எனவே கணவன் மனைவி இல்லற வாழ்க்கையில் இன்பம் காண வேண்டுமென்றால் இருவருக்குமிடையில் ஈகோ இருக்கக்கூடாது.

கணவனும் மனைவியும் ஈருடலாயினும் ஒருயிராக இருந்து இன்பத்தை, அமைதியை அனுபவிக்க வேண்டும். எப்போது இவர்கள் இருவரில் ஒருவரிடம் ஈகோ புகுந்து விடுகிறதோ அப்போதே குடும்ப வாழ்வில் சந்தோஷம் தொலைந்து விட்டது என்பதுதான் அர்த்தம்.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால் கணவன் மனைவி இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள அன்பில் உள்ள உண்மைதான் அவர்களுக்கிடையே உள்ள உறவின் மகத்துவத்தை அதிகப்படுத்தும்.

ஆனால் சிலசமயம் கருத்து வேறுபாடுகளால் பரஸ்பர அன்பு பாழாகக் கூடும். எனவே அவ்வாறு கருத்து முரண்பாடு உங்கள் இருவருக்குமிடையில் ஏற்படாது பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வாறு ஏற்பட்டாலும் அதை கூடிய விரைவில் சீர்செய்து விடுங்கள்.

சிறிய கருத்து வேறுபாடு கூட உங்கள் பொன்னான வாழ்க்கையைப் பாழாக்கி விடும் என்பதை மறக்க வேண்டாம்.

இனிமையான வார்த்தைகளே தம்பதியருக்குள் இடைவெளியை அகற்றும் அருமருந்து என்பதை என்றும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

வாழ்த்துக்கள்.
மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்.

ஞானம்

## பெண்

### புறப்படு பெண்ணே!

உளியெடுத்த கரங்கள்
சிலை வடிக்கும்!
உலகை திருத்த மகளிர்
படை கிளம்பும்!
தடை விதித்த கரங்கள்
வழி திறக்கும்!
சிறை பிடித்த மனங்கள்
கதவுடைக்கும்!
புறப்படு பெண்ணே
புதுயுகம் படைக்க!!

ஷீலானி

## சமைக்க சுவைக்க

### இறால் சேமியா

**தேவையானவை:**

| | |
|---|---|
| சுத்தம் செய்த இறால் | - 1/2 கிலோ |
| சேமியா | - 1/2 கிலோ |
| இஞ்சி வெள்ளைப்பூடு அரைத்த விழுது | - 2 தேக்கரண்டி |
| கறுவாப்பட்டை கராம்பு | - 1/2 தேக்கரண்டி |
| பெரிய வெங்காயம் | - 2 |
| தக்காளி | - 2 |
| கொத்தமல்லி இலை | - 2 தேக்கரண்டி |
| தேங்காய்த் துருவல் | - 2 தேக்கரண்டி |
| பச்சைப் பட்டாணி | - 100 கிராம் |
| கரட் துருவல் | - 100 கிராம் |
| முந்திரிப்பருப்பு (கஜு) | - 50 கிராம் |
| கேசரித்தூள் | - 2 சிட்டிகை |
| மிளகாய்த்தூள் | - 2 தேக்கரண்டி |
| நெய் | - தேவைக்கேற்ப |
| எண்ணெய் | - தேவைக்கேற்ப |
| உப்பு | - தேவைக்கேற்ப |



**செய்முறை:**

தக்காளி, மல்லி இலை, வெங்காயம் ஆகியவற்றை தனித்தனியாக வெட்டி வைக்கவும். கறுவாப் பட்டையை தூளாக்கவும். முந்திரிப்பருப்பை நெய்யில் வறுக்கவும். சேமியாவை எண்ணெய் விட்டு இளஞ்சூட்டில் வறுக்கவும். பச்சைப்பட்டாணி, கரட் இரண்டையும் ஒன்றாக வேக வைக்கவும்.

பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி, சூடானதும் வெங்காயத்தைப் போடவும். வெங்காயம் நன்கு வதங்கியதும் இறாலைப் போட்டு சிவக்க வதக்கவும். இஞ்சி பூண்டு விழுது, உப்பு, மிளகாய்த் தூள், கறுவாப்பட்டை, கராம்பு சேர்க்கவும். இறுதியாக தக்காளி சேர்த்து வதக்கவும். இரண்டு கோப்பை தண்ணீர் சேர்க்கவும். கேசரித்தூள், அவித்த பட்டாணி கரட் சேர்த்துக் கொதிக்க விடவும்.

கலவை நன்கு கொதித்ததும் சேமியாவைப் போட்டுக் கிளறவும். மிதமான சூட்டில் அடுப்பை எரிய விடவும். கலவை பொல பொலவென்று வந்ததும் இறக்கவும். முந்திரிப் பருப்பு, தேங்காய்த்துருவல், கொத்தமல்லி இலையைத் தூவி விடவும்.

விரும்பினால் வட்டமாக நறுக்கிய வெங்காயம், வெள்ளரி, கரட் துண்டுகளாலும் அலங்கரிக்கலாம்.

**இதைச் செய்வது மிகச் சுலபம். சுவையோ அபாரம்.**

## ஆடைகட்டி வந்த நிலவோ



*வெட்கம் கொண்ட வெண்நிலவாய் கடைவாய் சிரிப்பில் உள்ளத்தை கொள்ளை கொள்கிறார் இவர். முல்லைச் சரம் சூடிய கூந்தலும் முழங்கை வரை அலங்கரிக்கும் வளையலும் முதுகை காண்பிக்கும் லோ-கட் ஜாக்கெட்டும், ரோஸ் நிறத் தாவணியும்... இவரை அழகு தேசத்து ராணி என்று பறைசாற்றுகின்றன அல்லவா!*

## வாரம் ஒரு கேள்வி-பதில்

**கேள்வி:-** எனக்கு இப்போது வயது 20. உயர்தரம் கற்றுவிட்டு தற்போது தொழில் புரிகிறேன். நான் 18வயதில் ஒருவரைக் காதலித்தேன். எனது வீட்டார் என்னை ஏசி அடித்து துன்புறுத்தினார்கள். பின்பு நானும் அவரை விட்டுவிட்டேன். தற்போது அவர் வேறு திருமணம் செய்து விட்டார். இப்பொழுது எனது பிரச்சினை என்னவென்றால் நான் தொழில் புரியும் இடத்தில் பல ஆண்கள் என்னோடு பழகுகிறார்கள். சிலர் என்னை விரும்புவதாக கூறுகிறார்கள். நானும் எவ்வவவோ வெறுப்பான கதைகளை அவர்களுடன் கதைப்பேன். அவர்கள் கேட்பதாயில்லை. என்னுடன் பல பெண்களும் வேலைசெய்கிறார்கள் அவர்களுடன் கதைப்பது மிகவும் குறைவு. எங்கள் வீட்டுக்கு வரும் ஒரு ஆணுடன் நன்றாக பாசம் வைத்து பழகினேன். எனது பெற்றோருக்கும் அவரை நன்றாய் பிடித்தது. கொஞ்ச நாட்களாய் நெருக்கமாக பழகுகினார். எனது நெஞ்சுப் பகுதியினை தொடுவார். நான் பயத்தினால் உறைந்துவிடுவேன் முத்தங்கள் தருவார். ஆனால் தற்போது தான் தெரியவந்தது அவர் இன்னுமொரு பெண்ணையும் காதலிக்கிறார் என்றும். அவரிடம் வைத்திருக்கும் நட்பை என்னால் பிரிக்க முடியவில்லை. 29 வயது உடையவருக்கும் 20 வயதுடைய எனக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இது நட்பா? காதலா? எனது யோசனைக்கு தங்களின் உறுதியான ஆலோசனையை தந்து என் மனக் குழப்பத்தை தீர்த்து வைத்து விடவும்?

சுதந்திரா
கனகபுரம், கிளிநொச்சி.

**பதில்:-** சகோதரி நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். அதைப்பற்றி யோசிக்க வேண்டாம். அழகாக, வசீகரமாக இருக்கின்ற பெண்களை தமது வலையில் வீழ்த்துவதற்காக பல வழிகளிலும், பல்வேறு முறைகளிலும் தமது லீலைகளை செய்யும் ஆண்களை நாம் காண்பது உண்டு. அவ்வாறு எதிர்ப்பாலாரைக் கவர்தலுக்காக ஆணோ, பெண்ணோ தமது வசிய வார்த்தைகளை வீசுவது சகஜமே. இருப்பினும் அவ்வாறான வலையில் வீழ்ந்து விடாது மனதை கட்டுப்படுத்தி நடப்பதே ஒழுக்கம்.

உங்களை உங்கள் ஆண் நண்பர் தொட்டு கதைப்பதை தவிர்க்க வழி செய்யுங்கள். திருமணத்திற்கு முன்பு இவ்வாறான சேட்டைகளுக்கு இடம் கொடுப்பது தமிழ் மகளுக்கு அழகல்ல. ஒரு சிலர் தமது உடல் இச்சைகளுக்கு பெண்களைப் பயன்படுத்த எத்தனிப்பர். அவ்வாறுதான் உங்கள் நண்பரும் உங்களை அனுபவிக்கவே முயற்சிக்கிறார். அதற்கு இடமளிக்காதீர்கள். அவர் மற்றொருவரை காதலிப்பதாக கூறியுள்ளீர்களே, அது தெரிந்தும் ஏன் அவர் உங்களை தொடுவதற்கு கொடுக்குறீர்கள்? - ஏற்கனவே உங்கள் காதலுக்கு சிகப்புக் கொடி காட்டிய குடும்பம், இனி பச்சைக்கொடி காட்டும் என்று எவ்வாறு நினைக்க முடியும்? என்னவாக இருந்தாலும் அவரது உறவை தவிர்ப்பதே நல்லது. பெண் என்பவள் கண்ணாடி போன்றவள். உடைந்தால் மீண்டும் ஒட்டமுடியாது. எதற்கும் சிந்தித்து செயற்படுங்கள்.

- விஷாலி -



## பியூட்டி உங்கள் சொய்ஸ்

◈லிப் ஸ்ரிக் பல நிறங்களில் கிடைக்கிறது. என்றாலும் எல்லாருக்கும் எல்லா நிறங்களுமே பொருந்தும் என்று சொல்ல முடியாது. உங்கள் சரும நிறத்திற்கேற்ப லிப் ஸ்ரிக்கை தேர்ந்தெடுப்பது நல்லது.



◈வெண்மையான சருமம் உள்ளவர்களுக்கு கிரிம்ஸன், பிங்க் போன்ற நிறங்கள் எடுப்பாக இருக்கும். ஆலிவ், மஞ்சள் மற்றும் கறுப்பு நிற சருமம் உள்ளவர்கள் வார்ம் அன்ட் ஆரஞ்சு நிறங்களை உபயோகிக்கலாம்.

◈லிப் ஸ்ரிக் பயன்படுத்துவதற்கு முன்பு பவுண்டேசன் ஒரு லேயர் பூசுங்கள். லிப்ஸ்ரிக் தடவிய பிறகு டிஷ்யூ பேப்பரால் உதடுகளை ஒற்றி எடுக்கவும். இது அளவுக்கு அதிகமான மினுமினுப்பு மற்றும் லிப்ஸ்ரிக்கை உறிஞ்சிக் கொள்ளும்.

*லிப் ஸ்ரிக்கை அழிக்க வேண்டுமென்றால் கோல்ட் க்ரீம், பேபி ஓயில் போன்றவற்றைப் பயன்படுத்துங்கள். அதை அழித்த பிறகு உதடுகளில் சிறிதளவு வாஸ்லைன் தடவுவது நல்லது.

★ இசையை மிதமான சத்தத்தில் மட்டுமே போட்டு ரசியுங்கள். மிதமிஞ்சிய சத்தம் அக்கம் பக்கத்தில் உள்ள அயலவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதை மறவாதீர்கள்.

★ நள்ளிரவு வரை வீட்டில் பார்ட்டி நடத்தும் போது அதிரும்படியான நடனம், அதிக இரைச்சல் ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★ வீட்டில் நீங்கள் பேசும் குரல் உங்கள் வீட்டின் நான்கு சுவர்களையும் தாண்டாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

*அன்புக்குரிய சகோதரிகளே!*

*உங்களுக்குரிய இந்தப் பக்கத்தில் கேள்வி-பதில் பகுதி ஒன்றை ஆரம்பித்துள்ளோம்.*

*உங்கள் கேள்வி குடும்பப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம், சமூகப் பிரச்சினை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம் அல்லது தனிப்பட்ட பிரச்சினையாக இருக்கலாம். உங்களுடைய கேள்விகளுக்கு பதில் அளிக்கப்படும். அத்துடன் இப் பகுதிக்கு வாசகர்களாகிய உங்களிடமிருந்து ஆக்கங்களும் [illegible]க்கப்படுகின்றன.*

**உங்கள் கேள்விகள், ஆக்கங்கள் ஆகியவற்றை அனுப்ப வேண்டிய முகவரி:-**

பெண்
சுடர் ஒளி வார இதழ்
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# ஐஸ்வர்யா ராய்

அழகுக்கு இந்தியாவின் சர்வதேச தூதுவர் என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு புகழ் பெற்றவர் ஐஸ்வர்யாராய். கோலிவுட்டிலிருந்து ஹாலிவுட் வரை, 'இந்த பெண்ணுடன் நாம் ஜோடி சேரமாட்டோமா' என ஏங்க வைக்கும் அழகுப் பதுமை ஐஸ்வர்யா, பெங்களூரைச் சேர்ந்த சராசரிக் குடும்பப் பெண்ணாக இருந்த ஐஸ்வர்யா, இந்த உயர்ந்த நிலைக்கு வரப்பட்ட பாடுகள், சந்தித்த சோதனைகள் நிறையவே உண்டு. அவர் முதல் முதலாக உள்ளூர் அழகிப் போட்டி ஒன்றில் பங்கேற்கச் சென்றபோது, 'இந்தப் பெண்ணா... இவளிடம் அப்படி என்ன இருக்கிறது? நெட்டைக் கழுத்தும், முட்டைக் கண்களும், நீண்ட கால்களும்... பார்க்கவே சகிக்கவில்லையே' என்று கமெண்ட் அடித்தார்களாம், அந்த நிகழ்ச்சியை நடத்தியவர்கள். ஆனால், ஐஸ்வர்யா மனம் தளரவில்லை. அதில் அவர்தான் அழகியாக முடி சூடியவர். 'மிஸ் இந்தியா' போட்டியில் அவர் பங்கேற்றபோதும் கூட, அவரை அவமானப்படுத்தும் விதத்தில் பேசியவர்கள்தான் அதிகம்.

உலக அழகியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, அவரை அவமானப்படுத்திய எல்லோருமே அவரது கால்ஷீட் கேட்டு, க்யூவில் நின்றனர். முன்பு தனக்கு நேர்ந்தவற்றை நினைத்து, பதிலுக்கு பழிவாங்கவில்லை அவர்.

திரையுலகில் நுழைந்த பிறகு, ஐஸ்வர்யாவின் ஆரம்ப காலப் படங்கள் வரிசையாகத் தோல்வியைத் தழுவின. ஆனால் தோல்விகள் நிரந்தரமல்லவே. இன்று இந்திய சினிமாவில் அதிகம் சம்பாதிக்கும் நடிகை அவர்தான். ஹாலிவுட்டில் வெற்றிகரமாக நுழைந்திருக்கும் முதல் இந்திய நடிகையும் ஐஸ்வர்யா ராய்தான்.




# பித்தன் பதில்கள்



**தி.கேதி, வட்டக்கச்சி,**

கே:பித்தா! நீர் ஏன் உமது மனைவிக்கு பயப்படுகிறீர்? உமது மனைவி என்ன பிசாசா.... பித்தா?

ப: என்னதான் இருந்தாலும் மண்ணானாலும் மனைவி துரும்பானாலும் துணைவி இல்லையா...! அதுதா[illegible] ஒரு சின்ன.... பயம் [illegible]ற்றது அவளுக்கு குங்பூ [illegible]தரியும் எனக்கு குங்பூ [illegible]தரியாது.....




**தி.பிரி[illegible]:- முள்ளியவளை.**

கே[illegible] அன்பின் பித்தா! பெண்களை இளக்[illegible]ரமாக கதைக்கும் ஆண்களை என்ன[illegible]ன்று நினைக்கலாம்?

ப[illegible]பண்ணென்றே நினைக்கலாம்.. அவ[illegible]ள பெற்றதும் ஓர் பெண் என்ப[illegible] மறந்துவிட்டார்கள் போல....

**திரும[illegible] சிவபாலன் கலா, வட்டகச்சி.**

கே[illegible] அன்பின் பித்தா! உமக்கு உமது மனை[illegible]யால் தொல்லை. எனக்கு எனது கண[illegible]ல் தொல்லை. நாங்கள் இரண்டு பேரு[illegible]பாருக்கும் தெரியாமல் ஓடிப் போய்[illegible]ருமணம் செய்து குழந்தை குட்டி[illegible]ர் பெற்று சந்தோஷமாக குடும்[illegible]ம் நடத்தலாமே! இதைப்பற்றி நீர் என்ன[illegible]னைக்கிறீர்?

ப: [illegible]......ஸ்......ஸ்...... சத்தம் போட[illegible]நு கேள்வியைக் கேளுங்க; என் மனை[illegible] காதில கேட்டு விடப் போ[illegible] .... கல்யாணம் கட்டிவிட்டு ஓடிப்[illegible]ாகலாமா.... இல்ல ஓடிப்போய் கல்யாணம் கட்டலாமா? என்று கொஞ்சம் யோசிக்கிறேன்.... சரி நீங்களும் என் மனைவி மாதிரி என்னிடம் சீதனம் கேட்டால் நான் என்ன பண்றது....

**சு.செல்வி - மிருசுவில்.**

கே: அன்பின் பித்து மாமா... ஒரு சில இளைஞர்கள் தலையில் 2006 எனப் பொறித்திருக்கிறார்களே! இதில் என்ன அர்த்தம் உண்டு?

ப: ஆஹா..... அதுதான் செல்வி 2006 பெஷன்... முன்பெல்லாம் கோப்பையை கவிழ்த்துவைத்து முடி வெட்டி விட்டு 'கப் கட்' என்று திரிந்தார்கள். அது முடிந்ததும் இப்போது இது. இன்னும் என்னென்ன வரவிருக்கிறதோ?

**எஸ்: நிஷா, கொடிகாமம்.**

கே: பெண் நினைக்கும் ஆண் எப்படியிருக்க வேண்டும்?

ப: விஜய் முகம், சரத்குமாரின் உடல் கட்டு, கமலில் பார்வை, ரஜனிகாந்த்தின் நடையுடன் குடிப்பழக்கம் இல்லாமல் ஒருத்தியையே நேசிக்கும் ஒழுக்கமுள்ள வீர மகனாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.



**அ.அமலிகா, புதுக்குடியிருப்பு**

கே: பாரதி அன்று கண்ட பெண்ணுக்கும் இன்று உள்ள பெண்ணுக்கும் என்ன வித்தியாசம் சொல்லும் பித்தா?

ப: அன்று அடுப்பூதிய பெண்கள் இன்று அண்டவெளியில் சஞ்சாரமிடுகின்றனர். சேலைகட்டி சூப்பராக இருந்த அன்றைய பெண்கள் இன்று மேற்கத்திய கலாசாரத்திலே மூழ்கி டவுசர், டீசேட் என்று நீச்சல் உடையில் அலைகின்றனர். அன்றுள்ள பெண்களிடம் அச்சம், நாணம், பயிர்ப்பு, மடம் என்ற குணங்கள் காணப்பட்டன. இன்று அதெல்லாம் இருக்கிறதா என்று தேட வேண்டி உள்ளது. அதெல்லாம் இருக்கிறதா என்று கேட்டாலும் அதெல்லாம் எந்தக் கடையில் விக்கிறாங்க.... கிலோ என்ன விலை? என்று கேட்கிறாங்க. அன்று ஒரு ஒழுக்கத்தின் வட்டத்திலே வாழ்ந்து விட்டாங்க. என்னதான் இருந்தாலும் அந்தக் காலம் போல வருமா....



**மு.செல்லப்பா: சுன்னாகம்**

கே: அன்பின் பித்தருக்கு! ஜே.வி.பியினரோ, ஹெல உறுமயக்காரர்களோ இந்தியப் பிரதமராகவும், அமெரிக்க ஜனாதிபதியாகவும் வந்தால் மேற்படி நாடுகளின் மக்கள் பாடு எப்படி இருக்கும்?

ப:செல்லப்பா... என்னப்பா... தண்ணியில்லாத காட்டில் வாழ வேண்டியவர்களை எல்லாம் ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் ஆக்க சொல்லுறீங்க... மேடையில என்ன கதைக்கிறோம் ஏது கதைக்கிறோம் என்று தெரியாமலே கதைத்துவிட்டு வருபவர்களை போய்.... இந்தியாவை உலகப்படத்தில் இருந்தே எடுத்துவிடுவார்கள். அமெரிக்காவிலிருந்து அனைத்து நாடுகளுக்கும் அணுகுண்டு போடுவதாக பயமுறுத்து வார்கள்.

**சு.சுரேகா, கட்சன் வீதி, வட்டக்கச்சி.**

கே: அன்புள்ள பித்து மச்சி! நான் ஒருவரை உயிருக்குயிராக நேசிக்கிறேன் எனது காதல் உயிருள்ளவரை நீடிப்பதற்கு [illegible] ஐடியா கூறவும்?

ப:மச்சி [illegible] உடனே திருமணம் முடி மச்சி. அதன் பிறகு அவரை காதலி மச்சி.... அப்போ உயிருள்ளவரை நீடிக்கும். போத்திக்கொண்டு படுக்கலாம் படுத்துக்கொண்டும் போத்திக்கொள்ளலாம் என்பது போன்று திருமணம் முடித்தும் காதலிக்கலாம், காதலித்தும் திருமணம் முடிக்கலாம் மச்சி.



**வ. ராஜ்மோகன், பூநகரி.**

கே:அன்பின் பித்தா எனது அபிமான நடிகர் விஜய் என்ன செய்கிறார்?

ப:அவர் வந்து.... வந்து.... நடிக்கிறார்.

## [illegible]சொற்சிலம்பம் போட்டி இல. 206

[illegible]ற்சிலம்பம் 206 போட்டிக்கான விடைகளை எழுதி அனு[illegible]ிவைக்கவேண்டிய கடைசித் தினம் ஏப்ரல் 16ஆம் திக[illegible]ரும். விடைகள் ஏப்ரல் 23ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெ[illegible] பெற்றவர்களின் பெயர்கள் ஏப்ரல் 30ஆம் திகதி சுடர் [illegible]ளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல[illegible]4க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

[illegible]லட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப் பங்[illegible] மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக் காத[illegible]சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்[illegible]யை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முத[illegible]வது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 15[illegible]ாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப் பட[illegible]லர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ் டக்[illegible]ுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படு வா[illegible]ர்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,

கொழும்பு−14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 206

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | |
| 6 | | ■ | 7 | 8 | | | ■ |
| | ■ | 9 | | | | ■ | 10 |
| 11 | 12 | | | | ■ | 13 | |
| ■ | 14 | | | ■ | 15 | | ■ |
| 16 | | | ■ | 17 | | ■ | 18 |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | | ■ | 23 | |

## சொற்சிலம்பம் போட்டி இல. 204

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 உ | த் | 2 த | 3 ம | ன் | ■ | 4 சா | 5 வி |
| ற் | ■ | 6 க | ரு | ■ | 7 மா | தி | ரி |
| 8 ச | 9 ம | ர் | த் | 10 த | ன் | ■ | வு |
| 11 வ | லை | ■ | 12 து | ளி | ■ | 13 இ | றை |
| ம் | ■ | 14 க | வ | ர் | 15 த | ல் | ■ |
| ■ | 16 ச | ம | ன் | ■ | ங் | ■ | 17 க |
| 18 அ | க | ல | ■ | 19 ச | க | ல | ன் |
| 20 க | ல | ம் | ப | க | ம் | ■ | னி |

## சொற்சிலம்பம் போட்டி இல.206

### இடமிருந்து வலம்

1. பாடசாலையின் ஓர் அலகு.
4. ஈராக்கின் தலை வணங்காத் தலைவன்
6. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
7. உலோகத் தகடு
9. வீடு
11. பழையவன் அல்லன்
13. போதை தருவது.
14. ஏக பத்தினி விரதன்
15. வேகம்
16. உயர்திணை, ஆண் பால் ஒருமை, படர்க்கை, சுட்டும் சொல்.
17. மறி
19. இது நக நட்பது நட்பன்று அக நக நட்பதே நட்பு
20. பொருத்தமான/ தகுந்த / நிலை
22. பானைக்கு விசேட உறுப்பு
23. வள்ளல் ஒருவன். சக்கரவர்த்தியுங்கூட. புறாவுக்காகத் தன் தசை அரிந்தவன்.

### மேலிருந்து கீழ்

1. வயலின் எல்லையில் அமைப்பது
2. பாய்
3. மகன்
4. மாலை
5. தாங்கள்
8. பாத்திரம்/கலம்
9. உயிர் பறிப்பவன்.
10. செவி
12. அமில நீர்/ அஸிட்
13. சந்திரன் / அறிவு
15. இது சிறிது. ஆனால் காரம் பெரிது.
16. தேவர் உணவு என்பர்/ சோறு.
17. போத்தலுக்கு மூடி இதில் செய்வர். [illegible] மிதக்கும்
18. இளைய சகோதரன்.
19. பயத்தில் இதயம் அடிப்பது இப்படி.
21. வாழ்

## சொற்சிலம்பம் போட்டி இல. 203

1. என், ஜெய்கணேசன் இல.60, ஆரியபுர, பொகவந்தலாவ.
2. மனோகரன் − விஸ்வினி, இல.26/3, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்.
3. ஜெ.கஜீந்தா, கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்

### பாராட்டுப் பெறுவோர்

1. நிர்மலா ஜெகதேவன், தில்லை நகர், திருமலை.
2. என். ஜே. இரத்தினதயா, ஏழாலை வடக்கு, ஏழாலை.
3. ரி.எஸ்.சயந்தன், அரசடி வீதி, வட்டுக் கோட்டை.
4. சி.ம. தில்லைநாதன், சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி.
5. நெல்சன் ஜெபத்துரை, இல.94, பிரதான வீதி, பண்டாரவளை.
6. ச.சிறீலதா, எழுதுமட்டுவாழ் [illegible] எழுதுமட்டுவாழ்.
7. எஸ்.நீரஜா, இல.14/37, பாரதி [illegible], மட்டக்களப்பு.
8. இறையாளன் − இ[illegible] தென்னிந்திய திரு[illegible] கொக்குவில்.
9. பு. சிவசக்தி, கிராமிய வைத்திய[illegible], ஈச்சிலம்பத்து, திருகோணமலை.
10. அ. பத்மலோசனா, இல.51, டேவிட்[illegible] கொழும்பு −13.

# MicroSoft இன் கற்பனைக் கிண்ணம்




உலகின் முன்னணி தொழில்நுட்பப் போட்டியாகிய கற்பனைக்கிண்ண நான்காவது வருடாந்த போட்டியின் ஊடாக மைக்ரோசொப்.ஃ.ட் நிறுவனம் மீண்டும் ஒரு முறை புத்தாக்கத்திலும் தொழில்நுட்பத்திலும் ஆர்வம் கொண்ட மாணவர்களுக்கு கதவுகளைத் திறந்துள்ளது. கற்பனைக்கிண்ண போட்டியானது உலகின் இளம் உள்ளங்கள் உலகளாவிய ரீதியில் தங்களைஒத்தவர்களோடு போட்டியிடவும், தீர்க்கமான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் நெடுநாள் நீடிக்கக் கூடிய நட்புறவை உருவாக்கிக் கொள்ளவும், உதவுகின்ற அதேவேளை தங்கள் எண்ணங்களை சிறப்பான முறையில் வெளிக்கொண்டு வரவும் வழிவகுக்கின்றது.

கற்பனைக்கிண்ண போட்டியானது முதன் முதலாக மைக்ரோசொப்.ஃ.ட் நிறுவனத்தினரால் மூன்றாண்டுகளுக்கு முன்னர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இது மாணவர்களுக்கான உலகளாவிய முன்னணி தொழில்நுட்பப் போட்டியாக திகழ்கின்றது. இதன்படி மாணவர்கள் தங்கள் புத்தாக்கத் திறனையும் தொழில்நுட்ப அறிவையும் பயன்படுத்தி இப்புவியில் மாற்றத்தை ஏற்படுத்தும் தன்மை கொண்ட மென்பொருளை வடிவமைக்கக் கூடியவர்களாகின்றனர். கடந்த மூன்றாண்டு காலத்தில் 90 நாடுகளைச் சேர்ந்த 20,000க்கும் அதிகமான மாணவர்கள் இந்த பெருமைக்குரிய போட்டியில் வெற்றி வாய்ப்புக்காக முயன்றுள்ளனர்.

இவ்வருட போட்டியானது ஆறு துறைகளில் வடிவமைக்கப்பட்டு போட்டியாளர்கள் வரவேற்கப்படுகின்றனர். மென்பொருள் வடிவாக்கம், அல்கோரிதம், ஹஷிமி திட்டம், புரோகிராமிங் போராட்டம், சிறு திரைப்படம், இன்டர்பேஸ் டிசைனர் ஆகியவையே இவை."மேலும் நல்ல உடல்நலத்துடன் உலகில் நாம் வாழ வகை செய்யும் தொழில்நுட்பத்தை கற்பனை செய்து பார்" என்ற தலைப்பில் அது உருவாக்கப் படுகின்றது. "உடல்நலம்" என்பதற்கான வரை விலக்கணத்தை மாணவர்களே வகுத்து உடல் நலத்துறையில் உண்மையான மாற்றத்தைக் கொண்டு வர தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைத் தான் காணும் முறையில் காட்டி போட்டி ஏற்பாட்டாளர்கள் அனுமதித்துள்ளனர்.


### இலங்கை கற்பனைக் கிண்ண போட்டி

மைக்ரோசொப்.ஃ.ட் நிறுவனமே தேசிய மட்டத்தில் மென்பொருள் உருவாக்கத் துறையில்ஒரு போட்டியை நிகழ்த்தும். இதன் படி இலங்கை மாணாக்கர் தங்கள் புத்தாக்கத்தையும் திறமையையும் வெளிப்படுத்த ஒரு விஷேட வாய்ப்பு கிட்டுகின்றது. தற்போது நிகழ்த்த திட்டமிடப்பட்டுள்ள கற்பனைக் கிண்ண போட்டியில் தனிநபர்களும், நான்கு பேர்வரை இருக்கக் கூடிய குழுக்களும் கலந்து கொள்ளலாம். இந்தப் போட்டியானது சர்வதேச போட்டியின் மையக்கருத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாய் இருப்பதோடு அங்கிகரிக்கப்பட்ட எந்த ஒரு இலங்கைப் பட்டதாரி மாணவரும் இதில் கலந்து கொள்ளக் கூடியதாய் இருக்கும். போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் ஒருவர் www.thespoke.net என்ற இணையத்தளத்தின் வழியாகத் தம்மைப் பதிவு செய்து கொள்ளலாம். நுழைவுக்கான தகமையானது மைக்ரோ சொப்ட்.நெட் பிரேம்வொர்க் 2.0 இல் விண்டோஸ் மேடையில் தாமே சுயமாக வடிவமைத்த இணையத்தள சேவை வழங்குபவராக இருக்க வேண்டும். அத்துடன் விசுவல் ஸ்ரூடியோ குடும்பம் (எக்ஸ்பிரஸ், ஸ்டான்டாட், டீம் சிஸ்டம்) ஆகியவை



இதன் அபிவிருத்திக்கு இன்றியமையாததாக இருக்க வேண்டும்.

தேசிய மட்டத்தில் வெற்றி பெறுபவர் அல்லது வெற்றி பெறும் குழுவானது எல்லா செலவுகளும் பொறுப்பேற்றுக்கொண்டு புது டெல்லியில் இவ்வாண்டு நடத்தப்படும் உலகளாவிய முதன்மை



வெற்றி (சாம்பியன்) போட்டி யில் கலந்து கொள்ள. வசதி இறுதியாக உலகளாவிய முறையில் மென்பொருள் வடிவமைப்பிற்கான துறையில் போட்டி பங்பற்ற அழைக்கப்பட்டு வெற்றி பெறுபவர் மிகப்பெறுமதி மிக்க ரொக்கப் பரிசான அமெடொவர்25,000 பெறும் வாய்ப்பினைப் பெறுவர்.

உலகெங்கும் உள்ள மாணவர்கள் தொழில்நுட்ப முறைகளில் தம்மில் புதைந்திருக்கும் புத்தாக்க ஆற்றல்களை உணர உருவமைக்கப் பட்டதே கற்பனைக்கிண்ண போட்டி. உலகின் எதிர் கால தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை இனம் காணகூடிய சிறப்பானதொரு அரங்கமாக இது அமைந்துள்ளது. இலங்கையின் மைக்ரோ சொப்.ஃ.ட் நிறுவனத்தார் உள்ளூர் தகவல் தொழில் நுட்ப திறமைகளை சர்வதேச அளவிற்கு முன்னேற்ற எடுக்கும் பல்வேறு முயற்சிகளில் ஒரு அம்சமாக இது அமைந்துள்ளது. இத்தகைய போட்டிகள் மாணவர்கள் உலகெங்கும் உள்ள தம் சகாக்களோடும் நிபுணர்களோடும் கலந்துறவாடி ஒத்துழைக்க வகைசெய்கின்றன. இதன்படி அவர்கள் தங்கள் அறிவை பகிர்ந்து கொள்வதுடன் புதிய பாடங்களையும் கற்றுக் கொள்ளக் கூடியவர்களாகின்றனர். சென்ற ஆண்டில் மொரட்டுவ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நான்கு சிறப்பு மாணவர்கள் ஜப்பான் யோக்கோஹோாமா நகரில் நடைபெற்ற மைக்ரோசொப்.ஃ.ட் கற்பனைக்கிண்ணம் 2005 உலகளாவிய முதன்மை வெற்றியாளர் (சாம்பியன்சிப்) போட்டியில் கலந்து கொண்டனர். எல். ஜி. எம். பெரேரா, ஆர். பி. சி ஜயசிறி, எல். ஏ. அமரசிங்க, டபிள்யூ. எம். எஸ். வீரபாகு என்பவர்களே இவர்கள்.

இலங்கை மைக்ரோசொப்.ஃ.ட் கல்வித்திட்ட முகாமையாளர் ஜயசிறி சமரக்கோன் இப்படி கூறுகின்றார்.

''எந்த ஒரு உலகளாவிய அரங்கிலும் வெற்றிகொள்ளும் உள்ளார்ந்த ஆற்றலும் திடசங்கற்பமும் இலங்கை மாணவர்கட்கு இருக்கின்றதென்றபடியால் அவர்கள் கற்பனைக்கிண்ணம் போன்றவற்றில் கலந்து வெளியீட்டுவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்து தருவதை மைக்ரோசொப்.ஃ.ட் தனது கடமையாகக் கருதுகிறது. நாளைய தொழில்நுட்பத்துறை தலைவர்களை உருவாக்கி இலங்கை தொழில் நுட்பத்துறை கலாசாரத்தில் அதிசிறப்பெய்திட மைக்ரோசொப்.ஃ.ட் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாண்டு போட்டியில் கலந்து கொள்ள முன்வரும் அனைவரையும் வெற்றியடைய வாழ்த்துவதோடு இலங்கை மாணவர்கள் கற்பனைக்கிண்ணம் போட்டியில் கலந்து உலகத்திற்கு புத்தொளி காட்டுவர் எனவும் நாம் நம்புகின்றோம்''.

கணினி உலா

அனுராஜ்

---

ICTA
ideas actioned

## நிகழ்ச்சித் திட்டங்கள்

### தொழில்நுட்பக் கட்டமைப்பும் பாதுகாப்புத்தரமும்

**தூரநோக்கு:**

ICT யின் எல்லாப்பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் சிறப்புத் தரத்தின் நன்மைகளை இலங்கை அடையும்

**எதிர் காலத் திட்டம்:**

தொழில்நுட்பங்கள், கட்டமைப்பு, தரம், பாதுகாப்பு, ரகசியம் பேணல் என்பன வற்றையும் ஈ -ஸ்ரீலங்கா முன்னெடுப்பில் சேவையாற்றல், கொடுக்கல்வாங்கல், படிமுறைகள் முறைமைகள் என்பன உட்டபட இனங்கானல்

தேவையான தொழில்நுட்பம், தரம் என்பவற்றை அறிமுகஞ் செய்வதில் முதலுரிமை யுடையதாகவும் இலங்கை சர்வதேச தரப்படுத்தலில் போதியளவு பங்குபற்றியதாகவும் இருத்தல்

புதிய ஆய்வு , அபிவிருத்தி , திறமை என்பன இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றல்

ICTA பொறுப்பேற்றுக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களில் நவீன தொழில்நுட்பம் , கட்டமைப்பு , தரம் என்பனவற்றை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்தல்

இவற்றை நடைமுறைப்படுத்தப் பொருத்தமான பொறிமுறைகளையும் சேவை நிறுவனங்களையும் அமைத்தல் அவை தரமுடையனவாகவும் இருத்தல் .

**நாம் இவற்றை எவ்வாறு அடையலாம் ?**

நிகழ்ச்சித்திட்டத்தினை கவனிக்க சர்வதேசக்குழுவினை அமைத்தல்

முன்னுரிமை கொடுக்கவேண்டிய பகுதிகளை இனங்காணல் , அவற்றிக்கான தரத்தை அபிவிருத்தி செய்தல் , ஒவ்வொரு பகுதியிலும் பிரதான நடவடிக்கைகளைப் புரிதல்

ஓவ்வொரு முன்னுரிமைப்பகுதியிலும் செயற்குழுக்களை அமைத்து செயற்திட்டங்களை உருவாக்குதல்


இவற்றை நடைமுறைப்படுத்த செயற்திட்டங்களின் பொறிமுறைகளை இனங்காணல்.

ICTA நடைமுறைப்படுத்தலை ஒப்பந்த ரீதியில் கொடுக்கும் அல்லது ICTA நிதி அல்லாத வேறு நிதியில் செயற்படுத்த முனையும்

வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்தத் தொடர்ந்து அவதானிக்கும்.




# மிதக்கும் 'சிக்யு' ஆய்வு நிலையம்



ஜப்பானின் அடுத்த அறிவியல் ஆராய்ச்சி விண் அளவுக்கு உயர்ந்து நிற்கப் போகிறது.

ஆழ்கடலில் துளையிட்டு ஜப்பானியர்கள் நடத்தும் இந்த ஆராய்ச்சி உயிரினங்கள் கடலில் தோன்றிய வரலாறுகளை வெளிக் கொண்டுவர உதவுவது மட்டுமன்றி இயற்கையின் சீற்றங்களை முன் கூட்டியே அறிந்து கொள்வதற்கும் உதவுகின்றது.

இந்த ஆராய்ச்சிக்காக ஜப்பானிய நிறுவனமொன்று ஆழ்கடலின் அடித்தளத்தைத் துளைக்கவும், பூகோளத்தை ஆராயவும் உலகத்திலேயே மிகப் பெரிய 'சிக்யு' என்ற ஆராய்ச்சிக் கப்பலொன்றை உருவாக்கியுள்ளது.

இந்த 'சிக்யு' ஆராய்ச்சி நிலையம் பூமியின் உட்புற அதிசயம், பூமித்தட்டுகள் மற்றும் ஆழ்கடலுக்கடியில் நிலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது.

சுமார் 25 ஆயிரம் தொன் எடையும், 192 மீட்டர் நீளமும் உள்ள 'சிக்யு' கடந்த நவம்பர் மாதம் வடக்கு ஜப்பானில் கடலுக்கடியில் நிலத்தைத் துளைத்து தனது ஆராய்ச்சியை ஆரம்பித்தது.

கடலுக்கடியில் துளைத்து மண் மற்றும் இதர பொருட்களை மேலே கொண்டு வந்து அவற்றை ஆராய்ச்சி நிலையத்தில் சோதனைக்குட்படுத்தி வரலாற்று ரீதியான விவரங்கள், எரிமலைகள் பற்றிய தகவல்கள், பூமியின் உஷ்ணம் (Global Warming) போன்றவற்றிற்கான காரணம் என்பவற்றை அறிய உதவியுள்ளது. இந்த ஆய்வின் பங்கு மிகப் பெரியது என்கிறார் இந்த மிதக்கும் 'சிக்யு' ஆராய்ச்சி நிலையத்தின் மேற்பார்வையாளர்.


இந்த இராட்சத 'சிக்யு' கடலின் அடியிலுள்ள தரையில் இருந்து 7 ஆயிரம் மீட்டர் வரை அதாவது 7 கி.மீற்றர் வரை துளையிடக்கூடியது.

பூமித்தட்டுகளை துளையிட்டு இதுவரை மனிதன் சென்றடைய முடியாத ஆழத்திலிருந்து மாதிரிகளை எடுக்க முடியும் என்கிறார் இந்த மிதக்கும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர்.

கடலுக்கு அடியில் நிலவும் அழுத்தங்கள், சூழ்நிலைகள் ஆகியவற்றுக்கு அமைய எந்த வகையான விலங்குகள் அங்கு வாழ முடியும் என்பதை துளையிட்டு எடுக்கப்படும் மாதிரி விலங்குகள் மூலம் அறிய முடிகிறது. அனைத்து சோதனைகளும் வெவ்வேறான அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. சீதோஷ்ண நிலை எப்படி மாறிவருகிறது என்பதையும் அறிய முடிகிறது என்றும் அவர் சொல்கிறார்.

2007 ஆம் ஆண்டில் 'சிக்யு' ஜப்பான் நாட்டில் மிகப் பெரிய ஆராய்ச்சியில் ஈடுபட உள்ளது. பூகம்பம் போன்ற பேரழிவு முன்னறிவிப்புகள் கூட இந்த ஆராய்ச்சியில் முக்கியமானதொன்றாக இருக்கப் போகிறது.

இதிலிருந்து பெறப்படும் வண்டல்கள், மண் மற்றும் பாறைகளின் மாதிரிகளை சோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் கடின பாறை மற்றும் மென்பாறைத் தட்டுகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பதால்- ஒன்றையொன்று அழுத்துவதால்- ஏற்படும் அழுத்தங்கள், தட்டு நகருதல் போன்றவற்றைக் கண்டறிந்து கண்டத் திட்டுகளில் ஏற்படும் மாற்றங்களை அறிய முடிகிறது.




# புளூட்டோ





சூரியக் குடும்பத்திலுள்ள கிரகங்களில் நாம் மிகவும் குறைவாக அறிந்து வைத்திருக்கும் குட்டிக் கிரகம் புளூட்டோ. புளூட்டோவை பற்றி நாம் அறிந்த அனைத்துத் தகவல்களையும் ஒரு சிறிய போஸ்ட் கார்ட்டில் அடக்கி விடலாம். ஆனால் இந்த நிலை இனி தொடரப் போவதில்லை. புளூட்டோவை நோக்கி பயணிக்க இதோ தயாராகிவிட்டது நாசாவின் புதிய நியூட் ஹரிசோன் விண்கலன்.

பலவிதங்களில் புளூட்டோ ஒரு வித்தியாசமான கிரகம் தான். மற்றைய கிரகங்கள் வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகையில் புளூட்டோ மட்டும் நீள்வட்டப் பாதையில் சூரியனைச் சுற்றி வருகிறது. புளூட்டோ அதன் நீள்வட்டப்பாதையில் சூரியனை விட்டு தொலைவில் சென்று கொண்டிருக்கிறது. மீண்டும் அது சூரியனை நெருங்குவதற்குள் 2230ஆம் ஆண்டு வந்துவிடும். புளூட்டோவில் ஒரு நாள் என்பது பூமியை பொறுத்தவரை 6 நாட்கள் 9மணி நேரத்திற்கு சமம். ஒரு வருடம் என்பது நம்மை பொறுத்தவரை 248 வருடங்கள். தவிர புளூட்டோவுக்கு மூன்று சந்திரன்கள் உண்டு. அதன் அளவில் பாதி அளவுள்ள சாரன் எனப்படும் சந்திரனோடு தற்போது புதிதாக மேலும் 2 சந்திரன்கள் (இன்னும் வெளியிடப்படவில்லை) 1999ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அளவில் பார்த்தால் புளூட்டோ சந்திரனை விட சிறியது தான். எனவே புளூட்டோவை ஒரு கிரகமாகவே கருதக்கூடாது, அது ஒரு பெரிய விண்கல்லே என்று சில விஞ்ஞானிகள் போர்க்கொடி உயர்த்தினாலும் பெரும்பாலான விஞ்ஞானிகள் புளூட்டோவை ஒரு கிரகமாக ஒப்புக்கொள்ளலாம் என்று கூறுகின்றனர்.

பூமியிலிருந்து புளூட்டோவுக்குச் செல்லக்கூடிய பயணத்தின் தூரம் எவ்வளவு தெரியுமா? 500 கோடிக் கிலோமீற்றர்கள். இந்தத் தூரத்தைக் கடக்க நமது விண்கலத்திற்கு 13 வருடங்களாகும். ஆனால் நாம் சரியான சமயத்தில் விண்கலனை செலுத்தினால் பயணத்தின் இடையில் குறுக்கிடும் ஜுப்பிட்டர் கிரகத்தின் ஈர்ப்புச் சக்தி எல்லை அருகில் சென்று அதன் உதவியால் விண்கலனின் வேகத்தை அதிகரிக்கலாம்.



**மனித உடம்பில் எத்தனை எலும்புகள் என்று கேட்டால் 206 என சரியாகச் சொல்லி விடுவீர்கள். அவை எந்த அமைப்பில் இருக்கின்றன தெரியுமா?...**

- அச்சு எலும்புகள், முதுகு எலும்புத் தொடர் - 26
- தலை எலும்புகள் - 29
- மார்பு விலா எலும்புகள்-25
- சேர்க்கை எலும்புகள், கை எலும்புகள் - 64
- கால் எலும்புகள் - 62
- மொத்தம் - 206

# அறிவியல் துணுக்குகள்

நத்தைகளில் எண்பதாயிரம் வகைகள் உள்ளன. இரண்டடி நீளத்தில் இருந்து கடுகளவு வரை உருவ வித்தியாசத்தில் கூட நத்தைகள் உள்ளன. நீரில் நீந்துபவை, நிலத்தில் தாவுபவை, ஊர்ந்து செல்பவை, கடலடியில் வசிப்பவை என நத்தையில் பல வகைகள் உள்ளன.

நரிகளில் மிகச் சிறிய நரி 'பென்னைக்'. ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இவை காணப்படுகின்றன. இவை பிறக்கும் போது 800 கிராம் எடையளவே இருக்கின்றன. நன்கு வளர்ச்சியடையும் போது 3 கிலோ எடை இருக்கும்.

யானையின் தும்பிக்கை 40 ஆயிரம் தசைகளால் ஆனது. அதில் ஒரு எலும்பு கூடக் கிடையாது. மெல்லிய ஒலியைக் கேட்கும் ஆற்றலும், கூர்மையான கண் பார்வையும் உடையது யானை. சற்றுத் தொலைவில் உள்ள ஒரு எலியின் காலடி நடத்தைக் கூடப் பார்க்கும் ஆற்றல் யானைக்கு உண்டு.

# கார்பன் 14

தொல் பொருள் துறை ஆராய்ச்சியாளர்கள் பழங்கால படிமங்களின் வடிவத்தைக் கண்டுபிடிப்பதற்கு 'கார்பன் 14' என்னும் முறையை பின்பற்றி வருகிறார்கள். கார்பன் 14 என்பது கரியமிலவாயுவின் அதிர்வலை இயக்க முறையாகும்.

உயிர்வாழ் இனங்கள் எல்லாவற்றிலும் 'கார்பன் 14' காணப்படுகிறது.ஒரு தாவரமோ, அல்லது விலங்கோ இறந்த பின்னர் அதிலிருக்கும் 'கார்பன் 14' அழியத் துவங்குகிறது.மிகவும் மெதுவாக இந்தக் 'கார்பன்14' அழிகிறது.

5730 ஆண்டுகள் ஆனபிறகே உடலில் இருக்கும் 'கார்பன் 14 - இல் பாதி அழிகிறது.



இதன் பிறகு இன்னொரு 5730 ஆண்டுகள் கழித்து இந்தப் பாதியில் இன்னொரு பாதி அழிந்து போகிறது.

1950ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிரபல விஞ்ஞானி டாக்டர் பிராங்க் வில்லார்ட் இந்த முறையை பயன் படுத்தி பண்டையகால விலங்குகள், தாவரங்கள் போன்றவற்றின் வயதைக் கண்டுபிடித்தார்.இறந்த உடலில் இருந்து எவ்வளவு கார்பன் 14 அழிந்துள்ளது என்பதை அவர் துல்லியமாக செயல் விளக்கமாகவும் காண்பித்தார். விலங்கினங்கள் மற்றும் தாவரங்கள் ஆகியவற்றின் வயதை இப்போது 'கார்பன் 14' முறை மூலமே கண்டறிந்து வருகிறார்கள்.இந்த முறையினால் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உயிர் வாழ்ந்த விலங்கினத்தின் வயதைக்கூட கண்டு பிடித்துவிடலாம்.

# மலையக தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

நடந்துமுடிந்த உள்ளூராட்சிச் சபை தேர்தல் முடிவுகள், இதுவரை காலமும் மலையகத் தமிழ் மக்களைத் தவறான வழியில் இட்டுச் சென்ற மலையகத் தலைவர்களுக்கு ஒரு பாடமாக மட்டுமின்றி ஒரு சாட்டையடியாகவும் அமைந்துவிட்டது.

மலையக மக்கள் வழங்கிய தீர்ப்பு , மலையகத்துக்கு முதுகெலும்புள்ள மாற்றுத் தலைமை ஒன்று அவசியம் என்பதை தெட்டத் தெளிவாக வலியுறுத்தி இருக்கிறது.

இதுவரை காலமும் மலையகத் தலைவர்கள் தோட்டத்தொழிலாளர்களை வெறும் மாப் பொம்மைகள் போன்றே நடத்தி வந்துள்ளனர். பிசைந்த மாவைக் கொண்டு ரொட்டி சுடலாம், அதையே கொஞ்சம் தண்ணீர் ஊற்றிக் கரைத்து தோசையாக்கி விடலாம். அது மிஞ்சிவிட்டால் அதனை வேறு ஒரு பலகாரமாகவும் மாற்றிவிட முடியும்.

இப்படித்தான் மலையகத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களை தமது சுயநலத்துக்காக வேண்டிய வேண்டிய திசைக்கு இட்டுச் சென்று படுகுழியில் தள்ளி விட்டுள்ளனர்.

இந்தத் தலைவர்கள் முதலில் தனித்துவம் பேசுவார்கள். தேர்தல்கள் நெருங்கும்போது யானை மேல் ஏறிவிடுவார்கள். அந்தக் கட்சி தோல்வியடைந்துவிட்டால் எந்த விதமான நோக்கமும் இன்றி எந்தக் கட்சி ஆட்சி அமைக்கின்றதோ அதனோடு ஒட்டிக் கொண்டு ஜால்ரா போடுவார்கள். இப்படி பல்டி அடித்தவர்கள் எங்கேயாவது நிரந்தரமாக நின்று பிடித்தார்களா? என்று பார்த்தால் அதுவும் இல்லை.

ஜனாதிபதி தேர்தல் வந்தபோது ஐ.தே.க. வென்றுவிடும் என்ற நப்பாசையில் அரசுடன் ஒட்டிக் கொண்டு சுக போகங்களை அனுபவித்தவர்கள் மீண்டும் குத்துக்கரணம் அடித்தனர்.

இப்பொழுது என்ன நடந்தது - தங்களுக்கு அமைச்சுப் பொறுப்புகள் வேண்டும் அமைச்சர்களாக சுகபோகம் அநுபவிக்க வேண்டும். பேய்களோ, பிசாசுகளோ எதுவாக இருந்தாலும் அவற்றுடன் ஒட்டிக் கொண்டு எரியும் பிணத்தின் ஒரு பகுதியை தாமும் பங்கு போட்டுக் கொள்ளவேண்டும் என பிணம் தின்னிக் கழுகுகளாகிவிட்டனர். மலையகத்தின் பெரும் தலைவர்கள் என்று கூறிக்கொண்டு, ஆறுமுகன் தொண்டமானும் சந்திரசேகரும் வெறும் அமைச்சுப் பதவிகளுக்காகவே அரசுக்கு ஆதரவளிக்க தாமாகவே வந்து ஒட்டிக் கொண்டார்கள். "இவர்கள் சுயநலவாதி கள். இவர்களை நாம், வெற்றிலை வைத்து அழைக்கவில்லை" என்று நான் கூறவில்லை. அரசின் சிரேஷ்ட அமைச்சர்களுள் ஒருவரான அமைச்சர் நிமல்சிறிபாலடி சில்வா இதனை அப்பட்டமாகக் கூறிவிட்டார்.

தேர்தலின் பின்பு அவர் இதனைக் கூறவில்லை. தேர்தலுக்கு முன்னரே கூறிவிட்டார்.

நமது மலையகத் தலைவர்கள் நினைப்பதுபோல் தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றும் மாட்டு மந்தைகள் அல்லர். இந்த ஆறுமுகமும் சந்திரசேகரும் இழுக்கும் இழுப்புகளுக்கு எல்லாம் அவர்கள் பின்செல்ல.

இதுவரை காலமும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுக்கும் மலையகமக்கள் மத்தியிலும், படித்த புத்தியீவிகள் மத்தியிலும் ஓர் இடம் இருந்து வந்தது. ஆனால் இம்முறை அந்த ஆறுமுகம் தொண்டமானுடன் இணைந்து கொண்டது பன்றியுடன் சேர்ந்த கன்றின் நிலைக்குச் சந்திரசேகரனைத் தள்ளிவிட்டது.

இவர்களின் கூட்டை மலையக மக்கள் அங்கீகரிக்கவும் இல்லை; ஏற்றுக் கொள்ளவும் இல்லை. இதனால்தான் இவர்கள் தனித்துவம் என்று கூறிக் கொண்டு சேவலிலிலும் மண்வெட்டியிலும் போட்டியிட்ட இடங்களில் எல்லாம் மண்ணைக் கவ்வி உள்ளனர்.

அதுமட்டுமா மத்திய மாகாணத்தில் இதுவரை தம்வசம் வைத்திருந்த அம்பேகமுவ, நுவரெலியா பிரதேச சபைகளைக் கோட்டைவிட்டுவிட்டனர். தனித்துவத்தை இழந்துவிட்டதுடன் பெரும்பான்மைக் கட்சியுடன் முட்டுக் கொடுத்துக் கொண்டு வர வேண்டிய கேவலமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

தலவாக்கலை-லிந்துலை நகரசபை தேர்தல் முடிவுகள் ஆறுமுகனையும் சந்திரசேகரனையும் மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவையும் மகிந்த ராஜபக்ஷவையும் கூட திக்குமுக்காட வைத்துவிட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் 51 வீதமானவர்கள் தமிழ்வாக்காளர்கள். அவர்களை அடகு வைத்து குளிர் காய்ந்தவர்கள் மலையகத் தலைவர்கள். அதனால் இவர்களுடைய பாச்சா இம்முறை அங்கு பலிக்கவில்லை.

மலையக இளம் சமுதாயம் இப்பொழுது கேள்வி கேட்டும் நிலையில் மட்டுமல்ல எதையும் தீர்மானிக்கும் நிலையில் இருக்கின்றது. இனிமேலும் பெருந் தலைவர்களால் மலையகத் தொழிலாளர்களை ஏமாற்ற முடியாது.

மலையகத்துக்கு துணிவும் , நேர்மையும், முதுகெலும்பும் உள்ள மாற்றுத் தலைமைதான் இன்று தேவை.அதற்கான அத்திவாரம் இப்பொழுது இடப்பட்டுவிட்டது. சந்திரசேகரின் அதிருப்தியாளரான மத்திய மகாணசபை உறுப்பினர் திகாம்பரம் . மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசனுடன் இணைந்து நுவரெலியா, மாவட்டத்தில் தளம் அமைத்துவிட்டனர். தமது தனித்துவத்தை வெளிப்படுத்திவிட்டனர்.

இது எதைக் காட்டுகின்றது? தொடர்ந்தும் ரயில் வண்டியைப் போன்று ஒரே தண்டவாளத்தில் செல்ல மலையக மக்கள் தயாராக இல்லை.

எமக்கு மாற்றுப் பாதைகள் அவசியம். அதனைத் தெரிவு செய்யும் உரிமையும் எமக்கு உண்டு. எனவே எமது மலையகம் மறுமலர்ச்சி பெற வேண்டுமானால் முதுகெலும்புள்ள மாற்றுத் தலைமை அவசியம் என்பதை இந்த உள்ளூர்ராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் உணர்த்திவிட்டன.

-சரா கோகுலன்.



## டேஸ்ட்கடை தணிகாசலம்

## மலையகக் கண்ணோட்டம்



இரா. புத்திரசிகாமணி

# வேலியே பயிரை மேய்ந்தது

'யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் புரியலே. ஊதுபத்திகளுக்கும் பீடிகளுக்கும் பேதம் புரியலே...' இப்படிப் பாடிக்கொண்டு வந்தான் கந்தையா.

கந்தையா மாலைநேரத்தில் கொஞ்சம் போடுவது வழமை. என்றாலும் எதிரே தணிகாசலம் அண்ணனைக் கண்டவுடன் மடித்துக் கட்டியிருந்த சாரத்தை கீழே விட்டபடியே "வணக்கம் அண்ணே..." என்றான்.

"என்ன கந்தையா சாடையா பட்டிருக்க மாதிரி இருக்கு. அதனாலதான் தத்துவப் பாடல்கள் எல்லாம் தாராளமாக வருது போல."

"ஐயோ அண்ணே! அப்படி ஒன்றும் இல்லை. இந்தப் பள்ளிக்கூட வாத்திமாரைப் பற்றித்தான் புலம்பிக்கொண்டு வந்தேன்..."

"என்னது கந்தையா கவலைப்பட்டு புலம்பும் அளவுக்கு என்ன நடந்து போச்சிது."

"அண்ணே! இந்த காயிதத்தை கொஞ்சம் பாருங்க. அது என் மவனுக்கு வந்தது."

"என்ன கந்தையா இப்படி பிள்ளைகளுக்கு வந்த கடிதத்தை எல்லாம் படிக்கலாமா?"

"கொஞ்சம் சொல்லுறதைக் கேளுங்க அண்ணே! இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொடுத்த ஒரு வாத்தியார் கொஞ்ச மோசமான காரியம் பத்தி எழுதி இருக்காங்க அண்ணே."

"அப்படி என்ன கந்தையா அந்த வாத்தியாரு செஞ்சிப்புட்டார்?"

"அந்தக் கண்றாவியை நான் எப்படிங்க அண்ணே சொல்லுறது. சொல்லாம இருக்கவும் முடியல"

"யோசிக்காம சொல்லு கந்தையா; அப்பத்தானே ஏதாவது செய்யமுடியும்."

"அண்ணன் கிட்ட சொல்லாம வேறு யாருகிட்ட சொல்றது."

"அந்த வாத்தியார் பொடியன்மாரோட ரொம்பநல்லா நடப்பாராம். ஒருநாள் வீட்டில் பாடம்படிக்க வந்த ஒரு மாணவரிடம் முறைகேடாக நடந்துகொண்டாராம்."

"என்ன கந்தையா அப்படிச் சொல்லிப்புட்ட? அந்த வாத்தியார் கலியாணம் முடித்தவர்தானே!"

"அண்ணே! பொம்பளைங்களே ஆசைப்படுற மாதிரி அழகான ஒரு பெண்ணைத் தான் கட்டி இருக்காரு. ஆனா அந்த அம்மா இப்ப வெளி நாட்டில இருக்காங்களாம்."

"என்ன கந்தையா பொம்பளையை வெளிநாட்டில் இருக்கவச்சு எல்லாம் இப்படி பொடியன்மாரையா காயப்படுத்துறாங்க?"

"அதுனாலதாங்க அண்ணே இப்ப ஊரே குழம்பிப் போய்க்கிடக்கு"

"அப்படியென்றால் அந்தப் பாடசாலை அதிபர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையா?"

"அண்ணே அந்த அதிபர் சொல்வாராம் சம்பந்தப்பட்ட வாத்திமார் நம்ம பாடசாலையில் இல்லை என்றால் எதுவும் செய்ய முடியாது என்று."

"அது எப்படி கந்தையா பாதிக்கப்பட்ட மாணவன் இந்தப் பாடசாலையில்தானே படிக்கின்றான். அதைக் கேட்க யாரும் இல்லையா?"

"எல்லோரும் இருக்கிறாங்க அண்ணே ஆனா பூனைக்கு மணிகட்டுவது யார் என்று இருக்காங்க."

"இதை இப்படியே விட்டுவிடக் கூடாது. நாலுபேரு ஒன்றாபோயி அதிபரிடம் கேட்கணும் அப்பதான் இனிமேல் இந்த மாதிரியான காடைத்தனம் பாடசாலைகளில் இடம்பெறாது."

"அதுனாலதானுங்க அண்ணே உங்களிடம் கூறினேன். இன்னும் ஒரு விடயம் அண்ணன் கிட்ட சொல்லணும்."

"என்ன கந்தையா புதுக்கதை ஏதும் இருக்கா?"

"ஆமாங்க அண்ணே! இப்ப கிழங்கு மரக்கறி அறுவடை செய்யும் காலம். அதனால் அதிபரும் ஆசிரியர்களும் நேரத்துக்கு பாடசாலைக்கு வருவது இல்லை."

"அதுக்கு என்ன காரணம்?"

"அண்ணே! தோட்டத்துக்கு தண்ணி போடனும் காய்கறி பாத்தியில புல்லுப் புடுங்கணும் அதை முதலில் செய்து விட்டுத்தான் பாடசாலைக்கு வருகின்றார்கள். காய்கறி பாத்தியில் இருக்கும் அக்கறை பாடசாலை மாணவர்கள் மீது இல்லையே."

"இப்படியும் நடக்குதா தம்பி?"

"ஆமாங்க அண்ணே! அவங்க தோட்டம் செய்யிறது மட்டும் இன்றி பாடசாலை மாணவர்களையும் தங்கள் வீட்டுக்கு அனுப்பி தோட்டத்துக்கு தண்ணி போடவும் மண் வெட்டவும் போட்டு வதைக்கின்றார்களாம்"



"உண்மைதான் கந்தையா. இங்கு மலையக பாடசாலைகளில் இதுதான் நடக்கின்றது."

"ஆமாங்க அண்ணே! அதனால்தான் யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் புரியல. வேலியே பயிரை மேயும் போது வெள்ளாண்மை எப்படி பயன் கொடுக்கும்"

சரியாகத்தான் கந்தையா சொன்னாய். ஒரு கை தட்டினால் ஓசை வராது. பலபேர் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் ஏதாவது நடக்கும். அதற்கு ஏற்பாடு செய்வோம்."

இப்படிக் கூறி தணிகாசலம் அண்ணன் விடைபெற்றார்.

# கணவனிடம் எதைச் சொல்லலாம்; எதைச் சொல்லக் கூடாது?



**கண**வன் - மனைவிக் கிடையே எந்தவித ஒளிவுமறைவும் இருக்கக் கூடாது. ஆனால், இல்லற வாழ்க்கையில் ஒரு சில சந்தர்ப்பங்களில், ஏதாவது ஒன்றைச்சொல்வதா? வேண்டாமா? என்ற சிக்கலான சூழ்நிலை ஏற்படவே செய்யும்.

'நாம் சொல்லப் போகும் விஷயமே, நமது எதிர்கால வாழ்க்கையை இருண்டு போகச் செய்துவிட்டால் அல்லது எமது உறவில் இருக்கும் திறந்த மனப்பான்மைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால்...?' என்பது போன்ற மனப்போராட்டம் அவர்களை மிகவும் அலைக்கழிக்கும்.

'எந்த விஷயங்களை வாழ்க்கைத் துணைவரிடம் சொல்லலாம்? எவற்றைச் சொல்லக்கூடாது?' என்பது குறித்து சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

**மாணவப் பருவத்தில் நீங்கள் கரப்பான் பூச்சி, பல்லி போன்றவற்றைப் பார்த்துப் பயந்து அலறியவர் அல்லது தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தவர் என்றால் 'லொடலொடா கேஸ்' என்ற பட்டப் பெயரை நிச்சயம் பெற்றிருப்பீர்கள். திருமணத்துக்குப் பிறகு அது பற்றி கணவரிடம் தெரிவிக்க சங்கடப்படுகிறீர்களா?**

தீர்வு: உங்கள் குழந்தைப் பருவத்தில் நடந்த சம்பவங்களை மற்றும் சுவாரஸ்யமான விஷயங்களை கணவரிடம் தெரிவிக்க ஏன் சங்கடப்பட வேண்டும்? குழந்தைப் பருவத்து விஷயங்களை கணவரிடம் மறைப்பீர்களானால், இன்னும் உங்களுக்கு அவற்றின் மீதான பயம் விலகவில்லை என்றுதான் அர்த்தம். எனவே, உங்கள் இளம் பருவத்து நினைவுகளை பரஸ்பரம் பகிர்ந்து கொண்டு குதூகலம் அடையுங்கள். நீங்கள் ஒருவரையொருவர் உண்மையாக நேசிப்பவராக இருந்தால் நிச்சயமாக இது உங்கள் உறவில் எந்தவித எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தாது என்று உறுதியாக நம்பலாம்.

**நம் அனைவரின் வாழ்விலும் நம்மை ஏமாற்றிய அல்லது நம்மை பலவித சிரமங்களுக்கு ஆளாக்கிய உறவினர்கள் இருக்கவே செய்வார்கள். இவர்களைப்பற்றி உங்கள துணைவரிடம் தெரிவித்தால், அது உங்கள் திருமண வாழ்க்கையில் ஏதாவது பிரச்சினையை ஏற்படுத்துமோ என்று பயப்படுகிறீர்களா?**

தீர்வு: உங்களுக்குப் பிடிக்காத உறவினரைப் பற்றி துணைவரிடம் மறைக்கப்போய், திடீரென்று அவர்களே உங்கள் வீட்டுக்கு வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது உங்கள் முகமே, 'அவர் வருகையை நீங்கள் விரும்பவில்லை. உங்கள் இருவருக்குமிடையே ஏதோ பிரச்சினை உள்ளது' என்பதை துணைவருக்குக் காட்டிக் கொடுத்துவிடும். எனவே உங்களுக்குப் பிடிக்காத உறவினர்களைப் பற்றி பரஸ்பரம் தகவல் பரிமாறிக் கொள்வதே நல்லது. இல்லை என்றால் அவர்கள் உங்கள் இருவரையும் தனித்தனியாகச் சந்தித்து, குடும்பத்தில் குழப்பம் ஏற்படுத்தவும் வாய்ப்பு இருக்கிறது.

**நோய் என்பது எல்லோருக்கும் வரக்கூடிய பொதுவான விஷயம். திருமணத்துக்கு முன்பு உங்களுக்கு கடுமையான நோய் இருந்தது. இப்போது பூரணமாக குணமடைந்து விட்டது. இதை அவரிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று குழம்பித் தவிக்கிறீர்களா?**

தீர்வு: கணவரிடம் உங்களுடைய கடந்தகால நோய்களை மறைக்க வேண்டாம். அதே நோய் உங்களை மறுபடியும் தாக்கினால், உங்கள் கடந்த கால நோய் குறித்த தகவல்களைத் தெரிவிக்க வேண்டி வரும். அந்தச் சமயத்தில், உங்கள் கணவரிடம் இது எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும். 'இந்த விஷயத்தைப் போல இன்னும் எத்தனை விஷயங்களை என்னிடம் மறைத்திருக்கிறாய்?' என்று அவர் உங்களிடம் கோபத்தைக் காட்டவும் செய்வார். மாறாக முன்கூட்டியே அவரிடம் சொல்லிவிட்டால் உங்கள் மீது அவருக்கு நம்பிக்கை அதிகரிக்கும். மேலும், உங்களிடம் அவர் கூடுதல் அனுசரணையாகவும் நடந்துகொள்வார். வெளிப்படையாகப் பேசிவிடுவதால் எந்தவிதக் குற்ற உணர்வுக்கும், மன இறுக்கத்துக்கும் நீங்கள் ஆளாக வேண்டி இருக்காது.

## கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டியவை

உங்களின் சில விரும்பத்தகாத பழக்க வழக்கங்கள் கணவருக்கு எரிச்சலை ஏற்படுத்திவிடும். எனவே, அது போன்ற பழக்க வழக்கங்களை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம்.

பெண்கள், பொதுவாக எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். சின்ன விஷயத்துக்குக் கூட கண்ணீர் சிந்துவது அவர்களுக்குப் பழகிப்போன ஒன்று. இந்தப் பழக்கம் கணவருக்கு எரிச்சலையே ஏற்படுத்தும். எனவே, அழுது காரியம் சாதிக்க நினைப்பதைக் கைவிட்டு, கணவர் நல்ல மனநிலையில் இருக்கும்போது உங்களின் தேவையையோ அல்லது அவருடைய தவறையோ பக்குவமாய் எடுத்துச் சொல்லக் கற்றுக் கொள்ளுங்கள்.

கணவருடன் ஷொப்பிங் போய்க்கொண்டிருக்கிறீர்கள், உடை மற்றும் அலங்காரப் பொருட்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஒவ்வொரு தடவையும் கணவரின் விருப்பத்தைக் கேட்டு அவரைத் தொந்தரவு செய்யாதீர்கள். அவருடைய கருத்து மற்றும் விருப்பத்தைத் தெரிந்து கொள்வதில் தவறில்லைத்தான். ஆனால், சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் அவரைத் தொந்தரவு செய்வது உறவில் இடைவெளியை ஏற்படுத்திவிடும்.

அந்தரங்கமான விஷயங்களை அல்லது கணவன் - மனைவி பிரச்சினைகளை உங்கள் தோழி அல்லது உறவினர் முன்னிலையில் வெளிப்படுத்த வேண்டாம். உங்கள் கணவரால் இதை ஒரு போதும் மன்னிக்க முடியாது.

கணவர்மீது உங்களுக்கு அளவு கடந்த பிரியம்; அவரை ஒரு நிமிடம் கூட பிரிந்திருக்க உங்களால் முடியாது, நீங்கள் அப்படிப்பட்டவராக இருந்தால் உங்கள் போக்கை உடனடியாக மாற்றிக் கொள்ளுங்கள்

எதற்கெடுத்தாலும் அவரிடம் பிரச்சினைகளைக் கொண்டு போகாதீர்கள். 'உங்கள் அம்மா இன்றைக்கு என்ன செய்தாங்க தெரியுமா?' 'இன்றைக்கு வேலைக்காரி வரவில்லை,' 'நானே எல்லா வேலையையும் செய்ய வேண்டியதாயிற்று...' இப்படி அவரிடம் புலம்பிக்கொண்டே இருப்பீர்களானால் அது உங்களுடைய இடைவெளியை அதிகரிக்கவே செய்யும்.

எனவே, எதைச் சொல்வது, எதை மறைப்பது என்பது குறித்து மனதை அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம். அவருக்கு எந்தெந்த விஷயங்கள் கோபமூட்டுமோ அவற்றைத் தவிர்த்து விடுங்கள். எந்த விஷயங்கள் உங்களுக்குள் அன்பையும், நம்பிக்கையையும் அதிகரிக்குமோ, அவற்றை எல்லாம் மனம் திறந்து பேசுங்கள்!

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | நேரம் | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7.59 | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | நிகழ்ச்சிகள் ஆரம்பம் | 6.59 | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | 7.30 | சங்கீத மேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | 8.00 | குட்டி சுட்டி | மாஸ்க் கார்டுன் |
| 9.55 | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | 8.30 | | சிறுவர் நிகழ்ச்சி |
| 10.00 | உங்கள் சொய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | 9.00 | ஹொலிவூட் மூவி–குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | | 9.30 | குட்டி சுட்டி – கார்ட்டுன் | சன்டே சமையல் |
| 11.00 | அகல்யா | அகல்யா | அகல்யா | அகல்யா | இசைத் தென்றல் | 10.00 | களம் | ஸ்ரார் ஸ்பெசல் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | 10.30 | திரை விமர்சனம் | வர்த்தக உலகம் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சன்டே சமையல் | மங்கையர் சொய்ஸ் | மங்கை | 11.00 | இப்படிக்கு நீங்கள் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | லன்ச் டைம் செய்திகள் | 11.30 | சினி சொய்ஸ் | |
| 12.45 | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | பாடல்கள் | | 12.00 | றிலாக்ஸ் டைம் | எம்.ரி.வி |
| 01.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | 12.30 | | |
| 01.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | | 1.00 | சக்தி மேட்னி | சண்டே மூவி |
| 5.00 | கிய பியர்ஸ் | ஹி– மான் | கிட்ஸ் ஸோன் | தமிழ் காட்டூன் | என்றும் கலாட்டா | 4.00 | | சூப்பர் 10 |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுபர் சீன் | | 4.30 | விக்கிரமாதித்தன் | என்றும் கலாட்டா |
| 6.00 | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | 5.00 | நகச்சுவை விருந்து | பெஸ்ட் 10 மூவிஸ் |
| 6.30 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | 5.30 | | சப்தஸ் ஸ்வரங்கள் |
| 6.58 | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | இயற்கையுடன் ஒருநிமிடம் | 6.00 | அறிவு | மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | 6.30 | திமி தக்க தா | |
| 7.30 | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | கணவருக்காக | 7.00 | ஊரும் உலகம் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | 7.30 | எஸ் எம் எஸ் ஷோ | தெனாலி ராமன் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.59 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு | 8.30 | ராஜ ராஜேஸ்வரி | இளையகானம் |
| | | | | | | 8.59 | நிகழ்ச்சி நிறைவு | நிகழ்ச்சி நிறைவு |

மணித்தியாலச் செய்திகள் 10.25, 11.25, 14.25, 15.25, 16.25, 17.25


# டெஸ்டில் இருந்து ஓய்வு பெறும் கறுப்புச் சிங்கம்

இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரரான சனத்ஜெயசூரிய சர்வதேச டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்துள்ளார். இலங்கை அணி பல தொடர்களிலும் பல ஆட்டங்களில் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் சனத்ஜெயசூரியா. தற்போது 36 வயதாகும் சனத்ஜெயசூரியா அண்மைக் காலங்களாக தொடர்ச்சியான காயங்களால் மிகவும்அவதிப்பட்டு வந்தார். இதனால் இவர் பல தொடர்களில் விளையாட முடியாமல் போனது, விளையாடிய தொடர்களிலும் பிரகாசிக்க முடியவில்லை.

1969 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்த சனத் ஜெயசூரிய, 1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி மெல்பேர்னில் இடம் பெற்ற அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஒருநாள் ஆட்டத்தில் அறிமுகமானார். இடதுகை ஆட்டக்காரரான சனத் ஜெயசூரிய, சிறந்த இடது கை சுழல் பந்து வீச்சாளராகவும் விளங்கினார். 1996 ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெல்வதற்கு இவரது அதிரடியான துடுப்பாட்டம் மிகவும் உதவியது. எதிரணி

அடித்தாடும் பாணியிலான துடுப்பாட்ட முறையால் இவர் எதிரணி பந்து வீச்சாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார். 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ண தொடரின் தொடர்ஆட்டநாயகன் விருதைப் பெற்ற சனத்ஜெயசூரிய இதுவரை மொத்தம் 357 ஒருநாள் ஆட்டங்களில் விளையாடி 10625 ஓட்டங்களை 31.90 என்ற சராசரி அடிப்படையில் பெற்றுள்ளார். அதிக பட்சமாக இந்திய அணிக்கு எதிராக 189 ஓட்டங்களைப் பெற்ற சனத் ஜெயசூரிய, அந்த ஆட்டத்தில் இரட்டைச் சதம் அடிக்கும் வாய்ப்பு இருந்தும் அந்த வாய்ப்பைத் தவறவிட்டார். ஒரு நாள் ஆட்டங்களிலே சனத்ஜெயசூரிய இதுவரை 19 சதங்களையும், 60 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார்.






சனத் ஜெயசூரிய ஒருநாள் ஆட்டங்களிலே 273 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். சிறப்பான பந்து வீச்சாக இந்தியாவுக்கு எதிராக 29 ஓட்டங்களை கொடுத்து ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஹமில்ரனில் இடம்பெற்ற நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தின் மூலம் டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகம் ஆனார். இதுவரை 101 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியுள்ள சனத் ஜெயசூரிய, 6599 ஓட்டங்களை 41.76 என்ற சராசரி அடிப்படையில் பெற்றுள்ளார். இவர் டெஸ்ட் ஆட்டத்திலே 92 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார். 1997 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்திலே முதல் இன்னிங்ஸில் 340 ஓட்டங்களைப் பெற்றார். இதுவே இவர் ஒரு டெஸ்ட் ஆட்டத்தின் ஓர் இன்னிங்ஸில் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும். அந்த ஆட்டத்தில் சனத் ஜெயசூரியா மற்றொரு துடுப்பாட்ட வீரரான ரொஷான் மஹாநாமவுடன் இணைந்து 535 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்று, முதலாவது விக்கெட்டுக்கான அதிகூடிய இணைப்பாட்டம் என்ற உலக சாதனையைப் படைத்தார்.

1999 ஆம் ஆண்டு இலங்கையணியின் தலைவராக பொறுப்பேற்ற சனத்ஜெயசூரிய 2003 ஆம் ஆண்டுவரை அப்பதவியை வகித்தார். இவரது தலைமையிலே 38 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடிய இலங்கையணி 18 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. இவரைக் கௌரவிக்கும் விதமாக 1997 ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற கிரிக்கெட் சஞ்சிகையான விஸ்டன் சஞ்சிகை அந்த ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற விருதை வழங்கி கௌரவித்தது.

- நிரோ

| துடுப்பாட்டம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வகை | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஓட்டங்கள் | அதிகூடிய | சராசரி | 100 | 50 |
| டெஸ்ட் | 101 | 172 | 6599 | 340 | 41.76 | 14 | 29 |
| ஒரு நாள் ஆட்டம் | 357 | 348 | 10625 | 189 | 31.90 | 19 | 60 |
| முதல்தர ஆட்டம் | 242 | 382 | 13937 | 340 | 39.93 | 29 | 66 |

| பந்துவீச்சு | | | | | |
|---|---|---|---|---|---|
| வகை | போட்டிகள் | ஓட்டங்கள் | விக்கெட்டுக்கள் | அதிகூடியது | சராசரி |
| டெஸ்ட் | 101 | 3053 | 92 | 5/94 | 33.18 |
| ஒரு நாள் ஆட்டம் | 357 | 10053 | 273 | 6/29 | 36.82 |
| முதல்தர ஆட்டம் | 242 | 6040 | 187 | 5/34 | 32.29 |

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் இந்தியரான விக்ரம் சோலங்கி

உலகின் பல நாட்டு வீரர்களையும் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் காணலாம். அதிலும் இந்திய வம்சா வளியினரே அதிகம் என்றுகூற லாம். சில ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தால் சென்னை வீரர் நாசீர் ஹுசைன் இங்கிலாந்து அணித் தலைவராக இருந்தார். தற்போதைய அணியில் மொன்றி பனிஸர், விக்ரம் சோலங்கி, ஓயிஸ் ஷா, கபீர் அலி, சஜித் மஹமூட் எனப் பெரிய பட்டாளமே உண்டு. இதில் விக்ரம் சோலங்கி சமீப காலமாக இங்கிலாந்து அணியில் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறார்.

சமீபத்தில் இந்திய அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தில், இங்கிலாந்து 'ஏ' அணியின். தலைவராகச் செயற்பட்ட இவர், ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரைச் சேர்ந்தவர். இளம் பருவத்தை அங்குதான் கழித்தார். எட்டு வயதுக்குப் பிறகுதான் இங்கிலாந்தில் குடியேறினார். தனது 16 ஆவது வயதில் வோர்செஸ்டெர்சயர் கவுன்டி அணிக்காக முதன் முதலில் கிரிக்கெட் விளையாடினார். படிப்படியாக முன்னேறிய இவர், தனது திறமையால் இங்கிலாந்து அணியில் இடம் பிடித்து விட்டார். இவருடைய பாட்டி தேவி, இப்பொழுதும் ஜெய்ப்பூரில் தான் வசிக்கிறார். தற்போது 90 வயதை தாண்டிய தேவி, சோலங்கி விளையாடும் ஒவ்வொரு ஆட்டத்தையும் தொலைக் காட்சியில் தவறாமல் பார்த்து ரசிப் பாராம். சொந்த ஊரில் பேரன் விளையாட வருகிறான்என்றால், மகிழ்ச்சி அடையாமல் இருப்பாரா? ஜெய்ப்பூரில் நடந்த பயிற்சி ஆட்டத் தையே சோலங்கியின் குடும்பத்தினர் அனைவரும் நேரில் வந்து ரசித்தார்கள்.

விரைவில் சோலங்கி திருமணம் முடிக்க விருக் கிறார். இங்கிலாந்து பெண்ணை அல்ல! இந்தியாவை சேர்ந் தவரைத் தான். அவருடைய பெயர் அம்பிகா. ஜலந்தர் மாநிலத்தில் உள்ள கொராயாவை சேர்ந்தவர். சொந்த நாட்டை விட்டு இங்கிலாந்துக்குச் சென்றாலும், இந்திய கலாசாரத்தை விரும்புகிறார் என்றால் சோலங்கியை கட்டாயம் பாராட்டியே ஆக வேண்டும்!



# கலக்கல்

பஹீன்



இந்தியாவில் ஸ்ரீ வில்லிபுத்தூர் பெரிய மாரியம்மன் கோவிலிலே கடந்த வாரம் பூக்குளித்திருவிழா இடம் பெற்றது. இதனையொட்டி அங்கு நடைபெற்ற தீமிதிப்பு நிகழ்வில் பெண்கள் கலந்து கொண்டு தமது பக்தி பரவசத்தை வெளிப்படுத்தும் காட்சி.

## உணவு வகையில் கின்னஸ் சாதனை...!



அமெரிக்காவின் லொஸ்வேகாஸ் நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் கடந்த வாரம் 510 வகையான உணவுகள் பரிமாறப்பட்டன. அது கின்னஸ் சாதனையாக இடம் பிடித்து விட்டது. 510 உணவுவகைகளையும் ருசி பார்க்கின்றனர் வாடிக்கையாளர்கள்.

## இப்படியும் பார்க்கலாம்



உக்ரைன் நாட்டில் அண்மையில் இடம்பெற்ற சூரிய கிரகணத்தை பெண் ஒருவர் 'சிடி' யின் உதவியுடன் பார்வையிடுகிறார்.

## நெட் குறும்பு



குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று கூறுவார்களே! அது இதற்காகத்தானோ?

## சிரியுங்கள்..! சிரியுங்கள்..!



## தத்துவம்

**நாலு கால்!**
என்னதான் நாய்க்கு நாலு கால் இருந்தாலும் அதால கால்மேல் கால்போட்டு உட்கார முடியுமா?

**டை!**
மண்டையப் போட்டாலும் டை. மண்டைல போட்டாலும் டை!

**மொபைல்!**
நீ என்னதான் நவீன மொபைல் போன் வைச்சிருந்தாலும், அதுல எவ்வளவு தான் பணம் இருந்தாலும் உன்னால உனக்கு கோல் பண்ண முடியாது!

**நுளம்பு!**
நுளம்பு கடிச்சா யானைக்கால் நோய்வரும் ஆனா யானை கடிச்சா நுளம்புகால் நோய் வருமா?




# மருதாணி



ஒரு பெண்ணின் அலங்காரம், மருதாணி பூச்சுக்குப் பிறகுதான் முழுமை பெறுகிறது. இன்றைக்கு மருதாணி இடும் கலை பட்டி தொட்டி எங்கும் அதிவேகமாக பரவி வருகிறது. நகர்ப் பகுதிகளில் மணப் பெண்ணுக்கான மருதாணி அலங்காரத்துக்கு ரூ.500லிருந்து ரூ.5000 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது

# Miss ஸ்ரீலங்கா 2006

டிரில்லியம் ஹை மிஸ் ஸ்ரீலங்கா 2006க்கான இறுதிப் போட்டி கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு கால் பேஸ் ஹோட்டலில் இடம் பெற்றபோது அழகி ஜக்குலின் பர்னாண்டஸ், மிஸ் ஸ்ரீலங்கா வாக - ஸ்ரீலங்கா அழகியாக- முடிசூடப்பட்டார்.

கருத்துகளை வெளியிடும் பாங்கு, முதிர்ச்சி, சமநிலை பேணும் தன்மை போன்ற சில பண்புகளை நீதிபதிகள் கவனத்துக்கு எடுத்துக் கொண்டு போட்டியில் பங்கு பற்றிய அழகிகளில் இவரை மிஸ் ஸ்ரீலங்காவாகத் தெரிவு செய்தனர்.

2006 ஆம் ஆண்டுக்கான உலக அழகிப் போட்டியில் இலங்கையின் சார்பில் பங்கு பற்றவுள்ள மிஸ் ஸ்ரீலங்கா - ஜக்குலின் பர்னாண்டஸ், ''பட்டுப்போன்ற சருமமோ அல்லது கவர்ந்திழுக்கும் புன் சிரிப்போ ஒரு அழகு ராணியை உருவாக்குவ தில்லை.

அழகு என்பது உங்கள் அகத்திலிருந்து புறப்பட்டு அனைவரையும் அணைப்ப தாக அமைய வேண்டும்.

அழகு ராணிப் பட்டத்தை வைத்திருப்பதற்கு ஒருவர் தனக்குள்ளே, தான் ராணி என்று உணர வேண்டும். தனது தாய்நாட்டை நேசிப்பதுடன் தனது நாட்டுக்கான தூதராகவும் நடந்து கொள்ள வேண்டும். சர்வதேச அழகுராணிப் போட்டியில் கலந்து கொள்வதன் அர்த்தம் இதுதான்'' - என்று கூறுகிறார்.



# ஜில் ஜில்



சுவிட்சர்லாந்தின் என்காடைன் பள்ளத்தாக்கில் இருக்கும் செயின்ட் மோரிஸ் மலைப்பகுதியில் சூப்பர் கிளைமேட். ஜில் ஜில் பனிக்கு இதமாக, மிதமாக அடிக்கிற வெய்யில் அங்கு உட்சாகமாக கரைபுரள ஜாலியாக ஆட்டம் போட உல்லாச சுற்றுலா வந்திருக்கும் சுவீடன் இளசுகள்.

# இளமையின் ரகசியம்



நாற்பது வயதுடைய - ஹொலிவூட் அழகிகளில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள- எலிசபெத், ஹெலியின் தனிப்பட்ட வாழ்க்கை கிசுகிசுக்கள் நிறைந்ததொன்றாக இருப்பதுடன் அண்மையில் செய்தித் தாள்களின் தலைப் புகளிலும் இவர் இடம்பிடித்துள்ளார்.

இந்திய லட்சாதிபதி வர்த்தகரான அருண் நாயருக்கும் இவருக்கும் காதல் தொடர்புகள் என்றும் இருவரும் விரைவில் கைபிடிக்க இருக் கின்றனர் என்றும் வெளியாகி உள்ள செய்திகளை எலிசபெத் மறுத்துள்ளார்.

தான் திருமணம் செய்ய நினைக்கவில்லை என் றும் திருமண நிச்சயதார்த்தம் கூட இன்னும் இடம் பெறவில்லை என்றும் கூறி தனது திருமணம் பற்றிய வதந்திகளை திட்டவட்டமாக நிராகரித் துள்ளார் எலிசபெத்.

ஆனால் இவருக்கு மூன்று வயது நிரம்பிய குட்டி மகன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு எதிர் காலத்தில் ஒரு தங்கையோ தம்பியோ தேவைப் படும் என்பதையும் அவர் நிராகரிக்கவில்லை.

தனது மகனுடன் ஓடிப்பிடித்து விளையாடு வதே தனது இளமையின் ரகசியம் என்றும் சொல் கிறார் அவர்.

# சர்க்கஸ் வித்தை



இது என்ன உருவம் என்று குழப்பமாய் உள்ளதா? சர்க்கஸ் வித்தையில் இதுவும் ஒன்று. இரண்டு இளம் பெண்கள் இந்த வித்தையைக் காட்டுகிறார்கள். சர்க்கஸில் விலங்குகளை பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டதால், இப்படி எதையாவது செய்து ரசிகர்களை கவர வேண்டியிருக் கிறது.

# அரபு நாட்டு வேலையும் கருத்தடை ஊசியும்

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

கே: எனது குழந்தைக்கு வயது 3. அடிக்கடி காய்ச்சல் வரும். எனது குடும்ப டாக்டரிடம் காட்டினால் - அவர் காய்ச்சலுக்கு பரசிற்றமோல், அஸ்பிரின் மாத்திரைகள் தரமாட்டார். 'அவை குழந்தைகளுக்கு நல்லதல்ல. காய்ச்சல் காய்வது நல்லது. அதிகமாக காய்ந்தால் குளிர்ந்த நீரால் தொட்டுத் துடையுங்கள். அது போதும்' என்பார். ஒருமுறை அதிகம் காய்ச்சலால் வலிப்பு நோய் வந்துவிட்டது. பக்கத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் - காய்ச்சலை தணிக்க மலவாசலினுள் ஒரு மாத்திரை வைத்தார்கள். உடனடியாக காய்ச்சல் குறைந்தது. உண்மையில் குழந்தைகளுக்கு காய்ச்சல் வந்தால் எப்படிப் பராமரிப்பது என்பது பற்றிய விவரங்களை தருவீர்களா?



ப: உடலில் தொற்றுகளோ அல்லது உடலில் காயமோ ஏற்படும் வேளை - உடல் தன்னை காப்பாற்றும் வகையில் வெப்பத்தை அதிகரிக்கின்றது. அதிகரித்த உடல் வெப்பம் உடலின் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகிறது. அநேகமாக உடலின் வெப்பநிலை 100° பாரன்ஹைட்டுக்கு அதிகமாகும்போது அதனை காய்ச்சல் என்கிறோம்.

உடலின் வெப்பநிலையை கட்டுப்படுத்த HYPOTHALAMUS என்ற ஒரு பகுதி மூளையில் உள்ளது. இந்தப் பகுதிதான் சாதாரணமாக வெளியில் ஏற்படும் வெப்பநிலை மாற்றங்களுக்கு ஏதுவாக உடல் வெப்பநிலையை சமப்படுத்துகின்றது. காய்ச்சல் நேரத்தில் இந்த சமப்படுத்தும் பண்பை ஹைப்போதலமஸ் இழந்துவிடுவதால் - உடல் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டே போகலாம். குழந்தைகளில் 4வீதமானோருக்கு அநேகமாக 6 மாதத்துக்கும் 5 வயதுக்கும் இடையில் காய்ச்சல் நேரத்தில் வலிப்பு நோய் ஏற்படுவதுண்டு. இதனை FABRILE FITS என்பார்கள். அநேகமாக குழந்தைக்கு 9 வயது ஆகும்போது இந்த காய்ச்சல் வலிப்பு நோய் இல்லாது போய்விடும்.

மருத்துவ உலகில் ஒருசில மருத்துவர் - காய்ச்சல் என்பது எமது உடலின் பாதுகாப்புக்காக ஏற்படும் செயல் - அந்த அதிகரித்த உஷ்ண சூழ்நிலையில் - நமக்கு தீங்கு தர உடலில் புகுந்துள்ள தொற்றுகள் வாழமுடியாமல், வளர முடியாமல், பெருக முடியாமல் இறந்துவிடும். எனவே காய்ச்சல் காயவிடுவது நல்லது என்று அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால் பெரியவரோ சிறியவரோ - ஓரளவுக்கு காய்ச்சலை காயவிடுவதில் தப்பில்லை. ஆனால் - காய்ச்சல் அதிகமாகி வலிப்பு நோய் வராமல் கண்காணித்துக் கொள்ள வேண்டும்.

காய்ச்சலை தணிக்க - கொடுக்கப்படும் மாத்திரைகளை ANTI PYRETICS என்பார்கள். இந்த வகையில் பரசிற்றமோல் (PARACETAMOL), அஸ்பிரின் (ASPIRIN), இபுபுறூவன் (IBUFRUFEN), மெப்நேமிக் அசிட் (MEFNAMIC ACID), டைக்குளோபெனக் (DICLOFENAC) மருந்துகள் அடங்கும். ஆனால் - இந்த மருந்துகளை தொடர்ந்து கொடுப்பதனால் - கல்லீரல் பாதிப்பு ஏற்படலாம். அது மட்டுமல்ல; அஸ்பிரின் வகை மருந்துகள் 4-12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு கொடுக்கப்படும்போது உயிராபத்து தரக்கூடிய - மூளை மற்றும் ஈரல் பாதிப்புகளைத் தரும் REYE'S SYNDROME என்ற பக்க விளைவைத் தரும்.

எனவேதான் அநேகமான வைத்தியர்கள் இயலுமான அளவு மருந்து மாத்திரைகளை தவிர்த்து காய்ச்சலை பராமரிக்கின்றார்கள். டெங்கு காய்ச்சலுக்கும் அஸ்பிரின் மாத்திரைகள் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. இந்த ANTIPYRETIC மாத்திரைகளில் - DICLOFENAC வகையில் மலவாசலில் வைக்கும் விதத்தில் SUPPOSITORIES எனப்படும் ஒருவகை மாத்திரை வந்துள்ளது. காய்ச்சலோடு வாந்தியும் இருக்கும்போது மலவாசலூடாக இந்த மாத்திரை வைக்கப்படும். ஆனால் வாய்மூலம் எடுத்தாலும் மலவாசலில் செலுத்தினாலும் - அதன் விளைவு ஒன்றுதான்.

எனவே குழந்தைகளுக்கு காய்ச்சல் வந்தால் - காய்ச்சல் உரமில்லாமல் குறைவாக இருந்தால் SPONGING என்கின்ற தண்ணீரால் தொட்டுத் துடைக்கும் முறை நல்லது. அதிகம் காய்ச்சல் ஏறினால் காய்ச்சல் இளக்கி மாத்திரைகளை (ANTI PYRETICS) கண்காணிப்போடு கொடுக்கலாம். வலிப்பு வந்தால் கட்டாயம் ஆஸ்பத்திரியில் வைத்து பராமரிப்பது நல்லது. காய்ச்சல் நேரத்தில் குழந்தையின் உணவு மற்றும் நீராகாரம் என்பவை அடிக்கடி கண்காணிக்கப்பட்டு ஊட்டப்பட வேண்டும்.

கே: பெண். வயது 23. திருமணமாகவில்லை. குடும்ப கஷ்டம் நிமித்தம் அரபு நாட்டுக்கு தொழில் புரிய ஏஜென்சி மூலம் தெரிவானேன். போவதற்கு முன் - குடும்பக் கட்டுப்பாட்டு ஊசி - DEPO PROVERA எடுக்க வேண்டும் என்றார்கள். நான் திருமணமாகாதவள் - எனக்கு ஏன் இந்த ஊசி என்று கேட்டபோது - அதுதான் சட்டம், வேலைக்கு போவதென்றால் எடு இல்லை என்றால் வேறொரு பெண்ணை அனுப்புவோம் என்றார்கள். கன்னிப் பெண்கள் இந்த ஊசியை ஏன் போடவேண்டும்? அப்படி போடுவதால் ஏதாவது பிரச்சினை ஏற்படுமா? விவரமாக பதில் தரவும்.



ப: உலக மயமாதல், பெண்கள் வேலைக்கு செல்ல வேண்டிய நிலைமை, நாகரிக வளர்ச்சி, பெண்களை போகப் பொருட்களாக ஆண்கள் எண்ணும் பிற்போக்குத்தனம் ஆகியவற்றின் வெளிப்பாடாக, எமது கலாசாரத்தின் அழிவுக்கு கண்ணாடியாக - இந்த ஊசி போடும் விஷயம் இருக்கின்றது.

வேறுநாடுகளுக்கு வேலைக்கு செல்லும் பெண்கள் - பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவது இன்று எங்கும் நடைபெறுகிறது. பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வறுமைக் கோட்டுக்கு கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்கள் பல - இன்று சொகுசான வாழ்க்கை, திருப்தியான உணவு என்பன பெறுகின்றன என்றால் அந்தக் குடும்பங்களில் ஒரு பெண்ணாவது - பிறநாடுகளில் வேலை செய்கின்றாள் என்பது உண்மையாக இருக்கின்றது.

எனவே எமது இலங்கையும் இந்த விஷயத்தில் விதிவிலக்கல்ல. பிற நாடுகள் HOUSE MAID என்ற அலங்காரமான வார்த்தையில் பெண்களை வேலைக்கு எடுக்கின்றன. அங்கு அவள் நாள் ஒன்றுக்கு 24 மணிநேர வேலைக்காரியாக, குழந்தை பராமரிப்பு தாதியாக என்று பலபல வேலைகளை செய்வது மாத்திரமல்ல சிலவேளைகளில் - பாலியல் தோழியாகவும் நடத்தப்படுகின்றாள் என்பது உண்மை.

இந்த காரணத்தினால் - பெண்களை அனுப்பும் ஏஜென்சிக்கள் இங்கிருந்து போகும் பெண் - தற்செயலாக பாலியல் துஷ்பிரயோகத்தில் - அல்லது அவளாகவோ விரும்பி நடந்து கருத்தரித்து அடுத்த மாதமே திருப்பி அனுப்பப்பட்டால் - தொழிலுக்கு அனுப்பியதில் ஏற்பட்ட பிரயாணச் செலவு, மற்ற செலவுகளும் தம் தலையிலே விழுந்து விடும் என்ற பயத்தில் - போகும் எல்லாப் பெண்களுக்கும் கருத்தடை ஊசியை, அவர்கள் திருமணமானவர்களாக இருந்தாலும் சரி, கன்னிப் பெண்ணாக இருந்தாலும் சரி, ஏற்றி அனுப்புகின்றார்கள்.

இதனால் நிச்சயமாக - இந்த பெண்கள் குறைந்தது 3 மாத காலத்துக்கு கருத்தரிக்க முடியாது. அதன் பின்னர் இவர்களுக்கு ஏற்படும் கர்ப்பத்துக்கு ஏஜென்சிகள் பொறுப்பில்லை. இதுதான் இந்த கருத்தடை ஊசி ஏற்றுவதன் பின்னணி. இது எவ்வளவு எமது மனித நேயத்தைக் கூட மாற்றியிருக்கின்றது என்றால் - கணவனே தனது சொந்த மனைவிக்கு கருத்தடை ஊசி ஏற்றிபணிப்பெண்ணாக அனுப்பும் செயலை என் அனுபவத்தில் கண்டுள்ளேன். பெண் கெட்டுப் போனாலும் பரவாயில்லை. ஆனால் கருத்தரித்து வேறொரு ஆணின் குழந்தையை சுமந்து திரும்பக் கூடாது என்ற ஆணாதிக்க சுயநலப்போக்கு இங்கு பிரதிபலிப்பதை பார்த்து கவலை கொள்கிறேன்.

நீங்கள் பணிப்பெண்ணாக போக வேண்டுமென்றால் இந்த ஒருவகையான பண்பற்ற செயலுக்கு ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். மறுத்தால் உங்கள் விசாவில் செல்ல இன்னொரு அபலை காத்துக் கொண்டிருக்கின்றாள். இது ஒரு சட்டமல்ல ஆனால் எழுத்தில் இல்லாத சட்டம். மருத்துவ ரீதியில் கருத்தடை ஊசியை ஒருதரம் எடுப்பதால் பாரிய விளைவுகள் ஏற்படாது. ஆனால் பெண்களை சிறுமைப்படுத்தும் செயலாக இதனை நான் கருதுகின்றேன்.

# கோடை கால நோய்கள்

இதோ, கோடைகாலம் தொடங்கிவிட்டது. அனல் பறக்கிறது. வெயில், வெப்பம் சார்ந்த நோய்கள் பரவத் தொடங்கிவிட்டன. இந்தக் கோடைகால நோய்களில் இருந்து தப்புவது எப்படி?

பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்குக் கோடை விடுமுறை. விடுமுறையை மகிழ்ச்சியாகக் கழிக்க குடும்பத்தோடு பயணங்கள், சுற்றுலாக்கள் என கிளம்பிவிடுகிறார்கள்.

அப்போது ஏற்படும் தாகத்தைத் தணிக்க ஆங்காங்கே கிடைக்கும் தண்ணீரை வாங்கிக் குடிப்பார்கள். இது உடலுக்குத் தீங்கு விளைவிக்கும்.

பயணம் செல்லும் போது கண்ட கண்ட இடங்களில் எதையாவது வாங்கிச் சாப்பிடவும் செய்கிறார்கள். இதனால் அடிக்கடி வயிற்றுவலி, வயிற்றோட்டம், பசியின்மை ஏற்படும். நோய்க்கிருமிகள் சுரக்கும் நச்சுநீர் காரணமாக மூட்டுகளில் சேர்ந்து முழங்கால்வலி, இடுப்புவலி, முதுகுவலி ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

இதைத் தடுக்க, பயணத்தின்போது தண்ணீரை கொதிக்கவைத்து எடுத்துச் செல்வதும், வீட்டில் சுத்தமாக தயாரித்த உணவு வகைகளை கொண்டு செல்வதும் அவசியம் ஆகும்.

## வெப்பத்தால் ஏற்படும் பாதிப்பு

தலை வழுக்கையானவர்கள், மொட்டை போட்டுக்கொண்டவர்கள், வயது முதிர்ந்தோர், நீரிழிவு நோயாளிகள் கோடை வெப்பத்தில் இருந்து தப்ப அதிகம் தண்ணீர் குடிக்க வேண்டும். இல்லையென்றால், வியர்வையால் நீர் வெளியேறி குருதி ஓட்டம் சீராக இல்லாமல் மெதுவாக ஓடும். இதனால் வெயில் தாக்கு ஏற்பட்டு, சுயநினைவிழத்தல், கை-கால் செயலிழத்தல், இழுப்பு ஏற்படுதல், இதயக்குழாய் அடைத்து மாரடைப்பு தோன்றுதல் போன்ற மோசமான நிலைக்கு ஆளாக நேரிடும்.



இவர்களுக்கு துணியில் ஐஸ்கட்டி வைத்து உடலில் ஒத்தி எடுத்து, குடிக்க நிறைய தண்ணீர் கொடுக்க வேண்டும்.

## சொரி-சிரங்கு-அக்கி

சின்னம்மை, கட்டி, அக்கி, சொரி, சிரங்கு போன்றவை கோடை காலத்தில் அதிகமாகத் தோன்றுபவை. மருத்துவரை அணுகி சரியான வைத்தியம் பெற வேண்டும்.

வெப்பம் காரணமாக சிலருக்கு சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் ஏற்படும். சொட்டுச்சொட்டாக நீர் பிரியும். இது முற்றிப் போனால் சிறுநீர்ப்பை வெந்து, சிறுநீரகத்தையே பாதிக்கும் நிலை உருவாகலாம்.

சைக்கிள் ஓட்டுகிறவர்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள். கடும் வெப்பத்தால் உடலில் நீர்சத்து குறைவு ஏற்படும். தோல் நோய் ஏற்படும், கண் சிவந்து, அரிப்பு ஏற்பட்டு, எரிச்சல் உண்டாகி, கண்ணில் நீர்கசியும். இதைத் தவிர்க்க அடிக்கடி கண்களை தூய-குளிர்ந்த நீரில் கழுவவேண்டும். தண்ணீர் அதிகமாக பருக வேண்டும்.

## கோடை கால ஆஸ்துமா

கோடைகாலத்தில் மாம்பழங்கள் நிறையக் கிடைக்கும். ஆஸ்துமா நோயாளிகள் அதிகம் மாம்பழம் சாப்பிட்டால், அடிக்கடி தும்மல், சளி, இருமல் உண்டாகி ஆஸ்துமாவை அதிகப்படுத்தும்.

யாராக இருந்தாலும் வெட்டியபடி திறந்த வெளியில் வைத்திருக்கும் பழங்களை வாங்கிச் சாப்பிடுவது நல்லதல்ல. அந்தப் பழங்களில் ஈ, கொசு உட்கார்ந்து, தூசி படிந்து, பல கிருமிகள் உற்பத்தியாகி இருக்கும். சாப்பாடுகிறவர்களை நோய் தாக்கும்.

கோடை நோய்களிலிருந்து காத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?

தூய குடிநீர் அடிக்கடி பருக வேண்டும். பழச்சாறு பருகுவதும் நல்லது. மோர், நன்னாரி சர்பத், எலுமிச்சைசாறு பருகலாம்.

குழந்தைகள், முதியவர்கள், தலைவழுக்கை உள்ளவர்கள், மொட்டைஅடித்துக் கொண்டவர்கள், நீரிழிவுநோய், இரத்தக் கொதிப்பு நோய், இதயநோய், சிறுநீரக பாதிப்பு உள்ளவர்கள் கோடை காலத்தில் காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை வெளியே வராமல் வீட்டுக்குள் இருப்பது நல்லது. வெளியில் போக நேர்ட்டால் குடை பிடித்துக்கொள்ளவும். பருத்தி ஆடைகளை அணியவும்.

சிறுகதை

# புரிதல்

-ஆத்மராஜா றூத் சந்திரிக்கா.

அலுவலகத் தொலைபேசி சிணுங்கியது. காலை நேரத்து முதல் அழைப்பு.

ஜானு 'ஹலோ' சொல்லிய மறுநிமிடத்தில் பூவாய்ச்சிரித்து 'அஞ்சலி உமக்குத்தான்' என்று குறும்பு காட்டினாள்.

'யார் ஜானு - யாரப்பா சொல்லன்' அவசரமாய் சுழல் நாற்காலியைத் திருப்பினாள் அஞ்சலி.

'அந்நிய மொழி - அனேகமாக உன் நண்பனோ நண்பியோ... நீயே தெரிந்து கொள்'.

மறுமுனையில் 'ஹலோ குட்டன் மோஹன்' என்றதுமே - அஞ்சலி பரபரப்பானாள். ஜெர்மனிய மொழியில் அவளுக்கு வணக்கம் சொல்வதானால் நிச்சயமாக நீப்பன் ஹூபட்டாலில் இருந்து பேசுகிறான் என நினைத்தாள். ஆனால் தொலைபேசியைப் பார்த்தபோது - உள்ளூர் அழைப்பு; அதுவும் கிளிநொச்சியில் இருந்து வந்த அழைப்பு.

அஞ்சலி மனதில் அலையலையாய் கேள்விகள் அக்கணத்தில்.

"அஞ்சலி, நான் எங்கள் நாட்டுக் குழுவொன்றுடன் ஸ்ரீலங்காவுக்கு மறுபடியும் வந்தேன். இரண்டு நாட்கள் வன்னியில் சில சந்திப்புக்கள்.

ற்ரங்வியூ ஹோட்டலில் நிற்கிறேன். வந்து சந்திக்க முடியுமா? ற்ரங்வியூ என்றதுமே... சற்று திகைத்து..." "ஓகே நீப்பன் எப்படியும் இன்னும் மூன்று மணி நேரத்தில் வருகிறேன். இப்பொழுது நேரம் எட்டு மணி. பதினொரு மணிக்கு 'பாண்டியன் சுவையூற்றில் "சந்திப்போம் - பை".

ஜானு அழகாகச் சிரித்தாள் ஏதேதோ அர்த்தங்களுடன்.

'இதோ பார் ஜானு நீப்பன் எனது நண்பன் - நாங்கள் இருவரும் ஒரு வருடகாலம் டூயிஸ்பேக்கில் ஒன்றாகப் படித்தோம். ஐரோப்பியர்கள் சுலபமாக வெளிப்படையாக பழகுவார்கள். இது நட்பு... மட்டும்தான் இப்போது வரை. நான் ஜெர்மனியில் இருந்த நாட்களில் நீப்பன் என்னோடு அன்பாக கதைப்பான். ஒரு சமூகவியல் பட்டதாரியான அவன் எங்கள் நாட்டுப் பிரச்சினை, சுயநிர்ணய உரிமைப் போராட்டம், தமிழ்த்தேசியம், புரட்சி இயக்கங்கள் பற்றியெல்லாம் ஆழமான தெளிவான கருத்துக்களைக் கொண்டுள்ளான். ஆரம்பத்தில் நீப்பனை எனக்கு அறவே பிடிக்காது. இறைச்சி வியாபாரப் பரம்பரையைச் சார்ந்த நீப்பனை ஓர் முரடனாகவே நான் நினைத்தேன். பின்னர்தான் தெரிந்தது அவன் ஆழமான அரசியல் அறிவுள்ளவன், சமூகப் பிரக்ஞையுள்ளவன், நல்லதொரு கலாரசிகனென்று. மிக இனிமையாகப் பேசும் நல்ல நண்பன். ஞாயிறு விடுமுறை நாட்களில் என்னைத் தன் வீட்டுக்கு சாப்பாட்டுக்கு அழைப்பான். ஓர் அழகான தங்கையும் அன்பான அம்மாவும் அவனுக்கிருக்கிறார்கள். அவனுடைய தகப்பன் யாரென்பது பிள்ளைகள் இருவருக்குமே தெரியாது. அவனுடைய அம்மாவிற்கு மாத்திரமே தெரியும் என்று சொல்லி அடிக்கடி கவலைப்படுவான்.

பறவைகளிலே விருப்பமுள்ளவன். பூந்தோட்டக்கலையை அழகாகப் பேணியிருக்கிறான் தன் வீட்டில்.

ஜெர்மனியில் நானிருந்த காலங்களில் ஹூபட்டால், பொண், டூயிஷ் பேக் என எல்லா இடங்களிலும் உள்ள தன் உறவினர் நண்பர்கள் வீட்டுக்கு என்னை அவன் தங்கையோடு கூட அழைத்துப் போயிருக்கிறான். முன்பு மூன்று தடவை ஸ்ரீலங்காவிற்கு வந்து போயிருக்கிறான். வன்னிக்கும் இருதடவை வந்து போயிருக்கிறான்.

அஞ்சலி புறப்படத் தயாரானாள். ஸ்கூட்டியை தள்ளிக் கொண்டு வெளியே வந்தாள். மழைப்பிசுபிசுப்பு அடங்காத நிலம் சேறாய் தெரிந்தது. சாவகச்சேரி தாண்டும் போது ஞாபகம் வரவே சட்டென இறங்கி அவனுக்கு விருப்பமான பகோடா, கடலை, மிக்ஷர், பனங்குட்டான் எல்லாவற்றையும் வாங்கிப் பத்திரப்படுத்திக் கொண்டாள். முகமாலைச் சோதனைச் சாவடியில் சோதனை முடித்த போது செல்போன் சிணுங்கியது. "வந்து கொண்டிருக்கிறாயா அஞ்சலி - இப்போது எங்கே நிற்கிறாய்' மறுமுனையில் நீப்பன் பேசினான் கிளிநொச்சி மதி கொமினிகேசனில் இருந்து. 'இப்போது தான் முகமாலையில் நிற்கிறேன். இன்னும் ஒரு மணி நேரத்தில் வந்துவிடுவேன் நீப்பன்" அஞ்சலி வேகமானாள். மனதில் ஜெர்மனியில் நடந்த பயிற்சிப் பட்டறை, வெளிக்கள வேலை, நீப்பனுடனான நட்பு எல்லாமே... ஞாபகத்தில் வந்தன.

* * *

முதன்முதலாக நீப்பனை சந்தித்த போது அவள் முகம் சுழித்துக் கொண்டது ஞாபகத்தில் வந்தது. ஓர் புகைவண்டி போல எந்தநேரமும் புகை கக்கியபடியே வகுப்பில் இருப்பான். முதல் நாள் லிப்ட்டில் போகும்போது அவளருகே நீப்பன் நின்றிருந்தான். அவளால் சகிக்க முடியாத சிகரெட் மணம். முகத்தைச் சுழித்து தலையைத் திருப்பிக் கொண்டாள். வகுப்பில் முதன்முதலாக அறிமுகப்படுத்தும் போது அவள் முகத்தருகே வந்து நின்று புகையை வெளிவிட்டு 'ஐயாம் நீப்பன் நிறோஸ்மன்' என்றான். அவளுக்கு எரிச்சல் வந்தது.

'காட்டு மிறாண்டி சே...' எனத் திட்டினாள்.

'இலங்கையின் எந்தப் பகுதியில் இருந்து வந்திருக்கிறாய் பெண்ணே' என்று கேட்டான். 'வடபகுதி'

'ஓ... மனித வெடிகுண்டா' பலமாகச் சிரித்தான். அவள் ஸ்தம்பித்துப் போனாள். இதென்ன இம்சை. இவனென்ன நாஸியா? ஏற்கனவே உலக வரலாற்றில் ஜேர்மன் மீதும் ஹிட்லர் மீதும் இருந்த வெறுப்பு இன்னும் அதிகரித்தது அவளுள்.

'அழகான ரோஜாப்பூவொன்று தமிழீழத்தில் இருந்து வந்திருக்கிறது' நீப்பன் மீண்டும் பலமாகச் சிரித்தான். ஊரிலென்றால் செருப்பைக் கழட்டி அடித்திருப்பாள். என்ன செய்வது அந்நிய நாடு. அதுவும் அவனின் நாடு... மௌனமாக நின்றாள் அஞ்சலி.

'உங்கள் பயங்கரவாதிகள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் அங்கே' 'அவளுக்குள் சினம் மூண்டது. அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை. சுதந்திரப் போராட்ட வீரர்கள். சுயநிர்ணய உரிமைப் போராளிகள்' நிமிர்ந்து சொன்னாள். சட்டென அவன் அவளருகே வந்தான். அவள் கண்களைப் பார்த்துச் சொன்னான். 'உங்களுக்கு திமிர் அதிகம். உங்கள் இனத்துக்கு தலைக்கனம் அதிகம்' அவளுக்கு கோபம் வந்தது.

'மிஸ்டர் நீப்பன் மைன்ட் யுவ வேட்ஸ்' சினத்தோடு திரும்பி தன் இருக்கைக்கு வந்தாள்.

'ஐ நோ எபௌட் யுவ கன்ற்றி அன்ட் யுவ ப்ரொப்ளம்'.

'உனக்கு என்ன தெரியும் - நாங்கள் வாழும் தேசம் பற்றி, எங்கள் தேசத்தின் பண்டைய ஆட்சிமுறை பற்றி, வெளிநாட்டார் வருகைக்கு முற்பட்ட இராஜதானிகள் பற்றி, எங்கள் தாயகம் பற்றி பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றி உனக்கென்ன தெரியும். என்னோடு பேசமுன் என் தாயகம் பற்றி தெளிவாக அறிந்து கொண்டு வந்து பேசு. சும்மா வெட்டிப் பேச்சு பேச வரவேண்டாம்.'

உக்கிரமான அவளின் வார்த்தை, முகம் கண்டு நீப்பன் கோபப்படவில்லை. அவளுக்கு அதிசயமாக இருந்தது. அருகில் வந்து தோளில் மெதுவாகத் தட்டிச் சொன்னான் 'றிலாக்ஸ் அஞ்சலி, இது சும்மா பகிடிவதைதான். அங்கிருந்து வருகின்ற ஒவ்வொரு தமிழர்களுமே இப்படித்தான் இலகுவாகச் சென்ஷனாகி விடுகிறார்கள். அதை ரஸிப்பதில் எனக்கு ஒரு தனிவிருப்பம். தமிழ்ப் பெண்களில் எனக்கு அப்படியொரு ஈடுபாடு.

உங்கள் தாயகம், போராட்டம் பற்றி இன்னொருவர் குறைவாகப் பேசும்போது சட்டென உங்களுக்குள் புதைந்து போயுள்ள தமிழ்த்தேசியம் வார்த்தைகளாய் உணர்ச்சிகளாய் வெளியாகின்றது. அஞ்சலி எனக்கு உன்னைத் தெரியுமுன் உன் நாட்டைப் பற்றித் தெரியும். உங்கள் அரசியல் வரலாறு தெரியும். உங்கள் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் பற்றி சகலமும் தெரியும். எல்லாம் தெரிந்துதான் உன்னிடம் பேசினேன். நீயேன் இவ்வளவு சீரியஸாய் இருக்கிறாய்'... இதமாகச் சிரித்தான். அவள் மலைத்துப் போனாள். அவன் தன் லப்டப்பிலிருந்து சில புகைப்படங்களைக் காட்டினான். அவள் ஸ்தம்பித்துப் போனாள். தொண்ணூறுகளின் இரண்டாம் கட்ட ஈழப்போர்க்காலத்தில் அவன் இலங்கையில் இருந்திருக்கிறான். மாங்குளமென்றும் மல்லாவி, துணுக்காயென்றும் எல்லா இடங்களுக்கும் போய் வந்திருக்கிறான். பின்னர் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டுக்காலப் புகைப்படங்கள், பின்னர் சமகால படங்கள் அரசியல் துறையென்றும் ஊடகத்துறையென்றும் புதுக்குடியிருப்பென்றும் அத்தனை முக்கிய நபர்களோடும் நின்று புகைப்படம் எடுத்திருக்கிறான்.

அஞ்சலி வியப்பு மாறாமலே எல்லாவற்றையும் பார்த்தாள். ஆச்சரியம் தாவிய அவளது அகன்ற விழிகளைப் பார்த்து கண்ணடித்துச் சொன்னான் 'நான் உன் தாயகத்தை உன் சமூகத்தை நன்றாகப் புரிந்து கொண்டவன் - ஸோ பி ஃபிரென்ஸ் இன் ஃபியூச்சர்'

அஞ்சலிக்கு அவனைப் பிடித்துப் போயிற்று - அக்கணப் பொழுதிலேயே நல்ல நண்பனாக மானசீகமாக ஏற்றுக் கொண்டாள்.

அதன்பின் இருவரும் அரசியல், கலை, கலாசாரம், மொழி, இனப்பாகுபாடு, பாலினப் பாகுபாடு பற்றியெல்லாம் பேசினார்கள், விவாதித்தார்கள்.

'உங்கள் மண்ணிலே நிறைய புத்திஜீவிகள் இருக்கிறார்கள், உங்களில் அனேகர் தமிழ்த்தேசியத்தை உங்கள் உயிரினும் மேலாக மதிக்கிறீர்கள். அதனால் உங்களை எனக்குப் பிடித்துப் போயிற்று. உன்னையும் கூடத்தான்'

'இற் மீன்ஸ்'

'யு ஆர் ஏ நைஸ் கேள், ஐ லைக் யு ஸோ மச்...' திகீரிட்டாள் அஞ்சலி.

'றியலி ஐ லவ் யூ...'

அது ஒரு வசந்தகால இளமாலைப் பொழுது. நீப்பனோடு அவள் களப்பயிற்சிக்கு ஹூபட்டாலுக்கு சென்று கொண்டிருந்தாள். மாணவர்களில் கனிசமானோர் 'லிவ்விங் ற்றுகெத' எனும் பாணியைக் கடைப்பிடித்திருந்தார்கள். அது அங்கே சர்வ சாதாரணமாக இருந்தது. விசாலமான நெடுஞ்சாலையில் கார் விரைந்தபோது நீப்பன் கேட்டான்.

'அஞ்சலி - ஐ லைக் ற்டு மரி யு'

அதிர்ந்து போனாள். விழிகளில் நீர் குபீரிட்டது. 'நீப்பன் - உனக்கென்ன தெரியும் என்னைப் பற்றி'

'நீயொரு பெண் - அதுதான் அடிப்படைத் தகுதி திருமணத்திற்கு'

'நோ... நீ நினைக்குமாப் போல நானொரு இளம் பெண்ணல்ல'

'வட் யூ மீன் அஞ்சலி'

'யெஸ், ஐ யம் ஏ யங் விடோ'

'வட்' சற்றே கலவரமானான்.

விழிகள் உடைப்பெடுக்க அவள் அழுது முடித்தபோது - அவன் கதிகலங்கிப் போனான். அவளது துயரத்துக்கு தானே காரணமானதொரு பரிதவிப்பு அவனுள். காரின் வேகத்தை குறைத்து சாலையோரமாக நிறுத்தினான். அருகேயிருந்த ரெஸ்ட்டோறண்டினுள் நுழைந்து அவளுக்காக ஸ்நக்ஸும் யூஸும் வாங்கி வந்து வற்புறுத்தி கொடுத்தான். மிக இனிமையாக மெல்லிசையைப் போட்டான். 'ஓகே அஞ்சலி - கமோன் கம் அவுட் ஃபுறம் த டாக்னஸ்'

'அவள் மெதுவாகச் சொன்னாள். அவளுக்கு நிச்சயதார்த்தம் செய்யப்பட்டிருந்த அவர் பார்த்திபன், சிவப்பு ஜடமாக தெருவிலே சுடப்பட்டுக் கிடந்த இரண்டாம் கட்ட ஈழப் போர்க்காலத்தின் ஆழ்ந்த இருள் கவிந்த மாலைப்பொழுது பற்றி, திருமண நிச்சயதார்த்தம் முடிந்தபின் பேரூரமும் மாற்றிய பின் பார்த்திபன் இறந்ததால்... அவள் சமூகத்தில் ஒதுக்கப்பட்டது பற்றி, ஒரு விதவையாக நோக்கப்பட்டது பற்றி, அதன் பின் பல காலம் மனநிலை பாதிப்புக்குள்ளாகி அஞ்ஞாதவாசம் செய்தது பற்றி, மிக நீண்ட காலத்தின் பின் அவள் மீண்டு, உயர்தரம் படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டதாரியாகி, பின் நல்லதொரு பதவியில் அமர்ந்து, உயர்கல்விக்காக ஜெர்மனிக்கு வந்தது பற்றி...

(27 ஆம் பக்கம் பார்க்க)



# உணர்ச்சி

## திரை விமர்சனம்



'செக்ஸ்' மட்டும் வாழ்கையல்ல. குடும்பத்தை அனுசரித்து செல்வதே வாழ்க்கை என்பதை கூறும் கதைதான் இது.

ஓய்வு பெற்ற ராமசாமியின் மகன் காமேஷ் ஆண் அழகனாக ஆகவேண்டும் என்ற ஆசையில் குடும்பத்தைப்பற்றி எந்த அக்கறையும் படாது ஊர்சுற்றும் வாலிபன். இவனுடைய தங்கை அமிர்தா. செய்வாய் தோசத்தினால் திருமணம் நடக்கவில்லை. அவள் வேலை செய்து கொண்டுவரும் பணத்திலேயே அந்தக் குடும்பம் ஓடுகின்றது.

இந்த நிலையில் விளம்பர நடிகை காமினியை காமேஷ் சந்திக்கிறான் இருவரும் காதலிக்கிறார்கள். தங்கையின் திருமணத்திற்கு முன்பே காமேஷின் திருமணம் முடிவடைகிறது. காமேஷும், காமினியும் மிக நெருக்கமாக நடந்து கொள்கிறார்கள். ஆனால் அவர் அழகனாக ஆகவேண்டும் என்று கட்டுப்பாட்டுடன் இருக்கின்றான்.

கணவனின் ஆண்மையில் சந்தேகப்பட்டு காமினி டாக்டரிடம் செல்கிறாள். அவர் சொல்லும் யோசனையில் அவள் தன்னை மாற்றிக் கொள்கிறாள்.

திருமண வயதைக் கடந்து விட்ட தங்கைக்கு திருமணம் செய்து வைப்பதற்கு முன்பு முத்தமகன் திருமணம் செய்து கொண்டதால் ராமசாமி கவலைப்படுகின்றான். இந்தநிலையில் தனது தகுதியை மீறி செலவு செய்து ஒரு எஞ்சினியருக்கு திருமணம் செய்துவைக்கிறார். அந்த கணவர் நகைகளுடன் மாயமாகிவிடுகிறார். மகளின் வாழ்கையை நினைத்து கவலைப்படுகிறார் இராமசாமி. விபரிதமானது முடிவு என்ன என்பதே மீதிக்கதை.

குடும்பப்பொறுப்பு இல்லாத காமேஷாக ஸ்ரீமன் இளமை வேகத்தில் காதலிப்பதும் ஆண் அழகனாக ஆகும் ஆசையில் மனைவியிடம் நெருங்காமல் விலகுவது யதார்த்தம்.

அதிகமாக நெருக்கம் காட்டும் காமினி வேடத்தில் அபினயஸ்ரீ. காதலிக்கும் போது உடையிலும் கணவனுடன் உணர்ச்சியை பகிர்ந்து கொள்ளும் போது நெருக்கத்திலும் தாராளம் காட்டி இருக்கிறார். குடும்பப் பெண்ணாக மாறும் போது நடிப்பில் வித்தியாச பாணியில் தோன்றுகிறாள்.

குடும்ப சுமையை சுமக்கும் பெண்ணாக அமிதா. அண்ணன் இல்லற சுகத்தில் இருக்கும் போது தங்கை திருமணமாகாது படுகின்ற பாட்டை மிக தத்துவரூபமாக எடுத்திருக்கின்றார்கள்.

குணால் வித்தியாசமான கோணத்தில் நடிக்கின்றார் திருமணம் செய்து ஏமாற்றும் வாலிபனான அபாஷ் நடித்துள்ளார்.மகன் ஒரு திருப்பு முனையும் இல்லாது வாழ்கின்றதை நினைத்து கவலைப்படும் அப்பா வேடத்தில் ராஜன் மற்றும் மனோரம்மா, லட்சுமி, ராதாரவி, பாலாஜி ஆகியோரும் நடித்துள்ளார்கள்.

இசை இனிப்பாக இருக்கிறது. கமராவின் தெளிவு சூப்பர். கதை, திரைக்கதை இயக்கம் என்பது பிரமாதம். சற்று உறுக்கமாக கதையை வெளிப்படுத்தியிருந்தால் இன்னும் பிரமாதமாக அமைந்திருக்கும்.

மொத்தத்தில் 'உணர்ச்சி' உணர்ச்சி பூர்வமாகவே அமைந்துள்ளது.



## ஸ்ரீகாந் ஜோடி பாவனா

எஸ்.எஸ்.ஸ்டேன்லி இயக்கத்தில் ஸ்ரீகாந் ஜோடியாக பெயரிடப்பாடாத படமென்றில் ஒப்பந்தமாகியுள்ள பாவனா மலையாளத்தில் நடிக்கிறார். சிஃப்மினிஸ்டர் கௌவ்தமி படத்தை இயக்கிய பாவு செஸ் படத்தை டைரக்ட் செய்கிறார்.
செஸ் படத்தின் மூலம் ஸ்ரீகாந்திற்கு ஜோடியாக பாவனா களமிறங்கு கின்றார்.

## சி…

✦ தீர்க்க சுமங்கலி…
செல்லமடி நீ என…

✦ 'அறிந்தும் அறி…
உஷா என்ற சீரிய…

✦ சொர்க்கம் தொ…
இதுதான் முதல் …
தள்ளுகிறார்களாம்…

✦ மனம் என்…
உ…ம். …

✦ சின்னத்தின…
காமடி நடிகை…
என்பதே அ…

திருமுருகன்…
இரண்டா…
பெயர்கள்…
தால் க…



பரத்தி…

## பயிற்சியில் ஜோதிகா



டைரக்டர் ராதாமோகன் இயக்கும் 'மொழி' படத்தில் பிருதிவி ராஜுக்கு ஜோடியாக நடிக்கிறார் ஜோதிகா. இந்தப் படத்திற்காக அவர் நடிப்பிற்கு விருது கிடைக்கும் என்கிறார்கள். 'அப்படி என்ன கேரக்டர்?
வாய் பேசாத - காது கேட்காத பெண்ணாக நடிக்கிறார்.
இந்த ரோவில் நடிப்பதற்காக ஏகப்பட்ட பயிற்சி எடுக்கிறாராம் ஜோ.. தி..கா



## மீண்டும் மாதூரி

எவர் கீரின் ஹீரோயின் என பெயரெடுத்த மாதுரி தீட்சித் மீண்டும் நடிக்க வருவது தெரிந்த விஷயமே.

அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் தீட்சித் மும்பையில் இருந்து கதை கேட்டு வருகின்றாராம். அப்படியே சமீபத்தில் ஹிட்டான ஹிந்திப் படங்களையும் பார்த்து வருகிறாராம். மற்ற நடிகைகள் எப்படி நடிக்கிறார்கள், டான்ஸ் பண்ணுகிறார்கள் என்று பார்க்க ஆசைப்படுகிறாராம். மற்ற நடிகர்களையும் புகழ்ந்து வருகிறாராம்

## சினி மினி

✦ மீண்டும் தமிழ்சினிமாவில் இடம் பிடிப்பேன். கணவன் … ஆக்குவேன் என்ற லட்சியத்துடன் சென்னையில் வீடு வா… சிம்ரன்.

✦ நமீதா முன்பு படப்பிடிப்புக்கு செல்லும் போது தனது … செல்வாராம் (பரத் கபூர்) இப்போது இந்த நிலையை மாற்றி… நடிகர்கள் மாற்றுவது சகஜமப்பா.

✦ பாக்கியராஜ் இயக்கித் தயாரிக்கும் 'பாரிஜாத பூவே' பட… மகள் சரண்யாவின் நடிப்பு பிரமாதம் என்று அந்த படத்தை… எல்லோரும் புகழ்ந்தார்களாம்.

✦ எஸ்.கே.சூரியாவின் இயக்கத்தில் விஜய் நடிப்பதாக கூ… படம் நின்றுபோய்விட்டது. கள்வனின் காதலியும் எதிர்பா… ரசிகர்களின் மனதை கொள்ளை கொள்ளவில்லையாம். ப… சூரியா சார்.

✦ எஸ்.கே.சூரியாவின் இயக்கத்தில் விஜய் நடிப்பதாக கூ… புலி படம் நின்றுபோய்விட்டது. கள்வனின் காதலியும் எதி… ரசிகர்களின் மனதை கொள்ளை கொள்ளவில்லையாம். பய… வேண்டாம் சூரியா சார்.

✦ மன்மதராஜா என்று ரசிகர்களை தாளம் போடவைத்த சா… இப்போது உண்மையிலேயே மன்மதபாணம் தாக்கியதால்… தன்னை மறந்து இருக்கிறாராம். உங்களது மன்மதராசா என்னபாடு படப்போகிறதோ...

✦ விளம்பர மாடலாகுகிறார் ஏ.ஆர்.ரஹ்மான் சினிமாவை விட செல்வம் செளிக்கும் பகுதி விளம்பரம் என்பதை உணர்ந்து ஒதுங்குகின்றார்.



# சினிமாவில் முழுசாக மூழ்க மாட்டேன்

படத்துக்காக காலேஜை நியை நாட்கள் கட் பண்ணியாச்சு. இதுக்கு மேலயும் கட் அடிச்சா டிகிரி தரமாட்டாங்க. அதனால இப்ப சீரியசா காலேஜ் போயிட்டிருக்கேன். நல்ல சான்ஸ் வந்தா தொடர்ந்து நடிக்கிறதப் பற்றி யோசிப்பேன். இல்லேன்னா மீதியிருக்கிற 2 வருசப் படிப்பை முடிச்சுட்டுத்தான் சினிமாவில மூழ்கலாமென்னு இருக்கேன்'' என்றார் 'காதல் கடிதம்' நாயகி அனிஷா.

படித்துக்கொண்டே மாடலிங் செய்துகொண்டிருந்தவருக்கு 'காதலும் கடலுமாய்' படத்தின் மூலம் ஹீரோயின் சான்ஸ் அடிந்திருக்கிறது. அடுத்து வந்த வாய்ப்பு 'காதல் கடிதம்'. இந்தப் படத்தின் பாடல் காட்சிகள் படப்பிடிப்புக்காக நம்நாட்டுக்கு வந்திருக்கிறார். ''நீங்க காதல் கடிதம் படத்துல நடிக்கிறீங்க. உங் களுக்கு யாராவது கடிதம் கிடிதம்?'' ''இந்த காலத்துல யார் கடிதமெல்லாம் கொடுக்குறா. நேரடியாவே காதலை சொல்லிவிட்டு போய்கிட்டே இருக்காங்க. ஆனா என்கிட்ட இன்னும் யாரும் சொன்னதில்லை... தப்பிச்சிட்டிருக்கேன். படிப்பு முடியட்டும் . அப்புறம் பாருங்க. சினிமால அசத்துறேன்'' என்கிறார்.

யப்பா... அனிஷாவுக்கு சீக்கிரம் பாஸ் போடுங் கப்பா...



# சிந்தனையில் சிம்பு

'வல்லவன்' படத்தை எழுதி இயக்கிக் கொண்டிருக்கும் சிம்பு, லஷ்மி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் புதிய படமொன்றில் நடிக்க அட் வான்ஸ் வாங்கியுள்ளார்.

இந்தப்படத்தை இயக்குபவர் யாரென்று இன்னும் முடிவாகாத சூழ்நிலையில் தானே இயக்கி நடித்து விடலாமா என்று வீர சிந்தனையில் இருக்கிறாராம் சிம்பு.



# பெற்றோலில் த்ரிஷா

ஏ.வெங்கடேஷ் இயக்கும் பெற்றோல் படத்தின் படப்பிடிப்பு பாதி முடிவடைந்து விட்டதாம். ஹீரோயின் கிடைக்காத காரணத்தினால் படப்பிடிப்பு இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. இப்போது த்ரிஷா ஒப்பந்தமாகி இருக்கிறாராம்.

# சின்னத்திரை

தீர்க்க சுமங்கலி தொடர் நாடகத்தை கொடுத்த தயாரிப்பாளர் ராதா கிருஷ்ணசாமி சல்லமடி நீ எனக்கு என்ற புதிய சீரியலை தயாரிக்க உள்ளாராம்.

'அறிந்தும் அறியாமலும்', 'பட்டியல்', 'பிரியசகி' போன்ற படங்களில் நடித்த ஷா என்ற சீரியலிலும் நடிக்கத் தயாராகிவிட்டாராம்

சொர்க்கம் தொடரில் வசந்தியின் காதலனாக நடிக்கும் அருணுக்கு துதான் முதல் தொடராம் சூப்பராக நடிக்கிறீங்க என்று ரசிகர்கள் பாராட்டித் ள்ளுகிறார்களாம்.

✦ மனம் என்ற வாரத்தொடர் ஒன்றை விஜய் டிவியில் ஒளிபரப்பட உள்ளதாம். இது உண்மைச் சம்பவங்களை கொண்ட தொடராம்.

✦ சின்னத்திரையிலும் வெள்ளித்திரையிலும் நடித்து புகழ்பெற்ற காமடி நடிகை ஆர்த்தி, ஆஸ்கார் அவாட் வாங்க வேண்டும் என்பதே அவருடைய இலட்சியமாக கொண்டுள்ளாராம்.

திருமுருகன் இயக்கும் எம்டன்-மகன் படத்தில், பரத்திற்கு இரண்டாவது ஹீரோயின் கேரக்டருக்காக பூஜா, சந்தியா பெயர்கள் பரிசீலிக்கபட்டனவாம். இருவரும் மறுத்த தால் கஜாலா நடிக்கிறாராம்.

## ரத்திற்கு - கஜாலா

## ளி

பேன். கணவன் தீபக்கையும் ஹீரோ னயில் வீடு வாங்கித் தங்கியருக்கிறாம்

போது தனது போய் பிரண்டுடன் நிலையை மாற்றி விட்டாராம். சினிமா

ாத பூவே' படத்தில் நடிக்கும் அவரது அந்த படத்தை பார்த்தவர்கள்

நடிப்பதாக கூறப்பட்ட புலி தலியும் எதிர்பார்த்தபடி ல்லையாம். பயம் வேண்டாம்

நடிப்பதாக கூறப்பட்ட ன் காதலியும் எதிர்பார்த்தபடி ல்லையாம். பயம்

போடவைத்த சாயாசிங் னம தாக்கியதால் மன்மதராசா

ன் சினிமாவை என்பதை

# விவேக் சாயாசிங் இணைகின்றனர்





இந்திய சினிமா வரலாற்றில் முதன்முறையாக விவேக் சாயாசிங் ஆடிப்பாடும் 3டி அனிமேஷன் பாடல் காட்சியை படத்தில் சேர்த்திருக்கின்றார்களாம். வாடி வாடி வள்ளிக்கிழங்கே - நீ கோபம் பேடு முள்ளுக்கிழங்கே என்ற பாடல் காட்சி முழுவதிலும் இருவரும் கார்ட்டூனாகவே மாறி நடிக்கின்றார்களாம்.

நான்கரை நிமிடங்கள் இடம்பெறும் இந்தப் பாடல் காட்சிக்கு பத்துலட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகின்றதாம். மே மாதம் படம் திரைக்கு வருகின்ற தாம் என்று சொல்லுகிறார் சொல்லி அடிப்பேன் தயாரிப்பாளர் எஸ்.கே. கிருஷ்ணகாந்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் சத்தியாக்கிரகத்தை முறியடிப்பதற்கு இராணுவத்தைப் பயன்படுத்தி தமிழரசுக்கட்சித் தலைவர்களை சிறையில் அடைத்ததோடு நிற்கவில்லை. சிங்களம் மட்டும் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தியதோடு திருப்தியடையாமல் அது மேலும் சென்று சிங்களம் மட்டுமே நீதிமன்ற மொழியாக (நீதிமன்றங்களின் மொழிச் சட்டம்) இருப்பதற்கான கடும்சட்டமொன்றையும் அறிமுகப்படுத்தியது. தமிழர்கள் காணிவாங்குவதையும், காணி வைத்திருப்பதையும் கட்டுப்படுத்தும் (1963ஆம் ஆண்டு நிதிச்சட்டம்) சட்டத்தையும் கொண்டுவந்தது.

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதில் தரப்படுத்தலை நிலைநாட்டுவதென்ற போர்வையில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின் கீழ் ஒரு தமிழ் மாணவன் ஒரு பல்கலைக்கழகத்துக்கு உள்வாங்கப் படுவதானால் அந்தப்பல்கலைக்கழகத்தில் அதே பாடங்களுக்கு தனது சக சிங்களமாணவன் பெறும் புள்ளிகளைவிட கணிசமான அளவு புள்ளிகளை அதிகமாகப்பெற வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டது.

பதிவிக்கு வந்த அரசுகளின் சிங்கள மயமாக்கும் கொள்கையானது பல் கொண்ட நாடு என்பதை அவர்கள் அங்கீகரித்தார்கள். தமிழர் தரப்பில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கத்தின் பிரதிபலனாக உண்மையான ஓர் அரசியல் பிரிவினைக்கு வித்திடப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி சிங்களவர்கள் வாய்திறக்க முடியாது. ஏனென்றால், இது அவர்களாலேயே உருவாக்கப்பட்ட ஒரு நிலைமை. சத்தியாக்கிரகத்துக்குப் பிறகு சிங்கள மயமாக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்து நிலைமைகள் மோசமாகிக் கொண்டிருந்த அதேவேளை இது ஒரு ஜனநாயக ரீதியிலான அரசு, அதற்கு சட்ட நடைமுறையில் அக்கறையுண்டு என்பதை வெளித்தோற்றத்தில் கூட காட்டிக்கொள்வதில்லை என்பதுபோல் அரசு நடந்துகொள்ளத் தொடங்கியது.

நாட்டில் அமுலில் இருந்த மிக உயர்ந்த சட்டமான அரசியல் சட்டத்தையே அரசாங்கம் அலட்சியப்படுத்தலாயிற்று. அந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக சேர்க்கப்பட்டிருந்த 29 ஆவது ஷரத்தையும் அரசு உதாசீனம் செய்தது. இந்த ஷரத்து மாற்றி அமைக்கமுடியாதது, என்று பிரகடனப்படுத்தி அதற்கேற்றால் பால் பாதுகாப்புப் பிரிவுகளையும் உருவாக்கியிருந்தது பிரிவுகவுன்சில். இவைஅனைத்தையும் பதை நிலைநாட்ட பல்வேறு சட்ட பிதற்றல்களும், புரியாதவாதங்களும் முன்வைக்கப்படுகின்றன. இவர்கள் சர்வதேச மட்டத்தில் இந்த நாடாளுமன்றத்துக்கும், அரசாங்கத்துக்கும் அந்தஸ்து ஒன்றை உருவாக்கிக்கொடுப்பதற்காக சர்வதேச மட்டத்திலான சட்டப்புரட்சி என்பதோர் புளுகுமுட்டையை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள். 1948ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தின் கீழ்வரும் அரச அதிகாரங்களுக்கும் புதிய அரசியல் சட்டத்தின் கீழ்வரும் அரச அதிகாரங்களுக்கும் இடையில் தொடர்ச்சி இருக்க வேண்டிய தேவையில்லை என்றும் கூட அவர்கள் வாதிட்டார்கள்.

**தமிழர்களுக்கும் அவ்வாறு கோர உரிமையுண்டு**

இந்த நிருபிக்கப்படாத சட்ட பூர்வத்தன்மைக்கு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களால் உரிமை கொண்டாட முடியுமானால், அதேவேகத்தில் தமிழர்களும் 1948ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் வழங்கப்பட்ட அரசியல் சட்டம் ஒன்றே சட்ட பூர்வமாக அமுலில் இருக்கும் அரசியல் சட்டம் என்றும் அதற்குப்பின்னர் வந்த அரசியல் சட்டங்கள் எல்லாம் சட்ட விரோதமானவை என்றும் சகல நாடாளுமன்றங்களும் இந்த சட்டவிரோத அரசியல் சட்டங்களின் கீழ் உரு




அத்தியாயம் 40

லிலிருந்தும் அ... அகற்றப்பட்டார்.

சமசமாஜ கட்சியினாலும், கம்யூனிஸ்ட் கட்சியினாலும் பிரதிநிதித்துவம் செய்யப்பட்ட சோஷலிஸ இயக்கம் அழிக்கப்பட்டுவிட்டது. புதிய குடியரசு அரசியல் சட்டத்தின் மூல சிற்பி ஆகிய

# 1948க்குப் பின் உருவாக்கப்பட்ட அரசமைப்புகள் சட்டவிரோதமானவை

கலைக்கழகங்களிலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. பல்கலைக்கழகங்களுக்குள் உள்வாங்கப்பட்ட சிங்கள மாணவர்கள் தங்கள் அரசாங்கங்களின் தமிழர்



நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்வரை இடம்பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)

தற்போது கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி. நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு , தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

தொடர்பான கொள்கைகளை நன்கு புரிந்து கொண்டவர்களாகவே இருந்தனர்.

'தமிழர்களே யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிப்போங்கள்' என்பது போன்ற சுலோகங்களை சிங்கள மாணவர்கள் முன்னெடுத்தனர். இவை சில சமயங்களில் வன்முறைகளாகவும் உருவெடுத்தன. அவர்களைப்பொறுத்தவரை, யாழ்ப்பாணம் என்றால் தமிழ் மாகாணங்களோடு சம்பந்தப்பட்டது. அதனால், தமிழ்மாணவர்களுக்கு கொழும்பு, பேராதனை, கட்டுப்பெத்தை போன்ற பல்கலைக்கழகங்களில் இடமில்லை. இவை அனைத்துமே சிங்களப் பகுதிகளில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் என்பதே நினைப்பு.

சத்தியாக்கிரக இயக்கம், அதன் மீதான அரசாங்கத்தினதும், சிங்களவர்களதும் பிரதிபலிப்பு, சிங்கள பல்கலைக்கழகமாணவர்களின் இயக்கங்கள்; இவையாவும் இலங்கையைவிட்டு பிரிட்டிஷார் விடைபெற்றுக்கொண்டதன்பின்னர் எவ்வாறு கண்ணுக்குப் புலப்படாத ஒரு திசையை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருந்தது என்பதற்கான அடையாளங்களாகவே அமைந்திருந்தன.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கு அப்பால் எந்த விதமான தேவைகளுக்கும் போகக்கூடாதுஎன்று தமிழ் மக்களைக் கட்டாயப்படுத்துவதுபோல் இவை அமைந்தன. இதன் மூலம் சரித்திர பூர்வமாகவும், உண்மையாகவும் இலங்கை சிங்களம் - தமிழ் என்ற இரு பிரிவுகளைச் புறக்கணித்து முழுக்கவும் சட்டவிரோதமான அரசியல் அமைப்புச் சட்டமொன்றை உருவாக்கி இலங்கையைக் குடியரசாகவும் பிரகடனப்படுத்திக் கொண்டது சிறிமாவோ அரசாங்கம்.

அரசியல் அமைப்புச்சட்டத்தை சுதந்திரக்கட்சி அரசாங்கம் கையாண்ட விதம் பற்றி இங்கு அலசுவதில் எதுவிதபயனும் ஏற்படப்போவதில்லை.

**சட்ட விரோதம்**

1948ஆம் ஆண்டு பிரிட்டிஷார் வழங்கிய அரசியல் அமைப்புச்சட்டத்தை புறக்கணித்தமையானது, சட்டவிரோதமான ஒரு செயற்பாடாகும். அதற்குப்பதிலாக 1972ஆம் ஆண்டு குடியரசு அரசியல் அமைப்பை பிரகடனப்படுத்தியமையும் அதே விதமான சட்டவிரோதச் செயல்தான். இது ஒரு அரசியல் சட்டப் பிரச்சினை. அதேசமயம், இது ஒரு சர்வதேசப் பிரச்சினையும் கூட. இந்தப் பிரச்சினையை முறையாக தீர்க்கவேண்டுமானால், இந்தச் சட்டவிரோதச் செயலைப் புரிந்துள்ள இலங்கை அரசாங்கம், மூல அரசியல் அமைப்புச் சட்டத்தை வழங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் மற்றும் தமது முறைப்பாடு விசாரிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்களான தமிழ் மக்கள் வாக்கப்பட்ட ஜே.ஆர்.ஜயவர்தனா, மற்றும் பிரேமதாஸாவின் அரசுகளும் சட்டவிரோதமானவை என்றும் வாதிட முடியும். பயங்கரவாத தடைச்சட்டம் உட்பட அந்த அரசுகளால் நிறைவேற்றப்பட்ட சகல சட்டங்களும் செல்லுபடியாகாதவை. அவைகள் சட்டங்களே அல்ல. சட்ட பூர்வமாக அமைக்கப்பட்ட நீதிமன்றங்களும் இல்லை. அதனால், நீதி நிர்வாகமும் இல்லை. இராணுவம் மற்றும் சீருடைப் படைகளும் சட்டவிரோதமானவை. அவர்களின் செயற்பாடுகள் யாவும் பயங்கரவாத செயல்களன்றி வேறொன்றுமில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் இலங்கையில் நடப்பவை யாவும் சர்வதேச சட்டங்களின் படி அராஜகம். நாட்டின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு, சட்டபூர்வமான அரசு ஒன்றும் இல்லை. விவாதத்திற்காக இது சொல்லப்படுவதல்ல. இந்த விதமான கோரிக்கைகளையெல்லாம் முன்வைப்பதற்கு தமிழர்களுக்கு உரிமையுண்டு என்பதை இங்கிலாந்திலுள்ள மகாராணியின் பிரிவு கவுன்சிலின் பிரகடனங்களே வலியுறுத்துகின்றன.

புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் அல்லும் பகலும் பெரும்பாடுபட்டவர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம் கொல்வின் ஆர்.டி.சில்வா அரசியல் வனாந்தரத்துக்குள் துரத்தியடிக்கப்பட்டார். இவை யாவும் இவ்வாறு நடைபெறுவதற்கு அவர்களின் ஜனநாயகம் மற்றும் அரசமைப்பு பற்றிய தவறான மற்றும் பொருத்தமற்ற சிந்தனைகளே காரணம்.

சத்தியாக்கிரகத்துக்குப் பிறகு தமிழ்மக்கள் சிங்களவர்களிடமிருந்து பிரிந்து போகவேண்டும் என்ற சிந்தனையில் அதிகம் நாட்டம் கொள்ளத் தொடங்கியிருந்தார்கள்.

தமிழ் மாகாணங்களில் கொழும்பு நிர்வாகம் ஸ்தம்பிக்கச் செய்யப்பட்டதன் பின்னர் தமிழர்களுக்கென தனியான அரசாங்கம் ஒன்றை அமைக்க தமிழரசுக் கட்சி ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பலர் என்னைக் கேட்டிருக்கின்றார்கள். இதற்கான விடை மிக எளிதானதுதான். ஏனென்றால், சத்தியாக்கிரகம் அவ்வாறு திட்டமிடப்படவில்லை. மேலும் அன்றைய நிலைமை சந்தர்ப்பசூழ்நிலைகளை உத்தேசிக்காமலும் அன்றிருந்த அரசியல் சிந்தனையை கவனிக்காமலும் இக்கேள்வி கேட்கப்படுகின்றது.

1961 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாத்து பராமரிப்பதற்கான தனது அடிப்படை கொள்கைத் திட்டத்தில் தமிழரசுக் கட்சி மூன்று முக்கிய அம்சங்களைப் பற்றிநின்றது. முதலாவதாக, தமிழர்களும், சிங்களவர்களும் ஒற்றுமையோடும் பிரதேச ஒருமைப்பாட்டோடும் இலங்கையை முழு நாடாகக் கொண்டு இரண்டு சுதந்திர இனங்களாக அருகருகே வாழ்வதற்கு சமஷ்டி முறைதான் திறமான

# தமிழ் மக்களை அழிப்பதையே நோக்கமாக கொண்டவை

ஆகிய மூன்றுதரப்பினரும் சர்வதேச நீதிமன்றம் போன்றதோர் பாகுபாடுஅற்ற சட்ட நடுவர் மன்றத்தின் முன் நீதிகோரி மனுசெய்வதற்கும் அதன் தீர்ப்புக்குக் கட்டுப்படுவதற்கும் இணங்க வேண்டும். இதனைத் தீர்ப்பதற்கு வேறு எந்த சட்டபூர்வ அமைப்பும் இருப்பதாகத் தெரியவில்லை.

எந்த ஓர் அமைப்பும் தன்னைக் கேள்வி கேட்க இடம் வைக்காமலே சுதந்திரக்கட்சி நடந்துகொண்டுள்ளது.

எனவே, இந்தச் சட்டவிரோத நடவடிக்கைபற்றி விவாதிப்பதில் இப்பொழுது எதுவித நடைமுறைப்பொருத்தமும் இருக்காது. இதை இங்கு சொல்வதற்குக் காரணம் சிங்களவர்களும், அவர்களின் அரசுகளும் எல்லாவித தார்மீக நியாயங்களும் தமது பக்கம் இருப்பதாகவும், தாங்கள் புனிதமானவர்கள் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள் என்பதால் தான். 1972 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியல் சட்டம், சட்டவிரோதமானது அல்ல என்றும், அந்த அரசியல் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றமும், அரசாங்கமும் சட்டவிரோதமானவையல்ல என் யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சித் தலைவர்கள் இந்த அரசமைப்பானது முதல் சந்தர்ப்பதிலேயே தங்களுக்கு எதிராக பயன்படுத்தப்படப்போகின்றது என்பதை அறியாமல் இருந்தமை உண்மையில் விசித்திரமான ஒரு சரித்திர நிகழ்வுதான்.

**தமிழில்-போனா**

**அவர்களையே பலி கொண்ட அவர்களின் பூதம்**

தமிழர்களை அழித்தொழிப்பதற்கென அவர்களால் உருவாக்கப்பட்ட பூதமானது அதன் முதல் பலியாக அதனை உருவாக்கியவர்களையே - அரசியல் சக்தி என்ற நிலையில் இருந்து - தூக்கியெறிந்து கபளீகரம் செய்தது.

தானே உருவாக்கிய அரசியல் சட்டத்தின்கீழ் அதிகாரங்களை ஈவிரக்க மற்ற ஐ.தே.கட்சியிடம் அது கையளிக்க நேர்ந்தபோது அதன் தலைவியின் சிவில் உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டு அரசிய அரசியல் அமைப்புக் கருவி ஒன்றை வழங்கக் கூடியதாய் இருக்கும் என்று அது உறுதியாக நம்பிக்கை கொண்டிருந்தது. இரண்டாவதாக, சுதந்திரத்துக்குப் பின்னர் அரசாங்கத்தின் சட்டங்களும், கொள்கைகளும் என்னவாய் இருந்த போதிலும் தமிழர்களை ஒருதாழ்வான நிலையை ஏற்றுக் கொள்ளும்படி செய்துவிடமுடியாது என்பதையும் பலாத்காரத்தைப் பிரயோகித்து மேலாதிக்கத்தை நிலைநாட்டலாம் என்பது சாத்தியமில்லை என்பதையும் அவர்கள் உணரும்போது இருதரப்பும் சமாந்தர சகவாழ்வை மேற்கொள்வதற்கான சூழ்நிலை ஏற்படக்கூடும் என்று அது உறுதியாக நம்பியது. மூன்றாவதாக தமிழரசுக் கட்சியின் கொள்கைகளில் அமைதியான வன்முறையற்ற காந்தீய வழிகளையே தனது நோக்கத்தை அடை வதற்குப் பயன்படுத்துவதென்பது ஒரு முக்கிய அம்சமாகும்.

அதற்குவேறு எந்த வழிகளையும் பயன்படுத்துவதில்லை. குறிப்பாக அதில் வெறுப்புணர்வுக்கே இடமில்லை.

(தொடரும்)

# கவிதைப் புனல்

## அப்பாவிகள்!

அரக்க குணமுள்ள
யுத்தப் பிரியரின்
இரத்தப் பசியால்
குறி வைக்கப்பட்டு
தலை சாய்க்கப்பட்ட
உயிர்கள்!
பதைபதைத்து
வதைவதைத்து
இடிஇடித்து
உயிர் குடிக்கப்பட்டு
மண்ணில் வீழ்ந்தப்பட்ட
மானுடங்கள்!
ஏகப்பட்ட ஆசையுடன்
கலக்கமுற்று
அல்லற்பட்டு
துடிதுடித்து
உயிர் நீத்த
ஜீவன்கள்!

*அ.யாழினி*
*மட்டக்களப்பு.*

## என்னை யோசி

காதலில் அழகை அல்ல
அன்பை யோசி
ஆதாயத்தை அல்ல
ஆழத்தை யோசி
இன்பத்தை அல்ல
இதயத்தை யோசி
உயரத்தை அல்ல
உள்ளத்தை யோசி
பணத்தை அல்ல
பாசத்தை யோசி
நிறத்தை அல்ல
நிஜத்தை யோசி
ஜீவனத்தை அல்ல
ஜீவனை யோசி
தித்திப்பை அல்ல
தியாகத்தை யோசி
உன்னை அல்ல
என்னை யோசி.

*சு.சயனி*
*அநுராதபுரம்.*

## என்று மீள்வாய்?

அன்று போன
வசந்தத்தை
இன்று தேடின
கண்கள்-ஆனால்
சென்றுவிட்ட
காலங்கள்
குன்றிவிட்ட
தீபம் போல்
நின்று நிலைக்குமா?
முடியாதே
நேற்றுப்போல்
இன்று வருமா?
இன்று தொடருமா
நாளையும்?
வென்றுவந்த
வெற்றிகளுடன்
சென்றுவிட்ட
அதிர்ஷ்டமே
என்று மீள்வாய்?
என் வாசலிற்கு.

*எஸ். பிரணவதுர்க்கா*
*சாவகச்சேரி.*

## அரசியல் கைதி

அகமற்ற ஆட்கொள்ளி
அவசர சட்டமதில்
அந்நியனின் கூண்டினில்
அரவணைப்பற்ற அனாதை
களாய் !
தர்மத்தின் வழியதனில்
தவறிழையா தன்மானர்களாய்
சிங்க(ள)த்தின் குகைதனில்
சிக்குண்ட போதினிலும் !
ஊற்றெடுக்கும் உணர்வுகளை
உணர்ச்சியுடன் உரைப்பவர்கள்
சந்தேக வாதிகளின்
பார்வைதனில்
பயங்கரவாதிகளாய் !
ஏதிலானின் அவமான
சின்னங்களை
அங்கமதில் சுமந்தவனாய்.
எதிரியவன் அநீதிக்குள்
அகப்பட்ட அடையாள
எச்சங்களாய் !
உயிர்பறிக்கும் ஈனர்களின்
பார்வைதனில் அனுதினமும்
அர்த்தமற்ற வாழ்வுதனில்
இசைவாக்கம் கொண்டவனாய்
ஆண்டுகள் ஈறாறு
ஆனபோதும்
அன்புறவு அற்றவனாய் !
உறவுகளின் பிரிவுதனில்
பாசப்பித்தர்களாய்
நோம்பிருந்து நோம்பிருந்த
நொந்துபோன நெஞ்சமுட

*க.பிரபு*
*களுத்துறை சிறை*

## உன்னிடத்தில்

*நீ என்னைத் திட்டும் போதும்*
*செல்லமாய் என் மீது*
*சினங்கொண்டு சீறும் போதும்*
*மனதிற்குள் மகிழ்கிறேன்.*
*இவை அனைத்தும்*
*என்னிடத்தில் நீ*
*எடுத்துக் கொண்ட உரிமையும்*
*அக்கறையும்*
*ஆனால்*
*உன்னை நான்*
*திட்டுவதற்கும் செல்லமாய்*
*சினங் கொள்வதற்கும்*
*எப்போது எனக்கு தருவாய்*
*உன்னிடத்தில்*
*உரிமை..?*

*என். ஜெய்கணேசன்*
*பொகவந்தலாவ.*

## அன்பு

அடித்துப் போட்டாலும்
அடங்கி
போகாத அற்புதமான
உணர்வு

*ச.தாட்சாயினி*
*கற்பிட்டி.*

## காத்திருப்பு

குன்றிப் போன என் மனதில்
உயிரில் உனைச் சுமந்து
தரணியின் தனியிடத்தில்
தவமிருக்கின்றேன் உனக்காக.

*லூசியாமேரி*
*முழங்காவில்.*

## விழிகள்

ஒரு சக்கரத்தில்
இரு இராட்டினம்
அதுதான் அன்பே...
உன் கரு விழிகள்.

*எஸ்.பி.லக்குனா*
*வட்டக்கச்சி.*

## சட்டம்

காதலிக்க நீ போட்ட மனு
பிடித்தது அன்று
மணமானதும்
நீ போட்ட சட்டம்
பிடிக்கவில்லை இன்று..

*நந்தனூர் நந்தினி*

## மோகம்

வெண்ணிலவே நீ பெண்ணிலவா
ஓ..அது தான் உன் மீது மோகம்
கொண்டு இந்த விஞ்ஞானிகள்
உன்னிடம்
அடிக்கடி வருகின்றார்களோ

*அம்மன்*
*கிளிநொச்சி.*

## பிரிவு

நாம் எல்லாம் பறவைகள்
நமக்கேது கவலைகள்
ஆளுக்கொரு இலட்சியம்
நாம் பிரிவது நிச்சயம்....!

*எஸ் மதன்,*
*கொழும்பு.*

## அன்பு

'அ' என்ற அரவணைப்பையும்
'ன்' என்ற இன்பத்தையும்
'பு'என்ற புன்னகையையுடன்
இணைப்பதே அன்பு.

*த.கிருத்திகா*
*முரசுமோட்டை.*

## எதிர்பார்ப்பு

உன் கண்களின் கதிர்வீச்சு
என் காதலை கிளறிவிட்டது
ஆனால் வரவில்லை
இன்னும் பதில்

*ந.சிந்து*
*சுதந்திரபுரம்.*

## வெறுப்பு

நீ என்னை வெறுப்பதைக் காட்டிலும்
அதிகமாக... நான் வெறுக்கிறேன்
நீ என்னை புரிந்து கொள்ளாத
இந்த ஜென்மத்தை...

*எ.சுதா,*
*புளியங்குளம்.*

## பரீட்சை

பல நாள் கற்றதை
பக்குவப்படுத்தி
சில நேரத்தில்
சிறப்பாய் எழுதுவது.

*நா.பூபாலகிருஷ்ணன்*
*ரம்பொடை.*

## ஏற்றி வைப்பாயோ?

*பேசும் உன் விழிகள்*
*பேசாத உன் உதடுகள்*
*யாவும் என் நெஞ்சை*
*ரணமாக கொல்லுதடி.*
*வேலும் உன் விழியோ?*
*வாளும் உன் பார்வை*
*நாளும் உனை நான் நே...*
*நாளாலுறும் கண்ணோ?*
*வீசும் அந்த பார்வை*
*எனக்காக தானோ?*
*வாசம் தரும் காற்றாய்*
*உனக்காக நானோ?*
*விடும் ஒரு விளக்கும்*
*உனக்காக தானோ?*
*காத்திருக்கு நீ வந்து*
*ஏற்றி வைப்பாயோ?*

*ஓவியன்*
*யாழ். பல்கலைக்கழகம்*

## வேதனை

*உயிர் என்ற மூன்றெழுத்து*
*உள்ளவரை சோதனையும் வேதனையும்*
*உள்ளம் உருகும் போதும்*
*உறவுகள் யாருமில்லை*
*வீதியிலே வீறுநடை போட*
*வீண்வாதம் தேடி வருகின்றது.*
*சமாதானம் என்ற போர்வையும்*
*சரித்திரத்தில் நீதிக்கு வராது*
*சாதிக்கத் துடிக்கும் சாதாரண மனிதன்*
*சாதனை பல செய்திடினும்-அவன்*
*வேதனையோ வேகரம் போடுகிறது*
*வேறு வழி ஏது உள்ளது*
*சாவுக்கு மணி அடித்து விட்டது*
*சாதனைகள் போதும்*
*வேதனைகள் வேண்டாம்*
*சாவு எங்கே என்ற மனம் முன்னிற்கிறது*
*சரித்திரம் படைத்தது போதும்*
*சாகலாம் வா என்றே*
*இயமன் அருகில் நிற்கிறான்.*

*திருமதி.பு.சங்கர்*
*முரசுமோட்டை.*

## வி(ச)தியா

நீயாக நினைத்ததாலா என்னை
விட்டு
நீயாக விலகி விட்டாய் - இன்று
நிஜமாக நம்பியதாலா நான்
நிம்மதியிழந்து தவிக்கிறேன்.

*ரி.மேரிதர்ஷினி*
*யாழ்.பல்கலைக்கழகம்*

## காதல்

மலரே.....
காதலுக்கு கண்ணில்லை
என்றாய்-ஆனால்
உன் கண்களைப்
பார்த்துப் பரிமாறிய
பாசங்கள் என் மனதில்
காதல் என்ற பூவாய் பூத்தது
அதனால்....
உன்னைப் பார்க்க
ஏங்குவது காதல்
உன்னுடன் பேச
துடிப்பது காதல்
உன் வரவை
எதிர்பார்ப்பது காதல்
என் தூக்கத்தை
கெடுப்பது காதல்
மொத்தத்தில் உன்னையே
நினைத்து என்னையே
சாகடிப்பது காதல்.

*கோ.அபி*
*வயாவை.*

## மறவேன்

சொந்தங்கள் இருந்தும்
அதைப் பிரிந்து
சொத்துக்கள் இருந்தும்
சுகம் இழந்து
சொந்தங்கள் படும்
அல்லல்கள் உணர்ந்து - எம்
சொந்த ஊர் பிடிக்கும்
சொறி நாய்க் கூட்டங்களை
தன் உயிர் பெரிதின்றி
தாய் நாட்டுக்காக
தம் உயிர்களை
தியாகங்கள் செய்து விட்ட
தன வேந்தர்களை
என் உயிர் இருக்கும் வரை
நான் மறவேன்.

*ச.ஜெகன்*
*குமுளமுனை*

## மோகம்

**வாடிய பூ**
**ஆயினும்**
**நீ சூடிய பூ எனில்**
**நித்தம் அதில்**
**வாசனை பெறுவேன்**

*காயா,*
*கொழும்பு.*

### குறுங் கவிதைகள்

எமது அன்புக்குரிய வாசகர்களே! நீங்கள் வழக்கமாக அனுப்பிவைக்கும் கவிதைகளுடன் குறுங்கவிதைகளும் உங்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. நான்கு வரிகளுக்கு மேற்படாத உங்கள் குறுங்கவிதைகளை ஒரு தபால் அட்டையில் எழுதி அனுப்பி வையுங்கள். தரமான கவிதைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க காத்திருக்கின்றது உங்கள் அபிமான சுடர் ஒளி. பிரதி வாரமும் உங்கள் குறுங்கவிதைகள் எங்கள் கவிதைப் புனல் பகுதிக்கு அழகு சேர்க்கும். உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி

குறுங் கவிதைகள்
கவிதைப் புனல்
சுடர் ஒளி,
86, ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14



**ஊ**ர்காவல் படைக்கு ஆள் எடுக்க தேர்வு நடைபெற்றது. நாட்டில் திடிரென்று ஏற்பட்ட திருட்டு, கொள்ளை காரணமாக அரசர் ஊர் காவல் படையை பலப்படுத்த விரும்பினார். அதற்குதிறமையான ஆட்களை தேர்வு செய்து கொண்டிருந்தார். நிறைய நபர்களைச், தேர்வு செய்தபின் அவர்களுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தத் தலைவர் தேர்வுதான் அன்று .நடைபெற்றது. கடைசி சுற்றில் இருவரும் தேறினர். இருவர் திறமைசாலிகளாய் இருந்ததால் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று திணறியது தேர்வுக்குழு.

"இரண்டு நாட்களாக என்ன செய்தீர்கள்...?" என்று கோட்டார் குழு தலைவர்.

"காவல் தலைமைப் பொறுப்பு எப்படியும் எனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வயிறு புடைக்கத் தின்றுவிட்டுத் தூங்கினேன்!" என்றான் முதலாமவன்.

# யாருக்கு தலைவர் பதவி!

"பொறுப்பு வந்தால் எப்படி எல்லாம் நாட்டை காவல் செய்வது ஆட்களை எப்படி பிரித்து அனுப்புவது... என்று எண்ணித் திட்டமிட்டேன். தூக்கம் போனது..." என்றான் இரண்டாமவன்.

தலைமைப் பொறுப்பை இரண்டாமவனிடம் ஒப்படைத்து விட்டு முதலாமவனை காவல் படையில் சேர்த்தனர் தேர்வுக் குழுவினர். "சரியான முடிவு. பொறுப்புடன் செயற்பட்டால் புத்திமானாக ஆகலாம்" என்று பாராட்டினார் மன்னர்.

# சிறுவர் பக்கம்

நிவாஷினி
முருகண்டி, கிளிநொச்சி



த.தீபா
மு/பாரதி வித்தியாலயம்,
மாணிக்கபுரம்





த.தனசாந்தினி
பூநகரி.



அ.ஜெயருபன்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

## வட்டத்திற்குள் சிக்கும் வார்த்தைப் புதிர்கள்

. இங்கு கலைந்த நிலையில் சில வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தி நேர் எதிரே உள்ள கட்டங்களில் நிரப்பவேண்டும். பின்னர் வட்டத்திற்குள் சிக்கியிருக்கும் எழுத்துக்களை மட்டும் எடுத்து ஒழுங்குபடுத்தினால் படிப்பினை தரக்கூடிய ஒரு பழமொழி கிடைக்கும். அது என்ன பழமொழி என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ன | ம் | ன | ஜ |
| 2. | கு | ட | ட | ங் |
| 3. | ய | ம் | ப | உ |
| 4. | கு | ரு | செ | க் |
| 5. | ர | தி | உ | ம் |
| 6. | ஆ | ம் | யி | ர |
| 7. | ஊ | ம் | க | க் |
| 8. | லு | னி | மா | |

## விடுகதை

1.மழைகாலம் வந்துவிட்டால் மகராசி பாட்டுப்பாடுவாள் அவள் யார்?

2.உரஞ்சினால் உயிரை விடுவான் அவன் யார்?

3.தலையை சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான்?

4.கல்வீட்டுத் தாத்தா மெதுவாகத்தான் நடப்பார் அவர் யார்?

ந.கீர்த்தனன்
கரவெட்டித்திடல், புளியம் பொக்கணை

## பொது அறிவு

1.உலகில் இன்னும் துணியால் செய்தித் தாள் வெளியிடும் நாடு எது?
**ஸ்பெயின்**

2.உலகின் சனத்தொகை கூடிய நாடு எது?
**சீனா**

3.தரையில் வாழும் பெரிய முலையூட்டி எது?
**யானை**

4.வருடத்தில் குறைந்த பகல் நேரம் கொண்ட நாள் எது?
**டிசம்பர் 22 ஆம் திகதி**

கி.ஜெனா
சுதந்திர புரம், உடையார் கட்டு.




ஒரு முனிவர் இருந்தார். அவர் தண்ணீர் குடிப்பதற்கு குளத்திற்கு சென்றார்.



குளக்கரையிலுள்ள மாமரத்தை நிமிர்ந்து பார்த்த போது மாம் பழம் பழுத்து தொங்கிக் கொண்டு இருப்பதை கண்டார்.




மரத்தடியில் அமர்ந்து 'மாம்பழமே என்மடியில் விழு, மாம்பழமே விழு என்று சொல்லிக் கொண்டே தவமிருந்தார்.



அப்போ[illegible] ஒரு பயணி தண்ணீர் குடிப்[illegible]கு அந்த குளத்தடிக்கு வந்தா[illegible]



மாமரத்தில் மாம்பழம் தொங்குவதைக் கண்டதும் வேட்டியை மளமள வென்று மடித்துக் கட்டிக் கொண்டு மரத்தில் ஏறினார்.



பிடுங்கிய மாம்பழத்தை புசித்துக் கொண்டே நடந்து சென்றார்.



முயற்சி திருவினையாக்கும்.
முயற்சி உடையவர்களே வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள்.



## அன்புக்குரிய தம்பி தங்கைகளே!

உங்களுக்குரிய சிறுவர் பக்கத்தில் பேனா நண்பர் பகுதி ஒன்றை விரைவில் ஆரம்பிக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடவுச்சீட்டு (Passport Size) அளவிலான உங்கள் வர்ணப் புகைப்படத்துடன், உங்கள்

- பெயர் -
- முகவரி -
- பொழுதுபோக்கு -
- கல்வி கற்கும் ஆண்டு-
- பாடசாலை -
- தொடர்பு மொழி -

**இவற்றையும் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

வாராவாரம் இவை இந்தப் பகுதியில் பிரசுரமாகும். அத்துடன் சிறுவர் பகுதியை அணி செய்ய உங்கள் ஆக்கங்களும் எதிர்பார்க்கப் படுகின்றன.

அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர்
சிறுவர் பக்கம்
சுடர் ஒளி வாரஇதழ்
85,ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை
கொழும்பு-14.

# புரிதல்...

(21 ஆ... க்கத் தொடர்ச்சி)

எல்லா துன்ப ... யல் அத்தியாயங்களையும் கரிசனை... யாடும் கனிவோடும் செவிமடுத்துக் கொண்டிருந்தான் நீப்பன்.

அவளின் தலை தடவி - விழிநீர் துடைத்து விட்டான். ஓர் நல்ல நட்பின் மகோன்னதம் அவளுக்குப் புரிந்தது. நீண்ட பயணம் ஏதாவது சாப்பிடும்படி வற்புறுத்தினான். திடீரென நல்ல கடி ஜோக்ஸ் சொல்லி அவளை இயல்புக்கு கொண்டுவர முனைந்தான். ஜேர்மன் மொழியில் தான் விரும்பி ரஸிக்கும் பாட்டுக்களை பாடிக்காட்டி சூழ்நிலையின் இறுக்கத்தை தளர்த்தினான்.

'அஞ்சலி - இதை வாசித்துப் பார் நேரம் கிடைக்கும்போது'

இளமஞ்சள் பின்னணியில் ஓர் கறுப்பு பறவை வெகு உயரத்திற்குப் பறப்பதாய் அட்டைப்படம் இருந்தது. 'போன் ட்டு ஃபிளை' (பறக்கவே பிறந்தாய்) என்றிருந்தது. வாங்கிக் கொண்டாள்.

அதன் பின்வதான எல்லா சந்திப்பிலும் - அஞ்சலியின் துக்கத்தை கிளறாதவாறு பார்த்துக்கொண்டான். அவள் கல்வி முடித்து தாயகம் மீளும்போது விமான நிலையம் வரை வந்து விழி கலங்கி அனுப்பி வைத்தான். 'ஐ வில் பி வித் யூ ஓல்வெய்ஸ்' அஞ்சலி மிக இதமான அந்த நட்பைப் பிரிந்து தாயகம் வந்த பின்னும் அடிக்கடி தொலைபேசியிலும், மின்னஞ்சலிலும் உரையாடிக் கொண்டான். மனதுக்குப் பிடித்த இதமான நட்புறவு தொடர்ந்தது.

* * *

வெகுநாட்களின் பின் நீப்பனைச் சந்திக்கும் பரவசம் அவளிடம். சரியாக பதினொரு மணிக்கு பாண்டியன் சுவையூற்று வாசலை அண்மிக்க அங்கே நீப்பன் வாகனச் சாரதியுடன் நிற்பது தெரிந்தது.

சாரதியை அனுப்பிவிட்டு வந்தான். அவளைக் கண்டு மகிழ்ச்சியானான். ஜெர்மனியப் பாணியிலான ஓர் வரவேற்பு முத்தம். வெளி இருக்கையில் எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள்.

நிறையப் பேசினார்கள். உபசரணைக்கு நின்ற அமுதன் மிக விரைவாக நேர்த்தியாக உணவு வைத்தான். சொல்ஹெய்ம் சாயலிலோடு பளிச்சென்று தமிழ் பேசிய நீப்பனைப் பார்த்து அதிசயித்தான் அமுதன். அவளும் கூடத்தான்.

''அஞ்சலி, ஐ ஹாவ் எ குட் நியூஸ்''

''என்னது''

''நான் உன் மண்ணில், நீ நேசிக்கும் மண்ணில், நீ நேசிக்கும் மக்களோடு வாழ வந்திருக்கிறேன்''

''நீ என்ன சொல்லுகிறாய் நீப்பன்'' வியப்போடு கேட்டாள்.

'யெஸ்' - வாகனத்தைச் சுட்டிக் காட்டினான் - அதோ... அந்த ஐஎன்ஜியோவின் கன்ட்றி கோடினேற்றராக வந்திருக்கிறேன் உன் மண்ணுக்கு''. ஆச்சரியமானாள்.

''சில வருடங்களுக்கு வன்னியிலே தங்கியிருப்பேன். சுனாமி நிவாரண பணிகள் அபிவிருத்திப் பணிகள் அனேகம் செய்யும் திட்டங்களோடு வந்திருக்கிறேன். எப்படி இப்போது உனக்கு சந்தோஷம் தானே சொல்லு, உண்மையில் உன் மனசைத் தொட்டு சொல்லு''

அஞ்சலியின் மனம் சட்டென பழையவைகளை நினைத்துக் கொண்டது. முதன் முறையாக சந்தித்தபோது 'சே காட்டுமிராண்டி' என்றது. ஜெர்மன் நாஸி என்றது... எல்லாமே... எல்லாமே ஞாபகத்தில் வந்தன. மென்மையாகச் சிரித்துக் கொண்டாள்.

எத்தனை நல்ல மனிதன். விசால நோக்கும் சமூக உணர்வும் கொண்ட ஒரு நல்ல மனிதன் தனக்கு நண்பனாக கிடைத்தானென்பதை மாபெரும் பலமாய் உணர்ந்தாள்.

தேசம், மொழி, இனம், மதம் எனும் வேறுபாடுகளுக்கு அப்பால்... ஓர் சமூகத்தின் தார்மீகப் போராட்டங்களை அவர்களின் துன்பியலை, அவர்களின் கருத்தியலை முழுமையாக அறிந்து... அவர்களது வாழ்வியல் அர்த்தங்களுக்கு தானும் ஏதோவொரு பங்களிப்பு செய்ய வேண்டுமென நினைக்கும் மிக உன்னதமான ஆன்மா அவனிடமிருப்பதைக் கண்டு பெருமிதப்பட்டாள். அவள் கருத்தியல்களை ஏற்றுக் கொள்ளும் புரிந்து கொள்ளும் ஆன்மா.

தான் நேசிக்கும் ஓர் பெண்ணுக்காக - அவளது சமூகத்தை பிரதேசத்தை மொழியை பண்பாட்டை நேசிக்கக் கற்றுக் கொண்ட நீப்பனை மிக உயர்வோடு நோக்கினாள்.

''உன்னைச் சுற்றி நீயே போட்டுள்ள திரைக்குள் இருந்து நீ வெளியே வர வேண்டும். இந்த உலகமானது விசாலமானது. உன் மண்ணின் மைந்தர்களின் பெண்ணியச் சிந்தனைகளும் விசாலமானவை... பதினெட்டு வயதில் நிச்சயதார்த்தம் செய்யப்பட்ட ஓர் மனிதன் இறந்து போனதோடு உன் வாழ்க்கை முடிந்து விடவில்லை. இப்பொழுதுதான் ஆரம்பம்... வாழ்க்கைக்கான சரியான மனப்பக்குவத்தோடும் புரிதலோடும் நீ இப்போது தான் சமநிலை அடைந்திருக்கிறாய்... ம் கமோன் அஞ்சலி கம் அவுட் ஃபுறம் த கிரேவ்'' கரம் பிடித்து எழுந்தான். அஞ்சலி மௌனமானாள். மனதில் ஓர் தெளிவு பிறந்தது. இவனை விட யார் என்னை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்? ஆத்மார்த்தமான இந்த நல்ல நண்பன் நிச்சயம் நல்ல துணைவனாக இருப்பான்... நீண்ட வாழ்க்கைப் பயணத்திற்கு. பரஸ்பர நட்பின் அடிப்படையிலான நேசம் வாழ்வாகப் பரிணமிக்கப் போகிறது. அவள் தெளிவோடும் நம்பிக்கையோடும் அவனோடு இணைந்து நடந்தாள். ✱

# ராசி பலன்

**இவ்வார 'ராசிபலன்' 10-04-2006 முதல் 16-04-2006வரை**

**பொ. சந்திரன்**

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பானது. தொடங்கும் காரியங்கள் நல்லமுறையில் அமையும். முதலீடுகளால் லாபம் இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு.(2,7) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. திருமண பலன் உண்டு. (3,6) உரிய புதன் 12இல் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். உறவினர் மற்றும் அயலவர்விலகி இருக்க விரும்புவர். தகவல் தொடர்புபாதிக்கலாம். 4 இல் சனி இருந்தாலும் சுக்கிரன் பார்ப்பதால் தாய்நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். 5 இற்கு உரிய சூரியன் 12 இல் இருப்பது கூடாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (9,12) உரிய குரு 7இல் இருப்பது விசேஷம். பிதாநலம், சயன சுகம் உண்டு. (10,11) உரிய சனி 4இல் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை.

**இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார். (2,5) உரிய புதன் 11இல் இருப்பது சிறப்பானது. கையில் பணம் இருக்கும். வாகன சுகம் உண்டு. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 4இற்குரிய சூரியன் 11 இல்இருப்பது தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (7,12) உரிய செவ்வாய் இரண்டில் நல்ல பலன்தரமாட்டார். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. பகைவரால் தொல்லை இருக்காது. (8,11) உரிய குரு, 6இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் இலாபம் இருக்காது. நண்பர்களுக்கு நல்லபலன் இல்லை. (9,10) உரிய சனி மூன்றில் நல்லபலன்தருவார். பிதாநலம். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 10இல் நல்ல பலன் தருவார். மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்லமுறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். இரண்டாம் வீட்டில் சனி இருப்பினும் சுக்கிரப்பார்வை இருப்பதால் வாகன சுகம் உண்டு. கையில் பணம் இருக்கும். 3இற்குரிய சூரியன் 10இல் இருப்பது விசேஷம். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (5,12) உரிய சுக்கிரன் 9 இல் இருப்பது விசேஷம். சயன சுகம் உண்டு மனதில் அமைதிஇருக்கும். பிள்ளைகள் ஆரோக்கியமாகச் செயற்படுவர். (6,11) உரிய செவ்வாய் ராசியில்இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். நண்பர்களுக்கு நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு 5இல் இருப்பது விசேஷம். திருமண வாய்ப்பு உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை சஞ்சரிப்பதால் வார மத்தியில் நல்ல பலன் செய்யும். தொடங் கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். இரண்டுக்குரிய சூரியன் 9 இல் நல்ல பலன் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் 9இல் நல்ல பலன் தரமாட்டார். சயன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய சுக்கிரன் 8இல் நல்லபலன் தருவார். தாய்நலம். நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,10) உரிய செவ்வாய் 12இல் இருப்பது தோசமானது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் அமைதி இருக்காது. பிள்ளை கள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,9) உரிய குரு 4இல் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டர்.(7,8) உரிய சனி ராசியில்இருப்பது நல்லத்ல்ல. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

இராசிநாதன் சூரியன் 8இல் நல்ல பலன் தரமாட்டார். மேலும் கேதுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் கூடாது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். பிரயாணவாய்ப்புக்கள் பாதிக்கலாம். (2,11) உரிய புதன் 8 இல் நல்லபலன்தருவார். கையில் பணம் இருக்கும். வாகனசுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்லபலன் உண்டு. (3,10) உரிய சுக்கிரன் 7இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் அமைதி குறையலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,9) உரிய செவ்வாய் 11 இல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,8) உரிய குரு 3 இல் இருப்பது கூடாது. முதலீடுகளால் லாபம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,7) உரிய சனி 12இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். எதிரிகளால் தொல்லை உண்டு.

**கன்னி: உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 7இல் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் அமைதி இருக்காது. பிரயாணவாய்ப்புப் பாதிக்கலாம். (2,9) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலன் தரமாட்டார். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய செவ்வாய் 10 இல் நல்ல பலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல்தொடர்பு பாதிக்கலாம். (4,7) உரிய குரு இரண்டில் இருப்பது விசேஷம். தாய் நலம். திருமண வாய்ப்பு உண்டு. பகை விலகும். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். (5,6) உரிய சனி 11இல் இருப்பது விஷேசம். உடல் ஆரோக்கியம் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர். பிள்ளைகள் ஆரோக்கியமாக செயற்படுவர். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும்.

**துலாம்: சித்திரை 3,4 சுவாதி, விசாகம் 1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். முதலீடுகளால் லாபம் உண்டு. (2,7) உரிய செவ்வாய் 9இல்இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். (3,6) உரிய குரு, ராசியில் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் தொல்லை தருவர். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்புபாதிக்கலாம். (4,5) உரிய சனி 10இல் நல்ல பலன்தரமாட்டார். தாய்க்குக் கூடாது. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (9,12) உரிய புதன் 6இல்நல்ல பலன் தருவார். பிதா நலம். சயன சுகம் உண்டு. 10இல் சனி இருந்தாலும் சுக்கிர பார்வை கிடைப்பதால் தொழில்துறை முன்னேறும். பொது வாழ்வில் மதிப்பு உயரும்.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 8இல் நல்லபலன் தரமாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பதால் ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார். (2,5) உரிய குரு 12இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (3,4) உரிய சனி, 9இல் இருப்பது நல்லதல்ல. தாய்க்கு நலமில்லை. தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (7,12) உரிய சுக்கிரன் 4 இல் இருப்பது நல்லது. திருமணவாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. பகை விலகும். (8,11) உரிய புதன்5 இல்இருப்பது நல்லதல்ல. முதலீடுகளால் லாபம் குறையலாம். 10 இற்கு உரிய சூரியன் 5 இல் நல்ல பலன் தரமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம்இருக்காது. பொதுவாழ்வில் மதிப்புக்குறையலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 11இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்லபலனைச்செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,3) உரிய சனி 8இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. வாகன சுகம் இருக்காது. உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (5,12) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோசமானது. சயன சுகம் இருக்காது. பிள்ளைகளின செயற்பாடு திருப்தி தராது. மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. (6,11) உரிய சுக்கிரன் 3 இல் நல்லபலன் தருவார். உடல் ஆரோக்கியம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. வேலையாட்கள் விசுவாசமாக இருப்பர் (7,10) உரிய புதன் 4 இல் நல்லபலன் தருவார். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. பொது வாழவில் பொறுப்புக்கள் அதிகமாகும். திருமண பலன் உண்டு. பகைவிலகும். 9 இற்குரிய சூரியன் 4 இல் நல்ல பலன்தரார். பிதாவுக்கு நலம் இல்லை.

**மகரம்: உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 7இல் நல்ல பலன் தரமாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு, 10இல் இருப்பது நல்லபலன் செய்யாது. சயனசுகம் குறையலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்யார். தகவல் தொடர்பு பாதிக்கலாம். (4,11) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது விசேஷம். தாய் நலம். தனிப்பட்ட வாழ்வில் அமைதி இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (5,10) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேற்றம் உண்டு. பொது வாழ்வில் மதிப்பு உயரும். பிள்ளைகளின் செயற்பாடு திருப்தி தரும். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றும். (6,9) உரிய புதன் 3இல் நல்ல பலன் தரமாட்டார். பிதாவுக்கு நலம் இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார். 7 இல் சனி இருப்பினும் சுக்கிரப் பார்வை இருப்பதால் திருமணப் பலன் உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி, 6 இல் இருப்பது விஷேசம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைத்தரும். தொடங்கும் காரியங்கள் நல்ல முறையில் அமையும். சயன சுகம்உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். கையில்பணம் இருக்கும். வாகனசுகம் உண்டு. நண்பர்களுக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய செவ்வாய் 5இல் நல்லபலன் தரமாட்டார். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்புக் குறையலாம். உறவினர் மற்றும் அயலவர் உதவி செய்யார். தகவல்தொடர்பு பாதிக்கலாம். (4,9) உரிய சுக்கிரன் இராசியில் நல்லபலன் தருவார். பெற்றோர் நலம். தனிப்பட்டவாழ்வில் அமைதி இருக்கும். (5,8) உரிய புதன் 2 இல் நல்லபலன் தரமாட்டார். முதலீடுகளால் லாபம் குறையலாம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். மனதில் நல்ல எண்ணங்கள் தோன்றாது. 7 இற்குரிய சூரியன் 2 இல் நல்ல பலன்தரமாட்டார். திருமணவாய்ப்புப் பாதிக்கலாம்.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| புதன் சூரியன் ராகு | | | செவ். |
| சுக்கிரன் | செவ்வாய் மிருகசீரிடம் செவ்வாய்<br>சுக்கிரன் சதயம் ராகு<br>புதன் உத்தரட்டாதி சனி<br>சூரியன் அசுவினி கேது<br>குரு விசாகம் குரு<br>சனி பூசம் சனி | | சனி |
| | | | |
| | | குரு | கேது |

பங்குனி 27 முதல் பங்குனி 3 வரை

சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 8இல்நல்லபலன் தரமாட்டார். இருப்பினும் தனது நட்சத்திரத்தில் இருப்பதால் ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. பொதுவாழ்வில் மதிப்புக்குறையலாம். (2,9) உரியசெவ்வாய் 4இல் இருப்பது நல்லபலன் செய்யாது. வாகனசுகம் இல்லை. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. (3,8) உரிய சுக்கிரன் 12 இல்நல்லபலன் தருவார். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். உறவினர் மற்றும் அயலவர் உதவிசெய்வர். தகவல் தொடர்பு சீராக இருக்கும். (4,7) உரிய புதன் ராசியில் நல்லபலன் தரமாட்டார். தாய்க்கு நலமில்லை. தனிப்பட்டவாழ்வில் அமைதி இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. 6 இற்குரிய உரிய சூரியன் ராசியில் நல்ல பலன் தரமாட்டார். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வேலையாட்கள் விசுவாசமாக இருக்கமாட்டார்.

# Ganesha JEWEL HOUSE



For Moderun Distinctive and Genuine Quality Jewels
123, Bazaar Street, Vavuniya. Tel. 024-2222464

Yarl Ganesha JEWEL HOUSE
124, Sea Street, Colombo-11
Tel. 011-2336252

Ganesha JEWEL HOUSE
194, Kasthuriyar Road, Jaffna.
Tel. 021-2225987



FG **Fancy Garden**

Fancy Good's Baby Care, Icing, Facial Imitation,
Flowers, Bags, Gift and Electronic Items etc..

**No. 182, Bazaar Street, Vavuniya, T.P.: 0773278030, 060 2240607**

**HERO HONDA**



Authorised Dealer
**N.S.RATNAM & BROS**
# 6, FIRST CROSS STREET, VAVUNIYA.
T.P. 024-2221237, FAX. 024-2222116


# எப்படி ட்ரெஸிங் ஸ்டைல்?



''இப்படி ட்ரெஸ்ஸிங் ஸ்டைல் ஒரேயடியாக மாறியதற்கு என்ன காரணம்' என்று கேட்டால் புன்னகை மாறாமல், ''எனது ட்ரெஸ் ரொம்ப கிளாமரா இருக்கிறது என்று விமர்சனங்கள் வந்ததே. ஆடும் போது சுறுசுறுப்பாக இருக்க அதுதான் வசதி என்று நினைத்தேன். ஆனால், அது சிலரது உணர்வுகளை புண்படுத்துவதாக சொன்னார்கள். அதனால், இப்போது ஷோர்ட்ஸ், டி- சேர்ட் அணிந்து ஆடுகிறேன். இது யாரையும் பாதிக்கவில்லையா?'' - இப்படி சர்வீஸ் அடிக்கும் வேகத்தில் பதில் வருகிறது சானியாவிடம் இருந்து.





பாட்டுக்களோ பரவசம், இனிமை தரும் சந்தோசம், அதுதான் கொண்டாட்டம்!
பிரதி திங்கள் முதல் வெள்ளிவரை காலை 10 மணியிலிருந்து மதியம் 1 மணிவரை

சக்தி FM
யாழ்ப்பாணம்
கண்டி 91.5 FM

கொழும்பு
கிழக்கு மாகாணம்
105.1 FM

சக்தி FM இல் கேளுங்கள்

**கொண்டாட்டம் நிகழ்ச்சிக்கு அனுசரணை 'சுடர் ஒளி'**

மலையகம்
நாடுமுழுவதும்
103.8 FM

சக்தி FM
ஊவா மாகாணம்
கிழக்கு மாகாணம் 91.2 FM

சக்தி FM - தமிழ் மொழியின் சக்தி | சக்தி FM - தமிழ் மொழியின் சக்தி | சக்தி FM - தமிழ் மொழியின் சக்தி

**EXPOAIR** *your friend in the skies...*

**எக்ஸ்போ எயார்** வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com